Registered as Newspaper

# உதயன் சஞ்சீவி

சுடர் : 36 கதிர் : 031 | ஞாயிற்றுக்கிழமை | மார்கழி 12 ஆம் நாள் 27 டிசெம்பர் 2020 | வள்ளுவர் ஆண்டு 2051

பக்கங்கள்: 16+24 விலை : ரூ.40

செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

## குளத்தில் மாயமானவர் சடலமாக நேற்று மீட்பு

கிளிநொச்சி, டிசெ. 27

கல்மடுக்குளத்தில் மூழ்கி நேற்று முன்தினம் காணாமற்போயிருந்த இளம் குடும்பத் தலைவ 15

## சண்டிலிப்பாயில் 4பேருக்கு தொற்று

*மீன் வியாபாரியும் உள்ளடக்கம்*

யாழ்ப்பாணம், டிசெ. 27

மருதனார்மடம் கொத்தணியில் மேலும் 4 பேருக்கு கொரோனாத் தொற்று கண்டறியப்பட்டுள்ளது என்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப் 15

'உதயன்' மீதான வழக்கு

## மிகப் பெரிய விளைவுகளை அரசு சந்திக்கப் போகின்றது!

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா எச்சரிக்கை



கொழும்பு, டிசெ. 27

'உதயன்' உள்ளிட்ட ஊடகங்களை அடக்க வழக்குத் தாக்கல் செய்ய அரசு முனைந்துள்ளது. இது எந்த வகையில் நியாயம்? இலங்கை ஜனநாயக நாடு என்றால் பத்தி 15

# வடக்கில் முதலாவது கொரோனா உயிரிழப்பு

வவுனியாவைச் சேர்ந்த 60வயது பெண்ணே சாவு

எவ்வாறு தொற்று ஏற்பட்டது என்பது கண்டறியப்படவில்லை

வவுனியா, டிசெம்பர் 27

வவுனியா மருத்துவமனையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவிலிருந்து அனுராதபுரத்துக்கு நேற்றுமுன்தினம் சிகிச்சைக்காக மாற்றப்பட்ட 60 வயது பெண் நேற்று மாலை உயிரிழந்துள்ளார். 15



## ஆழிப்பேரலை: உணர்வுபூர்வ நினைவேந்தல்

யாழ்ப்பாணம், டிசெ. 27

ஆழிப்பேரலை நினைவு நிகழ்வுகள் வடக்கின் பல இடங்களில் நேற்று உணர்வுபூர்வமாக நடைபெற்றன. தற்போதைய கொரோனாத் தொற்று நிலைமை காரணமாக மட்டுப்படுத்தப்பட்டவர்களுடன், சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி இந்த நினைவு நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன. 15



## உதயனுக்கு எதிரான வழக்கு தமிழினத்துக்கு எதிரான வன்மம்

ராஜபக்ச அரசை கடுமையாக சாடுகின்றார் சி.வி.கே.சிவஞானம் 04



## உதயன் மீது வழக்கு தொடர சட்ட அடிப்படை ஏதுமில்லை

மூத்த சட்டத்தரணி ஸ்ரீகாந்தா தெரிவிப்பு

விரிவு – 06 இல்




## எழுமாற்றுப் பரிசோதனையில் புதுக்குடியிருப்பில் தொற்றாளர்

முல்லைத்தீவு, டிசெ. 27

புதுக்குடியிருப்பு பொதுச் சந்தைக்கு தம்புள்ளவிலிருந்து மரக்கறிகளைக் கொண்டு வந்து விற்பனை செய்யும் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. சந்தை வியாபாரிகளுக்கு மேற்கொண்ட எழுமாற்று சோதனையிலேயே அவருக்கு தொற்றுக் கண்டறியப்பட்டுள்ளது.

37 வயதான ஒருவரே தொற்றாள 15



## முன்பகையால் விபரீதம் பட்டப் பகலில் கத்திக்குத்து இளைஞன் துடிதுடித்து சாவு

கிளிநொச்சி. டிசெ. 27

கிளிநொச்சி. முழங்காவில் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் இளைஞர் ஒருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு கொடூரமாக கொலை செய்யப்பட்டுள்ளார் என்று முழங்காவில் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் செ.பிரதீபன் 15

## ஜனாஸா எரிப்புக்கு எதிராக வவுனியாவிலும் போராட்டம்!

வவுனியா, டிசெ. 27

முஸ்லிம் மக்களின் ஜனாஸா எரிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து வெள்ளைத் துணி கட்டும் கவனவீர்ப்புப் போராட்டம் வவுனியாவில் நேற்று நடத்தப்பட்டது. இந்தப் போராட்டம் வவுனியா மன்னார் பிரதான வீதியில் 15

## கொரோனாத் தொற்றுக்குள்ளான அரசியல் கைதிகளின் விவரங்கள்

யாழ்ப்பாணம், டிசெ. 27

கொரோனாத் தொற்றுக்கு உட்பட்ட நோய்த் தாக்கங்களால் பாதிக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் 14 பேரின் விவரங்களை குரலற்றவர்களின் குரல் அமைப்பு வெளியிட்டுள்ளது. இது 15

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணின் கரட் எதுவாயினும் அதிகூடிய முற்பணம்
அதிகபட்ச முற்பணத் தொகை
ரூ.68,000/-
0.79% மாதாந்த வட்டி வீதம் மட்டுமே
• அதிகபட்ச இரகசியத் தன்மை
• சிநேகபூர்வமான உடனடி சேவை
• சிறந்த பாதுகாப்பு
இச்சலுகை வரையறுக்கப்பட்ட காலத்திற்கு மட்டுமே
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள் அல்லது,
செலான் தங்கக் கடன்
011 200 88 88
செலான் வங்கி
Brand Finance Rating "A +" Fitch Rating: "A" (lka)

# எதிர்பார்த்ததைப்போல ஊடக அடக்குமுறைகள்

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி சிவமோகன் கண்டனம்



**வவுனியா, டிசெம்பர் 27**

**ராஜபக்ச சகோதரர்களின் ஆட்சியில் ஊடக அடக்குமுறைகள் மீண்டும் தலைதூக்க ஆரம்பித்துள்ளன என்பதை உதயன் பத்திரிகை மீது தற்போது தொடுக்கப்பட்டுள்ள வழக்கு வெளிப்படுத்துகின்றது என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான கலாநிதி சிவமோகன் தெரிவித்துள்ளார்.**

உதயன்மீது வெளிப்படுத்தப்பட்டுள்ள ஊடக அடக்குமுறை தொடர்பில் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ள தாவது:

இலங்கையின் ஊடகத்துறை வரலாற்றில் உதயன் பத்திரிகைக்கு என தமிழ் மக்கள் மத்தியில் ஒரு தனி இடம் உண்டு. வடக்கில் தமிழர்களுக்காக, தமிழர்களின் பிரதேசத்தில் தனித்துவமாக இயங்கிவரும் ஓர் ஊடக நிறுவனமாகவே இப்பத்திரிகை பார்க்கப்படுகிறது. யுத்தம் இடம்பெற்ற காலங்களிலும் சரி, இன்றும் சரி தமிழ் மக்கள் இலங்கை அரசினால் தொடர்ச்சியாக எதிர்கொள்ளும் பிரச்சினை களை உள்நாட்டிலும் சர்வதேச ரீதியாகவும் எடுத்துச்சென்றதில் உதயன் பத்திரிகையின் பங்கு அளப்பெரியது.

எனினும் கடந்த காலங்களில் இப்பத்திரிகையின் மீது தாக்குதல்கள் இடம்பெற்று ஊடகப் பணியாளர்கள் ஆயுதமேந்திய இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்ட துரதிஸ்ட வசமான சம்பவங்களும் பதிவாகியுள்ளன. தமிழர்களுக்காக் குரல் கொடுக்கும் ஊடக நிறுவனங்களை அடக்கியொடுக்கும் செயற்பாடுகளை மாறிமாறி ஆட்சிக்கு வரும் அரசுகள் தொடர்ச்சியாக மேற்கொண்டே வருகின்றன. முன்னாள் ஜனாதிபதியும், தற்போதைய பிரதமருமான மஹிந்த ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில்தான் இலங்கையில் 30க்கும் மேற்பட்ட ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்பட்டதுடன், ஊடக நிறுவனங்கள் பெரும் அச்சுறுத்தலுக்கு மத்தியில் இயங்கி வந்ததும், புல ஊடகவியலாளர்கள் அரசியல் தஞ்சம்கோரி இன்றும் நாட்டுக்கு வரமுடியாமல் வெளிநாடுகளில் வாழ்ந்தும் வருகின்றனர்.

இதன் தொடர்ச்சியாகவே மீண்டும் ஆட்சிப்பீடம் ஏறியிருக்கும் மஹிந்த ராஜபக்ச சகோதரர்களின் அரசில் ஊடக அடக்குமுறைகள் தலை தூக்க ஆரம்பித்துள்ளன என்பதன் வெளிப்பாடாகத்தான் 'உதயன் பத்திரிகை விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் படத்தை வெளியிட்டதாக' வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருப்பதை பார்க்கவேண்டியுள்ளது. அடக்குமுறைகளின் வெளிப்பாடே இந்த நாட்டில் பெரும் அழிவுகளை ஏற்படுத்தியது என்பதை மீண்டும் நினைவுபடுத்தி வைக்க விரும்புகின்றேன் - என்றுள்ளது. (ம-110)

## மந்திகை ஆதார மருத்துவமனை அத்தியட்சகரில் மாற்றமில்லை!

சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 27

மந்திகை மருத்துவமனையின் பதில் அத்தியட்சகராக மருத்துவர் கமலநாதன் தொடர்வார் என்றும், தற்போதைய நிலைமையில் மாற்றம் எதுவும் ஏற்படாது என்றும் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

மந்திகை மருத்துவமனையின் அத்தியட்சகராக மீண்டும் மருத்துவர் த.குகதாசன் நியமிக்கப்படுவார் என்று வெளியான தகவல் தொடர்பாகக் கருத்துக் கேட்டபோதே, பணிப்பாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மந்திகை பருத்தித்துறை ஆதார மருத்துவமனையின் பணிப்பாளராகக் கடமையாற்றிய மருத்துவர் த.குகதாசன் மீது, நிர்வாக முறைகேடுக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

அதையடுத்து, அவர் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்துக்கு மாற்றப்பட்டதுடன், மருத்துவமனையின் பதில் அத்தியட்சகராக கமலநாதன் நியமிக்கப்பட்டார். மருத்துவர் த.குகதாசன் மீண்டும் மருத்துவனை அத்தியட்சராக நியமிக்கப்படுவார் என்று தகவல்கள் வெளியாகியிருந்தன. அது தொடர்பாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் கேட்டபோது, விசாரணைகளை மேற்கொண்டகுழு, மருத்துவர் த.குகதாசனை மீண்டும் அங்கு அத்தியட்சராக நியமிப்பது பொருத்தமற்றது என்று தெரிவித்துள்ளது. இந்த முடிவு எமக்கு இரு மாதங்களுக்கு முன்னரே தெரியப்படுத்தப்பட்டிருந்தது. அதனால் அவரை அங்கு மீண்டும் நியமிக்கும் சாத்தியம் இல்லை. தற்போது அங்குள்ள நடைமுறைகளில் மாற்றம் எதுவும் இருக்காது - என்றார். (எ-26)

## கஞ்சாவுடன் இளைஞன் கைதானார்

யாழ்ப்பாணம், டிசெ. 27

வட்டுக்கோட்டை பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய பண்ணாகம் பகுதியில் 18 கிராம் கஞ்சாவுடன் இளைஞன் ஒருவர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டார். கைதுசெய்யப்பட்டவர் மல்லாகம் பகுதியைச் சேர்ந்தவர். கைதுசெய்யப்பட்ட நபரை மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ம-25)

## கிராம செயலகம் விசமிகளால் சேதம்

தெல்லிப்பழை, டிசெ. 27

கட்டுவன் மேற்கிலுள்ள கிராம செயலகம் விசமிகளால் சேதமாக்கப்பட்டுள்ளது.

வலிகாமம் வடக்கு பிரதேசத்தில் கட்டுவன் மேற்கு ஜே/139 கிராம உத்தியோகத்தர் பிரிவில், தனியார் ஒருவர் அன்பளிப்பாக வழங்கிய காணியில் 2017ஆம் ஆண்டு அரச நிதியுதவியுடன் கிராம செயலகம் கட்டப்பட்டது. இந்தக் கட்டடத்தில் கிராம உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், குடும்ப நல மாது ஆகியோரின் அலுவலகங்கள் இயங்கின.

கிராம உத்தியோகத்தர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதை அடுத்து, கடந்த 14ஆம் திகதியிலிருந்து கிராம செயலகம் மூடப்பட்டுள்ளது. இந்த நிலையில் கடந்த வியாழக் கிழமை இரவு கட்டடத்தின் கண்ணாடிகள் அடித்து நொருக்கப்பட்டுள்ளன. சம்பவம் தொடர்பில் தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது. (ம-க-115)

## அரசின் பாரபட்சமான கொள்கையை நீக்குவோம்

தமிழர் பேரவை அழைப்பு

கொழும்பு, டிசெ. 27

கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழக்கும் அனைவரினது சடலங்களையும் கட்டாயமாகத் தகனம் செய்யவேண்டும் என்ற இலங்கையின் கொள்கை ஏற்றுக் கொள்ள முடியாது. பகுத்தறிவற்றதும், பாரபட்சமானதுமான இந்தக் கொள்கை மீண்டும் நீக்கப்படுவதற்கு, அனைத்து சமூகங்களினதும் அரசியல் தலைவர்கள் முன்வர வேண்டும் என்று உலகத் தமிழர் பேரவை அழைப்பு விடுத்துள்ளது.

இது தொடர்பான அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தொற்றால் உயிரிழப்போரின் சடலங்களைக் கட்டாயமாகத் தகனம் செய்வதற்கு அரசால் மேற்கொள்ளப்பட்டிருக்கும் தீர்மானம், முஸ்லிம் மற்றும் கத்தோலிக்க சமூகத்தினரின் மத்தியில் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. அந்தச் சமூகத்தினரின் மதரீதியான நம்பிக்கையை மீறிச்செயற்படுவதற்கு நிர்ப்பந்திப்பதென்பது மிகவும் மோசமானதும், மனிதாபிமானமற்றதுமான செயலாகும்.

அரசால் முன்வைக்கப்பட்டிருக்கும் கொள்கை எவ்வித விஞ்ஞான ரீதியான அடிப்படைகளும் அற்ற தொன்றாகும். பாரபட்சம் மற்றும் சகிப்புத்தன்மையின்மை ஆகியவற்றின் படுகுழியில் இலங்கை வீழ்வதைத் தடுக்கவேண்டுமாயின், கொள்கையின் அடிப்படையில் இயங்கும் குடிமக்கள் தமது இன மற்றும் அரசியல் நிலைப்பாடுகளைப் புறந்தள்ளி, தமது பங்களிப்பை வழங்க வேண்டியது அவசியமாகும் - என்றுள்ளது. (ம-இ)

## மலசலகூடத்தில் இருந்து சடலமாக ஒருவர் மீட்பு!!

யாழ்ப்பாணம், டிசெ. 27

யாழ்ப்பாணம் கோவில் வீதியில் வசிக்கும் நபரொருவர் அவரின் வீட்டு மலசலகூடத்தில் இருந்து நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட்டார். 48 வயதுடைய சிமியோன் பியோமர் என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

குறித்த நபர் நேற்றுமுன்தினம் இரவு உணவு அருந்திவிட்டு உறங்கச் சென்றுள்ளார். காலையில் அவர் மலசலகூடத்தில் சடலமாகக் காணப்பட்டார் என்று மனைவி தெரிவித்துள்ளார். சடலம் இன்று உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளது. இறப்பு விசாரணைகளை நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-26)

## சிறுவர்களுக்கு வாகனம் வழங்கினால் உரிமையாளருக்கே சட்ட நடவடிக்கை

கொழும்பு.டிசெ.27

சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் உரிய வயதெல்லையைப் பூர்த்தி செய்யாதவர்களுக்கு, வாகனங்களைச் செலுத்துவதற்கு அனுமதி வழங்கும் நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பிரதி பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

குற்றம் நிரூபிக்கப்படும் நபர்களுக்கு சிறைத்தண்டனை அல்லது 25 ஆயிரம் ரூபா வரை தண்டம் அறவிடுவதற்கும் அனுமதி உள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். மோட்டார் வாகனங்கள் தொடர்பில் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வரும் சோதனை நடவடிக்கைகளுக்கமைய, 18 வயதுக்கும் குறைந்த சிறுவர்களுக்கும், சாரதி அனுமதிப்பத்திரம் இல்லாத நபர்களுக்கும் அவர்களது பெற்றோர்கள், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் என பலர் தங்களது வாகனங்களைச் செலுத்துவதற்கு கொடுத்துள்ளனர். ஆனால் இது குற்றச் செயற்பாடாகும்.

அதனால் வாகனங்களைச் செலுத்தும் நபர்களுக்கு எதிராகவும், அவர்களுக்கான வாகனங்களை வழங்கி வரும் வாகன உரிமையாளர்களுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-இ)


அபான்ஸ் எலைட் காட்சியறைகள் தினமும் இரவு 9.00 மணிவரை திறந்திருக்கும்.
120 HOUR SALE
இவ்வருடத்தின் இறுதி ஷொப்பிங் அனுபவத்தை பெற்றிடுங்கள்.
உலகின் மிகச்சிறந்த உற்பத்திகளை பிரம்மாண்ட விலைக்கழிவில் மற்றும் வட்டியற்ற இலகுதவணை கொடுப்பனவு முறையில் பெற்றிடுங்கள். உங்கள் அருகிலுள்ள அபான்ஸ் காட்சியறைக்கு இப்போதே வாருங்கள்.
40 மாதங்கள் வரை வட்டியற்ற தவணைகள்
2020 டிசம்பர் 27 - 31 வரை
LG ஸ்மார்ட் இன்வர்டர் குளிர்சாதனப் பெட்டி
ரு. 10,000 தள்ளுபடி
GL-B205ALLB
ரு. 57,990
விசேட விலை ரு. 47,990
LG ஸ்மார்ட் இன்வர்டர் குளிர்சாதனப் பெட்டி
ரு. 15,000 தள்ளுபடி
GL-K272SLBB
ரு. 89,990
விசேட விலை ரு. 74,990
LG ஸ்மார்ட் இன்வர்டர் குளிர்சாதனப் பெட்டி
ரு. 16,000 தள்ளுபடி
GL-K272SPTL
ரு. 94,990
விசேட விலை ரு. 78,990
LG லீனியர் இன்வர்டர் குளிர்சாதனப் பெட்டி
ரு. 15,000 தள்ளுபடி
GL-M292SLLN
ரு. 99,990
விசேட விலை ரு. 84,990
Abans பூரண தானியங்கி சலவை இயந்திரம்
7.5Kg
ரு. 4,000 தள்ளுபடி
AWM-75FA
ரு. 47,990
விசேட விலை ரு. 43,990
LG பூரண தானியங்கி சலவை இயந்திரம்
12Kg
ரு. 18,000 தள்ளுபடி
T2312VSAM
ரு. 94,990
விசேட விலை ரு. 76,990
LG பூரண தானியங்கி சலவை இயந்திரம்
8Kg
ரு. 13,000 தள்ளுபடி
T2108VSPM
ரு. 79,990
விசேட விலை ரு. 66,990
Abans இலெக்ட்ரிக் ஃப்ரீ ஸ்டான்டிங் குக்கர்
2 வருட இலவச உத்தரவாதம்
ரு. 10,000 தள்ளுபடி
F5S40G2-W
ரு. 52,990
விசேட விலை ரு. 42,990
Haier FIXED SPEED வளிச்சீராக்கி
ரு. 20,000 வரை தள்ளுபடி
ரு. 99,990 இலிருந்து
விசேட விலை ரு. 79,990 இலிருந்து
Haier INVERTER வளிச்சீராக்கி
ரு. 18,000 வரை தள்ளுபடி
ரு. 109,990 இலிருந்து
விசேட விலை ரு. 91,990 இலிருந்து
ToyoStar by ABANS ஸ்டான்ட் பேன்
ரு. 1,000 தள்ளுபடி
FS40-B8
ரு. 5,990
விசேட விலை ரு. 4,990
oppo F17 ஸ்மார்ட் போன்
ரு. 4,000 தள்ளுபடி
OPPO F17
ரு. 54,990
விசேட விலை ரு. 50,990
TRCSL Approved
ஒரு வருட உத்தரவாதம்
vivo V15 ஸ்மார்ட் போன்
ரு. 10,000 தள்ளுபடி
VIVO V15
ரு. 59,990
விசேட விலை ரு. 49,990
Abans பிளெண்டர் மற்றும் கிரைண்டர்
ரு. 900 தள்ளுபடி
BL468AB
ரு. 5,190
விசேட விலை ரு. 4,290
Abans Hi-Fi சிஸ்டம்
ரு. 8,000 தள்ளுபடி
PX1501
ரு. 25,999
விசேட விலை ரு. 17,999
Abans Hi-Fi சிஸ்டம்
ரு. 6,000 தள்ளுபடி
VX3781
ரு. 16,999
விசேட விலை ரு. 10,999
Abans Hi-Fi சிஸ்டம்
ரு. 9,000 தள்ளுபடி
VX5002
ரு. 31,999
விசேட விலை ரு. 22,999
LG Hi-Fi சிஸ்டம்
ரு. 10,000 தள்ளுபடி
CL65D
ரு. 49,999
விசேட விலை ரு. 39,999
Sampath Cards
Nations Trust Bank
HNB
HSBC
NDB bank
BOC
Standard Chartered
DFCC BANK
SEYLAN
UNION BANK
Cargills Bank
011 5 999 000
Buy Abans.com
நாடளாவிய அபான்ஸ் மற்றும் அபான்ஸ் எலைட் காட்சியறைகளில் பெற்றிடுங்கள்
Abans

உதயன்
newuthayan.com

# ஆழிப்பேரலையால் உயிரிழந்த உறவுகளுக்கு அஞ்சலி


















**யாழ்ப்பாணத்தில்...**

உயிரிழந்த உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தும் "தேசிய பாதுகாப்பு தினம்" யாழ்ப்பாண மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நேற்று சனிக்கிழமை. விளக்கேற்றி நினைவுகூரப்பட்டது.

நிகழ்வில் சர்வமதத் தலைவர்கள், மாவட்டச் செயலக அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-20)

### சுனாமி பேபி வீட்டில் அஞ்சலி



சுனாமியில் காணாமல் போய் கண்டுபிடிக்கப்பட்ட 'சுனாமி பேபி' அபிலாஷ் தனது வீட்டு நினைவுத் தூபியில் நேற்று அஞ்சலி செலுத்தினார்.

சுனாமி தாக்கத்தால், கிழக்கு மாகாணத்தில் காணாமல் போய் பின்னர் மருத்துவமனையில் கண்டுபிடிக்கப்பட்டார் அபிலாஷ் என்ற ஆண் குழந்தை. அந்தக் குழுந்தைக்கு 9 தாய்மார்கள் உரிமை கோரியிருந்தனர். இந்த நிலையில் மட்டக்களப்பு குருக்கள்மட த்தைச் சேர்ந்த ஜெயராசா தம்பதியினரது குழந்தை என்று உறுதிப்படுத்தப்பட்டு அவர்களிடம் குந்தை ஒப்படைக்கப்பட்டிருந்தது. (க-இ)



**மன்னாரில்...**

மன்னார் மாவட்டச் செயலகத்திலும் தேசிய பாதுகாப்பு தின நிகழ்வு நேற்று நடைபெற்றது. நிகழ்வில் சர்வ மதத் தலைவர்கள், திணைக்கள அதிகாரிகள், மீனவ அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். உயிர் நீத்த உறவுகளுக்கு தீபம் ஏற்றி.மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. (ஐ-56)



பொலிகண்டி கிழக்கு கடற்றொழிலாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் ஆழிப்பேரலையில் காவு கொள்ளப்பட்டவர்களின் 16 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று நடைபெற்றது. பொலிகண்டி கடற்றொழிலாளர் சங்கத்தின் தலைவர் பால மகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் உயிர் நீத்த உறவுகளுக்கு கடலில் மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. (ஐ-25)

## 1 ஆம் பக்கத் தொடர்ச்சி

### உதயனுக்கு...

யாழ்ப்பாணம், டிசெ. 27

அரச பயங்கரவாதத்தை எதிர்கொண்டு உயிரிழப்புக்களையும் சொத்திழப்புக்களையும் சந்தித்து அதனை எதிர்கொண்டு நிற்கும் தமிழ் ஊடகம் உதயன். தமிழ் மக்களின் உயிர்நாடியாக திகழும் அச்சு ஊடகம் உதயன். அதற்கெதிரான நீதிமன்ற நடவடிக்கை என்பது ஒட்டு மொத்த தமிழ் இனத்தின் இருப்புக்கெதிரான வன்மம் கொண்ட நடவடிக்கையாகவே பார்க்க வேண்டியுள்ளது. அரசு இதனை மீளாய்வு செய்து நிறுத்திக்கொள்ளவேண்டும். இவ்வாறு வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரனின் புகைப்படத்தை பிரசுரித்தமைக்காக உதயன் பத்திரிகைக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என கிடைத்த ஊடகச் செய்தியை நான் முதலில் நம்பவில்லை. ஆனால் இப்பொழுது அவ்வாறான செய்தி சரியானது எனத் தெரிகிறது.

இலங்கை அரசின் நடவடிக்கை ஆச்சரியமானதும் அதிர்ச்சியளிப்பதுமானதாகவே காணப்படுகின்றது. இலங்கையில் தமிழ், சிங்கள மற்றும் ஆங்கில மொழிகளில் வெளிவரும் சகல அச்சு ஊடகங்களிலும், இலத்திரனியல் ஊடகங்களிலும் 1986 ஆம் ஆண்டிலிருந்தே விடுதலைப் புலிகள் தொடர்பான செய்திகளும், தலைவர் பிரபாகரனது புகைப்படங்களும் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

1985ஆம் ஆண்டு இறுதியில் ஆரம்பித்த உதயன் பத்திரிகையிலும் அவ்வாறான செய்திகளும், புகைப்படங்களும் இதுவரையில் வெளியிடப்பட்டுள்ளன.

அப்படியிருக்க உதயன் பத்திரிகையை மட்டும் தனிமைப்படுத்தி சட்ட நடவடிக்கை எடுப்பது என்பது விளங்கிக் கொள்ள முடியாததும், ஏற்றுக் கொள்ள முடியாததுமாகும்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தை அழித்துவிட்டோம் என்று 2009ஆம் ஆண்டு மே மாதத்திலேயே, பத்து வருடங்களுக்கு முன்னரேயே பிரகடனப்படுத்திய அரசு இப்பொழுது நீதிமன்ற நடவடிக்கைக்கு செல்வதென்பது அப்பட்டமான அரசியல் பழிவாங்கலும், ஊடக அடக்குமுறையின் பறைசாற்றலும் ஜனநாயகப் படுகொலையுமாகும்.

வரலாற்றை வரலாறாக பதிவு செய்வதே ஊடகங்களின் பொறுப்பும் கடமையுமாகும். கடந்த முப்பது வருடங்கள் வரை இந்த நாட்டில் இடம்பெற்ற தமிழ் மக்களின் விடுதலைப் போராட்ட வரலாற்றையும் அதற்கு தலைமை தாங்கிய தலைவர் பிரபாகரனின் நிழற்படத்தையும் பிரசுரிப்பது வரலாற்று பதிவேயன்றி எந்த விதத்திலும் பயங்கரவாத செயற்பாடு அல்ல.

இவற்றை மறைப்பதோ மறுப்பதோ வரலாற்றை மறைப்பதற்குச் சமனாகும். அப்படியாயின் இந்த நாட்டில் இடம்பெற்ற போர் வரலாற்றையே மறைப்பதாக அர்த்தப்படும்.

உதயன் பத்திரிகையைப் பொறுத்தவரையில் அது பல்வேறு விதமான அரச பயங்கரவாதத்தை எதிர்கொண்டு உயிர் இழப்புக்களையும், சொத்து இழப்புக்களையும் சந்தித்த ஊடகம், அவற்றை எதிர்கொண்டும் நிலைத்து நிற்கும் தமிழ் ஊடகமாகும்.

தமிழ் மக்களின் உயிர்நாடியாக திகழும் அச்சு ஊடகம் உதயன் பத்திரிகையாகும். தமிழ் மக்களின் வாழ்வுரிமை, மொழி உரிமை, கல்வி, கலாசார உரிமைகளுக்காக அயராது அச்சமின்றி ஆரம்பம் முதல் இன்று வரை குரல் கொடுத்து வரும் ஒரு ஊடகம்.

அதற்கெதிரான நீதிமன்ற நடவடிக்கை என்பது ஒட்டு மொத்த தமிழ் இனத்தின் இருப்புக்கெதிரான வன்மம் கொண்ட நடவடிக்கையாகவே பார்க்க வேண்டியுள்ளது.

எனவே இந்த நடவடிக்கையை அரசு மீளாய்வு செய்து நிறுத்திக்கொள்ள வேண்டும், என்றுள்ளது. (ஒ.5)


Unilever
கொரோனா வைரஸை
99.9% வரை அழிக்க உதவிடும்
ஒரேயொரு சலவை உற்பத்தி
Surf excel
இது கிருமிகளை அகற்றுவதோடு மட்டுமல்லாமல் கொரோனா வைரஸை 99.9% அழித்திட உதவிடும்
புதிய
KILLS 99.9% GERMS*
REMOVES TOUGH STAINS**
Surf excel
HYGIENIC CLEAN
with HYGIENE BOOSTERS
FOR USE IN BOTH
1Kg
ரூ.315/-

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## ஊடக சுதந்திரம் மக்களின் உரிமையே!

வெகுஜன ஊடகங்கள் மீதான அரசின் சந்தேகப் பார்வை அதிகரித்து வருவதை அதன் அண்மைக்கால நடவடிக்கைகள் மூலம் தெளிவாக உணரக்கூடியதாக உள்ளது. பொதுமக்கள் நலன்சார் விடயங்களில் ஆழமான அக்கறையையும், நேர்மையான அணுகுமுறைகளையும், ஜனநாயகக் கோட்பாடுகளில் நியாயம் தவறாத நம்பிக்கையையும் கொண்ட எந்தவொரு அரசும் வெகுஜன தொடர்பு ஊடகமும் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் குறித்து அச்சமோ பீதியோ கொள்ளவேண்டிய அவசியம் இல்லை.

மேலாதிக்க சிந்தனையும் அதிகார வெறியும் ஓர் அரசின் அரசியல் நகர்வுகளுக்கு அச்சாணிகளாக இருக்குமாயின் அந்த அரசு எதிர்கொள்ள நேரிடும் கருத்தியல் ரீதியான ஆரோக்கியமான விமர்சனங்களை எதிர்கொள்ள வலுவற்றதாக மாறிவிடும். இத்தகைய நிலையில் ஊடகங்கள் மீதும், ஊடகவியலாளர்கள் மீதும் எரிச்சலையும் பகைமையையும் வெளிப்படுத்துவது என்பது அரசின் கையாலாகாத்தனத்தின் வெளிப்பாடாகவே அமையும்.

அப்படி நிகழுமாயின் அது, வெகுஜன மற்றும் சமூக ஊடகங்கள், கருத்தியல் ரீதியாக மக்களை, அரசுக்கு எதிராக சிந்திக்கவும் செயற்படவும் வைத்துவிடும். இதனாலேயே ஜனநாயக விரோதப்போக்கில் செயற்படும் அரசுகள் அச்சமும் கோபமும் கொள்வதும் அதன் வெளிப்பாடாக ஊடக சுதந்திரம் மீதும் ஊடகவியலாளர்கள் மீதும் சட்டரீதியாக வேறு வகையிலான அடக்குமுறைகள் மூலமும் அழுத்தங்களை மேற்கொள்வது அதிகாரத்தரப்பின் இயலாமையின் இயல்பே.

இலங்கை அரசும் இன்று பல்வேறு வகையிலும் கடும் விமர்சனங்களை எதிர்கொள்ளும் சூழல் உருவாகியுள்ளது, இதனால் மக்களின் மனோவியலை தீவிரமாக வெளிப்படுத்த முயலும் ஊடகங்களின் தார்மீகச் செயற்பாடுகள் மீது அரசு தன் அதிகார வலுவின் மூலம் மறை கருத்தை பிரயோகிக்கத் தொடங்கிவிட்டதோ என்ற அச்சம் அனைத்து மட்டங்களாலும் உணரப்பட்டுள்ளது.

இது அதிகாரப்பீடத்தில் கோலோச்சுவோருக்கு சாதாகமான சூழலெதையும் உருவாக்கப் போவதில்லை. ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும் என்பது பழமொழி. ஊடகங்களுடன் பகைக்கின் உலகுடன் பகைப்பர் என்பது ஊடகமொழி.

புதிய அரசு அதீத பலத்துடன், அதிகார வலுவுடன் ஆட்சிப்பீடம் ஏறிய அன்றே தன்னை மிஞ்ச இனி ஏதுமில்லை என்ற இறுமாப்புக் குரலை வெளிப்படுத்தத் தொடங்கியது. பௌத்த அரசு, சிங்கள தேசம் என்ற அகங்காரப் பிரகடனம் ஆட்சிப்பீடத்தின் அனைத்துத் தரப்பினராலும் பகிரங்கமாகவே முன்வைக்கப்பட்டது. இந்த நாட்டின் சிறுபான்மை இனத்தவரின் இறைமை, உரிமை குறித்த தனித்துவத்தின் எதிர்காலம் அச்சுறுத்தலுக்கு உள்ளாகத் தொடங்கியது.

19ஆவது திருத்தச்சட்ட நீக்கம், 13ஆவது திருத்தச்சட்டத்துக்கான எதிர்ப்பு போன்ற அனைத்தும் அரசின் மீதான அதிருப்திக்குக் காரணமாகின. அடுத்துவந்த ஒவ்வொரு நிகழ்வும், அரசு மேற்கொண்ட ஒவ்வொரு நகர்வும் ஜனநாயகத்தின் பெயரால் ஒரு புதிய சர்வாதிகாரத்தனத்தை நோக்கியதாகவே அமைந்தது. பின்னர் 'கொரோனா'வின் உலகளவிலான முற்றுகை அரசின் ஒவ்வொரு செயற்பாட்டையும் நியாயப்படுத்தும் காரணியாகிற்று. அரசின் வசமிருக்கும் எல்லைமீறிய அதிகாரம் எல்லோர் மீதும் எல்லை கடந்த மேலாதிக்கத்தை மேற்கொள்ள உந்தியது. அரசுக்கெதிராக குரல்கொடுக்கும் ஊடகங்களின் குரல் வளையில் கைவைக்கத் தொடங்கியதன் விளைவாக, இன்று சகல மட்டங்களிலும் விமர்சனத்துக்கும் கண்டனத்துக்கும் அரசு உள்ளாகும் நிலையை ஏற்படுத்தியுள்ளது.

அரச சர்வாதிகாரம் ஊடக சுதந்திரத்தை அடக்க முயலும்போதுதான் மக்கள் சிந்திக்கத் தொடங்குவார்கள். அதன் விளைவு எப்படி அமையும் என்பதை வரலாறு எல்லாக்காலங்களிலும் நிரூபித்தே வந்துள்ளது. மீளவும் ஒருமுறை நிரூபிக்கும்.

# உதயன் மீது வழக்கு தொடர சட்ட அடிப்படை ஏதுமில்லை

## மூத்த சட்டத்தரணி ஸ்ரீகாந்தா தெரிவிப்பு



யாழ்ப்பாணம், டிசெ. 27

**தலைவர் பிரபாகரனின் பிறந்த நாளன்று உதயனில் பிரசுரிக்கப்பட்ட செய்தி தொடர்பில் வழக்குத் தொடர்வதற்கு சட்ட அடிப்படை எதுவும் கிடையாது என்று தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவரும், மூத்த சட்டத்தரணியுமான ந.ஸ்ரீகாந்தா தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது;

உதயன் செய்திப் பத்திரிகைக்கு எதிராக யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்றில் பொலிஸ் தரப்பால் வழக்கு தொடரப்பட்டிருப்பது ஆச்சரியம் அளிக்கின்றது. நடந்து முடிந்த போரில் கொல்லப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரனின் பிறந்த நாளன்று பிரசுரிக்கப்பட்ட செய்தி தொடர்பில் வழக்குத் தொடர்வதற்கு சட்ட அடிப்படை எதுவும் கிடையாது என்று திட்டவட்டமாகக் கூற முடியும்.

ஜனநாயக ஆட்சி அமைப்பின் நான்கு தூண்களில் ஒன்றாக மதிக்கப்படும் ஊடகத்துறையின் சுதந்திரமான செயற்பாட்டுக்கு எதிரான சட்ட நடவடிக்கை என்பது, அரசியல் மற்றும் கட்சி வேறுபாடுகளுக்கு அப்பால், ஜனநாயகத்தை நேசிக்கும் சகலராலும் தீவிரமாக எதிர்க்கப்பட்டே ஆக வேண்டும். அரசின் சார்பில் நீதிமன்றங்களில் தொடுக்கப்படும் சகல வழக்கு நடவடிக்கைகள் தொடர்பிலும் தீர்மானம் மேற்கொள்ளும் உச்ச அதிகாரம் கொண்டவராக சட்டமா அதிபர் விளங்குகின்றார்.

எனவே, ஊடக சுதந்திரம் சம்பந்தப்பட்டிருக்கும் இந்த வழக்கின் சட்டபூர்வ தன்மை தொடர்பில் பரிசீலிக்கவும், முடிவு எடுக்கவும் சட்டமா அதிபர் முன்வர வேண்டும். இன்று உதயன் என்றால் நாளை வேறு எந்த ஊடகம்? என்ற கேள்வி இயல்பாகவே எழுகின்றது என்பதை, தமிழ் ஊடகங்கள் மாத்திரமன்றி, சிங்கள மற்றும் ஆங்கில ஊடகங்களும் சிந்தித்துப் பார்க்க முன்வர வேண்டும் என்பதையும் இச்சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது என்றுள்ளது.

(ப)

## மனைவியைக் காணவில்லை ; கணவன் பொலிஸில் புகார்!

வவுனியா,டிசெ. 27

உறவினர் வீட்டுக்குச் சென்று வருகிறேன் எனத் தெரிவித்து, வீட்டிலிருந்து புறப்பட்டுச் சென்ற மனைவியைக் காணவில்லை என அவரது கணவனால் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. வவுனியா,வெளிக்குளம் பகுதியைச் சேர்ந்த 22 வயதுடைய ராஜா வினிதா என்ற தனது மனைவியையே காணவில்லை என்று அவர் தெரிவித்துள்ளார். உறவினர் வீடுகளில் சென்று பார்த்தபோது அவர் அங்கு வரவில்லை என அவர்கள் தெரிவித்தனர். அவரது தொலைபேசியும் இயங்கவில்லை என்று கணவர் தெரிவித்தார்.

இது தொடர்பான விசாரணைகளை வவுனியா பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ப-110)

## வீதி விபத்தில் ஒருவர் காயம்

யாழ்ப்பாணம்,டிசெ.27

சைக்கிளும் மோட்டார் சைக்கிளும், மோதியதில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

இந்த விபத்து கைதடி, நுணாவில் வைரவர் கோவில் பகுதியில் நேற்று இடம்பெற்றது.

சைக்கிளில் பயணித்த கைதடி கிழக்கைச் சேர்ந்த 45 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு காயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். (ஐ-9)

## அனில் ஜாசிங்கவை செயலராக நியமிக்குக

கொழும்பு, டிசெ. 27

சுகாதார அமைச்சின் செயலாளராக சுகாதார சேவைகளின் முன்னாள் பணிப்பாளர் அனில் ஜாசிங்கவை நியமிக்குமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

பொது மருத்துவ தாதிகள் சங்கத்தின் தலைவர் முருத்தெட்டுவ ஆனந்த தேரர் இதனைத் தெரிவித்தார். (ப)

# மக்கள் குடிமனைகளுக்குள் புகுந்தவை திட்டமிட்டு இறக்கப்பட்ட யானைகளா?

## சிறிதரன் எம்.பி கேள்வி

கிளிநொச்சி, டிசெ. 27

கால்களில் சங்கிலிகள் கட்டப்பட்ட யானைகள் குடிமனைக்குள் வந்துள்ளன என்றால் அவை திட்டமிட்டு மக்கள் குடிமனைக்குள் இறக்கப்பட்டுள்ளனவா என்று நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்தார்.

கிளிநொச்சி, பூநகரி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட தெளிகரை செம்மன்குன்றுப் பகுதியில் நேற்றுமுன்தினம் காட்டு யானைகள் மக்களின் குடியிருப்புகளில் புகுந்து, வாழ்வாதாரப் பயிரான தென்னை மரங்களைச் சேதப்படுத்தின. இந்தச் சம்பவம் தொடர்பில் நேரில் சென்று ஆராய்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் அது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது;

சங்குப்பிட்டி பாலத்தின் ஊடாக பூநகரியால் மன்னார் செல்லும் வீதியில் அமைந்துள்ள செம்மன்குன்று கிராமத்தில் காட்டு யானைகள் புகுந்து பயன்தரும் தென்னை மரங்களை அழித்துள்ளன. குறித்த பகுதிக்கு 7 யானைகள் வந்தன எனவும், அவ்வாறு வந்த யானைகளில் இரண்டு யானைகளின் கால்களில் சங்கிலிகள் கட்டப்பட்டு இருந்தன என்றும் மக்கள் குறிப்பிடுகின்றனர். அப்படி என்றால் குறிப்பிட்ட பகுதிகளுக்கு வளர்ப்பு யானைகள் கொண்டு வந்து விடப்பட்டன என்றே மக்கள் அஞ்சுகிறார்கள். குறித்த பகுதியில் கிட்டத்தட்ட பயன் தரும் 70க்கு மேற்பட்ட தென்னை மரங்கள் சேதம் அடைந்துள்ளன. சேத விவரங்கள் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவித்து அவர்களுக்கான உதவிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். (ப-6)

# 45 அடி பலாவில் ஏறிய இளைஞன் மயக்கம்!

பதுளை, டிசெ.27

45 அடி வரை உயரம் கொண்ட பலா மரமொன்றில் ஏறிய இளைஞன் ஒருவன் மயக்கமடைந்த சம்பவம் பதுளை தெல்பெத்த தோட்டத்தில் இடம்பெற்றுள்ளது. 27 வயதுடைய அந்த இளைஞன் மரத்தில் கிளைகளை வெட்டிக் கொண்டிருந்தபோது மயக்கமடைந்துள்ளார். இதை அவதானித்த பிரதேசவாசிகள் சிலர் கயிற்றின் உதவியுடன் அவரை கீழே இறக்கி நோயாளர் காவு வண்டியில் பதுளை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துள்ளனர் எனத் தெரியவருகிறது. (வ-இ)

# புதிய நிர்வாக குழு நியமிப்பு

கொடிகாமம், டிசெ.27

கொடிகாமம் போக்கட்டி அ.த.க பாடசாலையின் பாடசாலை அபிவிருத்திக் குழு பொதுக் கூட்டமும், புதிய நிர்வாக குழுத் தெரிவும் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

புதிய தலைவராக தி.அபராஜிதன், உபதலைவராக சீ.நந்தகுமார், செயலாளராக ம.மயூரன், பொருளாளராக திருமதி க.விநாயகரூபன், உறுப்பினர்களாக திருமதி தி.மதிவண்ணன், ஜெ.ஜெயந்தன், ச.ஜெயராசா, செல்வி த.தமிழினி ஆகியோர் நியமிக்கப்பட்டனர். (ரி5-159)



# ஜோசப் பரராஜசிங்கத்தின் 15ஆம் ஆண்டு நினைவுநாள்

யாழ்ப்பாணம், டிசெ.27

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கத்தின் 15ஆம் ஆண்டு நினைவுகூரல் நிகழ்வு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ். அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. கட்சியின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் தலைமையில் இந் நிகழ்வு இடம்பெற்றது.

இதில், கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உருவப்படத்துக்கு மலர்மாலை அணிவித்தார். தொடர்ந்து கட்சியின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், ஆதரவாளர்கள், பொதுமக்கள் என நிகழ்வில் கலந்துகொண்டிருந்தவர்கள் மலரஞ்சலி செலுத்தினர். (வ-இ)

# 1,00,000 பேர் சுயதனிமை

கொழும்பு, டிசெ.27

கொவிட்-19 வைரஸ் பரவல் காரணமாக ஒரு இலட்சம் பேர் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது: தனிமைப்படுத்தப்பட்டுள்ள மக்கள் அந்தப் பிரதேசங்களிலிருந்து வேறு பகுதிகளுக்குச் செல்ல முடியாது. அதேபோன்று ஏனைய பகுதிகளில் வசிப்பவர்களும் இப் பிரதேசங்களுக்குள் பிரவேசிக்க அனுமதி வழங்கப்படமாட்டாது.

எனினும் இந்தப் பகுதிகளில் காணப்படும் பிரதான வீதிகளில் வாகனங்கள் செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆனால் தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் பயணிகளை ஏற்றுவதற்கோ, இறக்குவதற்கோ அனுமதி வழங்கப்படவில்லை.

சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்ட அனைவரும் தனிமைப்படுத்தல் சட்டவிதிகளை முறையாக பின்பற்றும்போதே, இவர்களை தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிப்பது தொடர்பில் தீர்மானம் எடுக்கப்படும்- என்றார். (ற-இ)

UNLIMITED
YouTube
HD quality up to 25GB*
மாதாந்தம் ரூ.249+வரிகள்
4G LTE
அழையுங்கள் #170# > Content Based Plans > YouTube
*YouTube HD streaming வசதி மொபிடெல் 4G வலையமைப்பில் 25GB வரை செயற்படுத்தப்படும்.
25 GB முற்றாக பயன்படுத்தப்பட்ட பின் 3G/4G வலையமைப்பில் YouTube 360p தரத்தில் அன்லிமிட்டெட் ஆக இருக்கும்.
YouTube வர்த்தக விளம்பரங்களுக்கு டேட்டா கட்டணம் அறவிடப்படும்.
நிபந்தனைகளுக்கு உட்பட்டது.
TRC/M/Promo/20/01
Sri Lanka Telecom Mobitel

அனைத்து முழுநேர பாடநெறிகளும் இலவசம்
பாடநெறி தொடர்பாக பயிலுனர்களை இணைத்துக்கொள்ளல் ஆரம்பம்
VTA
ශ්‍රී ලංකා වෘත්තීය පුහුණු අධිකාරිය
இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை
Vocational Training Authority of Sri Lanka



பாடநெறி ஆரம்பம் 2021 ஜனவரி 04
BE PRO. VTA
☎ : 011-7270270
011-7277888
: 011-2502342
: cgjp@vtasl.gov.lk
f : VTA

| மாவட்ட தொழிற் பயிற்சி நிலையங்கள் | Course Numbers | மாவட்ட தொழிற் பயிற்சி நிலையங்கள் | Course Numbers | மாவட்ட தொழிற் பயிற்சி நிலையங்கள் | Course Numbers | மாவட்ட தொழிற் பயிற்சி நிலையங்கள் | Course Numbers |
|---|---|---|---|---|---|---|---|
| வவுனியா 024-2221617 077-1906071 | 5,9,12,27,32,34, 44,45,52, 58,66,67,76,82,83,84,100 | மட்டக்களப்பு NVTI 065-2240159 071-1211656 | 11,12,16,32,44,45,54,67,72, 73,83,84,88,98 | யாழ்ப்பாணம் 021-2227949 071-0318737 | 5,11,12,14,25,32,34,39,40, 42,43,44,45,46,49,52,58,67 ,76,82,83,84 | அம்பாறை (தமிழ்) 067-2251155 071-1211501 | 5,7,11,12,13,14,16,27,32,34,39,40, 41,42,43,49, 52,54,57,58,62,66,67, 76,82,83,84,88,93,101 |
| முல்லைத்தீவு 021-2290097 071-3956503 | 5,12,14,27,32,34,37,44,45 ,49,58,82,83,84 | மன்னார் 071-0318750 | 14,32,44,45,52,58,84 | திருகோணமலை 026-2234517 071-8920003 | 9,12,14,32,34, 36,39,40, 41,43,44,45,49,52,58,76,82, 83,84 | HOTLINE : 011- 7270270 , 011- 7277888 | |
| கிளிநொச்சி 021-2285686 077-7352865 | 5,9,12,14,27,32, 34,44,45, 47,52,58,67,76,82,84,85, 83,89,102 | மட்டக்களப்பு 065-2240159 071-1211656 | 5,14,32,34,44,45,49,52,58,60, 76,82,84,83 | நுவரெலியா 052-2223216 071-0318745 | 5,7,12,14,16,25,32, 34,39, 40,41,43,44,45,46,49,52,58 ,62,66, | | |

திறன்கள் அபிவிருத்தி தொழிற்கல்வி,ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சு
இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை

பணிப்பாளர்
தொழில் வழிகாட்டல் ,ஊக்குவிப்பு பிரிவு
இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை
இல:354/2 நிபுணதா பியச,
நாராஹேன்பிட
கொழும்பு 05

## மரண அறிவித்தல்



பிறப்பு 08 . 01 . 1940

இறப்பு 25 . 12 . 2020

### திருமதி தங்கேஸ்வரி சிவஞானசுந்தரம்

(ஓய்வுபெற்ற ஆசிரியை - ஊரெழு கணேஷா வித்தியாசாலை)

புன்னாலைக் கட்டுவன் வடக்கைப் பிறப்பிடமாகவும் ஏழாலை கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கேஸ்வரி சிவஞானசுந்தரம் (ஓய்வுபெற்ற ஆசிரியை - ஊரெழு கணேஷா வித்தியாசாலை) 25.12.2020 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் புன்னாலைக்கட்டுவன் வடக்கைச்சேர்ந்த காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், ஏழாலை கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான தம்பு - சவுந்தரம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சிவஞானசுந்தரத்தின் (இளைப் பாறிய உப தபாலதிபர் - ஏழாலை அத்தியடி முருகமூர்த்தி ஆலய அறங்காவலர்) அன்பு மனைவியும், பர்வதவர்த்தினி (வதனி - சுவிஸ்), சிறீமுருகதாஸ் (ஜேர்மனி), காலஞ்சென்றவர்களான தேவவர்த்தினி, சிவவர்த்தினி மற்றும் அருள்முருகன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயும், ராஜாகிருஸ்ணன் (சுவிஸ்), நிருபா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியும், திரு. சண்முகராசா, சிவஞானவதியின் (ஓய்வுபெற்ற தபால் அதிபர்-கொழும்பு) அன்பு மைத்துனியும், விதூரி (சுவிஸ்), றுஷானி (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் (அம்மம்மா) ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.12.2020) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணி யளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஏழாலை காடாகடம்பை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்லை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு :
வீடு - 009 421 205 9399
வதனி - 004 161 271 3408
அருள்முருகன் - 004 178 402 8518
சிவஞானவதி சண்முகராசா - 009 411 236 2406

தகவல்
பிள்ளைகள்

## மரண அறிவித்தல்



தோற்றம் 07 . 06 . 1950

மறைவு 25 . 12 . 2020

### Dr. குமாரசாமி பாலச்சந்திரன்

யாழ்ப்பாணம் நயினாதீவை பிறப்பிடமாகவும் கொழும்பு மற்றும் யாழ்ப் பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட Dr. குமாரசாமி பாலச்சந்திரன் கடந்த (25.12.2020) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசாமி (நயினாதீவு) கனகம்மா (நயினா தீவு) தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான முத்தையா (புங்குடுதீவு) நாகம்மா (புங்குடுதீவு) தம்பதியரின் பாசமிகு மருமகனும், தண்மதி (UK) அவர்களின் ஆருயிர் கணவரும், காலஞ்சென்ற கிஷோர்குமார் (UK) மற்றும் Dr. கௌசுகி (UK) துசித்ரா (Bio Medical - Canada) கிரிசாந்தி (Dental hygienist, UK) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஹர்ஷா (UK) ஜரோன் (Canada) பிரவித் (UK) ஆகியோரின் அன்பு மாமனாரும், அபிஷை (UK) கிஷோர் (UK) ஆகியோரின் ஆசைப் பேரனும், காலஞ்சென்ற நந்தகுமார் (ஆசிரியர் Royal College, கொழும்பு) சிவலோகநாதன் (Engineer Germany) உமாமகேஷ்வரன் (கொழும்பு) காலஞ்சென்ற அம்பிகைபாலன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், யோகலஷ்மி (கொழும்பு) சாந்தி (Germany) ஆகியோரின் அன்பு மைத்துனரும், சங்கீதா, ஹேமா, ரோகான், நிசாந், மரி ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (26.12.2020) சனிக்கிழமை மதியம் 12.00 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு: தண்மதி (மனைவி)
+447944161939

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



தோற்றம் 16 . 07 . 1930

மறைவு 26 . 12 . 2020

### திருமதி பொன்னுத்துரை தனலட்சுமி

யாழ்ப்பாணம் கச்சேரியடியை பிறப்பிடமாகவும் ஓட்டுமடம், அளவெட்டியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பொன்னுத்துரை தனலட்சுமி அவர்கள் நேற்று (26.12.2020) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு பொன்னுத்துரை அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கந்தையா இராசமணி தம்பதியரின் ஏக புதல்வியும், பிறேமளா (கனடா), சாரதா, ஜனகன் (பிராந்திய உள்ளூராட்சி திணைக்களம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், தங்கராசா (கனடா), சொர்ணவடிவேல் (கதிர்காமசிங்கம் அன் சன்ஸ்), லதா (வட மாகாண விவசாய திணைக்களம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், தர்சிகா (கனடா), தேவிகா (கனடா), மயூரன் (நியூசிலாந்து) குருதரன் (நில அளவை திணைக்களம், வவுனியா) கிரிதரன், பிரதாபன் (பொறியியலாளர்), தாருகா, சார்லினிதேவிசிறி (நியூசிலாந்து) பிந்துஜா (நில அளவை திணைக் களம், வவுனியா) நிலக்ஷா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், விருணயனின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.12.2020) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் அளவெட்டி இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அளவெட்டி மேற்கு,
அளவெட்டி.

தகவல்:
குடும்பத்தினர்.
0777 110 585
077 7111 407

## மரண அறிவித்தல்



பிறப்பு 16 . 09 . 1964

இறப்பு 24 . 12 . 2020

### கணேசரட்ணம் புஸ்பராணி

மாவிட்டபுரத்தை பிறப்பிடமாகவும் அத்தியடியை வசிப்பிடமாகவும் தற்போது ஜேர்மனியில் கொம்பேட்டில் வசிக்கும் கணேசரட்ணம் புஸ்பராணி 24.12.2020 வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான ராசா - செல்லாச்சி தம்பதியரின் அன்பு மருமகளும், கணேசரட்ணத்தின் அன்பு மனைவியும், கண்ணணின் அன்பு தாயும், காலஞ்சென்ற பாலசந்திரேஸ்வரி மற்றும் பாலசறோஜினிதேவி கருணாநிதி, ரவிசந்திரன், வேலமுருகன், பாலசந்திரன் ஆகியோரின் அருமைச் சகோதரியும், யோகரட்ணம் இன்பரட்ணம் யோகேஸேஸ்வரி தவரட்ணம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப் படும்.

30/20, பிள்ளையார் குறுக்கு வீதி,
அத்தியடி,
யாழ்ப்பாணம்.

தகவல்
கணவர் - கணேசரட்ணம்
(ஜேர்மனி)
சகோதரர்கள்
004 915 733 980 344

# சுற்றுலாப் பயணிகளுக்கு இறுக்கமான நடைமுறை!

**கொழும்பு, டிசெ.27**

**இந்த வாரத்தில் ஆரம்பிக்க எதிர்பார்க்கப்பட்டுள்ள பரீட்சார்த்த சுற்றுலா திட்டத்தின் கீழ், இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் பின்பற்ற வேண்டிய அறிவுறுத்தல்களை சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ளது.**

சுற்றுலாப் பயணிகள் கொரோனாக் காப்புறுதியை பெற்றிருக்க வேண்டியது கட்டாயமானதாகும். விடுதியை பதிவு செய்யும்போது அல்லது விமான ரிக்கெற்றை கொள்வனவு செய்யும்போது காப்புறுதியைப் பெற வேண்டும்.

விமான நிலையங்களுக்கு புறப்படுவதற்கு 96 மணித்தியாலங்களுக்கு முன்னர் பி.சி.ஆர் பரிசோதனை மேற் கொண்டிருக்க வேண்டும். பயணிகள் நாட்டுக்கு வந்து 2 வார கால பகுதிக்குள் 3 பி.சி.ஆர் பரிசோதனைகளை ஒரே மருத்துவ கூடத்தில் மேற்கொள்ள வேண்டும்.

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையால் அங்கீகரிக்கப்பட்டுள்ள விடுதிகளில் மாத்திரம் தங்க வேண்டும். முதல் 2 வாரங்களில் சுதந்திரமாக நடமாட தடை விதிக்கப்படும் அதேவேளை, விடுதியிலிருந்து வெளியேறவும் ஒரு வாரத்துக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. (வ-இ)



# ஜனாஸா எரிப்புக்கு எதிராக போராட்டம்!

கொழும்பு, டிசெ.27

கொவிட்-19 தொற்றுக்குள்ளாகி உயிரிழந்த முஸ்லிம்களின் ஜனாஸாக்களை பலவந்தமாக எரிப்பதைக் கண்டித்து, அமைதியான எதிர்ப்புப் போராட்டம் சம்மாந்துறை நகரில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்டது. ஸ்ரீலங்கா தௌஹீத் ஜமாத் சம்மாந்துறைக் கிளையின் தலைவர் எம்.ஜப்பார் தலைமையில் இந்தப் போராட்டம் நடைபெற்றது.

"இலங்கை அரசே கொரோனாவால் மரணிக்கும் முஸ்லிம்களின் ஜனாஸாக்களை அடக்கம் செய்யும் உரிமையை உறுதிப்படுத்து", "உலக சுகாதார ஸ்தாபனம் வழங்கிய அறி வுறுத்தல்களை அமுல்படுத்து", "முஸ்லிம் மக்களின் உரிமை யைக் கொடு எரிப்பதை நிறுத்து", "ஜனாஸாக்களை பல வந்தமாக எரிக்காதே", நீதி இல்லை எரிப்பதை கேட்க நாதியில்லை","ஏமாற்றாதே! ஏமாற்றாதே"! "புதைக்க வழி இல்லை என்று ஏமாற்றாதே"! போன்ற வாசகங்கள் அடங்கிய பதாதைகளை ஏந்தியவாறு மக்கள் அமைதியான முறையில் எதிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர். (ற-இ)

# மத்திய மாகாணத்துள் பிரவேசிக்க வேண்டாம்

## ஆளுநர் கோரிக்கை

கொழும்பு, டிசெ.27

கொரோனா அச்சுறுத்தலால் மத்திய மாகாணத்துக்கு பிற மாகாணங்களைச் சேர்ந்தவர்கள் பிரவேசிப்பதை தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்று மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே பொதுமக்களை வலியுறுத்தியுள்ளார்.

எதிர்வரும் ஜனவரி மாதம் 31 ஆம் திகதி வரை சிவனொளிபாதமலை பருவகால யாத்திரையில் பங்கேற்பதைத் தவிர்க்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (வ-இ)

# இலங்கைக்கு சிறந்தது ஒக்ஸ்போர்ட் தடுப்பூசி!

இலங்கையில் கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களுக்கு அஸ்ட்ரா ஜெனெகா ஒக்ஸ்போர்ட் தடுப்பூசியை செலுத்துவது மிகச் சிறந்தது என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.


உலக சுகாதார அமைப்பின் ஒப்புதல் மற்றும் கொள்முதல் ஒப்பந்தங்களின் அடிப்படையிலேயே இந்தத் தடுப்பூசியைப் பயன்படுத்துவது குறித்த இறுதி முடிவு எட்டப்படும் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.

தடுப்பூசி தேவையில் 20 சதவீதத்தை வழங்க உலக சுகாதார அமைப்பு ஒப்புக் கொண்டுள்ள நிலையில், அவர்கள் எந்தத் தடுப்பூசிக்கு அனுமதி அளிப்பார்கள் என்பது தொடர்பாகவும் அவதானம் செலுத்த வேண்டும் என்று அசேல குணவர்தன மேலும் கூறியுள்ளார். (ற-இ)



## 15ம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு
24
•
06
•
1946



உதிர்வு
12
•
01
•
2006

### அமரர். சின்னத்தம்பி நடராசா

(ஓய்வுபெற்ற சிறைச்சாலை உத்தியோகத்தர்)

**ஓடி மறைந்தது பதினைந்து ஆண்டுகள்**
**ஆனாலும் உங்கள் நினைவு**
**எங்கள் உயிர் உள்ளவரை**
**அழியாது.....**
**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

**குடும்பத்தினர்.** **கச்சாய் வீதி, கொடிகாமம்.**

## 31ஆம் நாள் நினைவு கூரலும் நன்றி நவிலலும்

மண்ணில்
14
•
01
•
1949



விண்ணில்
28
•
12
•
2020

### அமரர் திகழ்மதி சற்குணநாதன்

(வவாக்கா)

கடந்த 28.11.2020 காலமான அன்னாரின் 31 ஆம் நாளை நினைவுகூர்ந்து பிரார்த்திப்பதோடு அன்னாரின் மரணச்செய்தி அறிந்து நேரில் வந்தும், தொலைபேசி மற்றும் சமூக வலைத்தளங்கள் மூலமாகவும் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும், மலர்வளையம், மலர்மாலைகள் சாத்தியோருக்கும், அஞ்சலி பிரசுரங்கள் வழங்கியோருக்கும் மற்றும் சகல உதவிகளையும் வழங்கிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றி அறிதலை தெரியப்படுத்துகிறோம்.


அத்தோடு தற்போது நிகழும் **கொவிட் - 19 கொரோனா** சூழ்நிலை மற்றும் சுகாதார நடை முறைகள் காரணமாக அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தங்கள் யாவரையும் அழைக்க இயலாமைக்கு மிகவும் வருந்துகின்றோம்.

**வேம்பன் வீதி,**
**உரும்பிராய்.**

**குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்

பிறப்பு
•
05
•
03
•
1937



மறைவு
•
26
•
12
•
2020

### திரு.கணபதிப்பிள்ளை வன்னியசிங்கம்

வண்ணார்பண்ணை யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும், மாளிகைத்திடல் திருக்கேதீஸ்வரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை வன்னியசிங்கம் அவர்கள் 26-12-2020 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலம்சென்ற கணபதிப்பிள்ளை செல்லம்மாவின் அன்பு மகனும், சோமசுந்தரம் பிள்ளையின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான தனபாலசிங்கம், பாலசிங்கம், நவரெத்தினசிங்கம், பரமேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், லலிதகலா, சசிகலா, விஜிதகலா, அமரர் ரமண குமார், அமரர் விஜயகுமார், சுகிர்தகலா, ரதிகலா, ரமேஸ்குமார் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.12.2020) ஞாயிற்றுக் கிழமை காலை 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று நல்ல தண்ணிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:**
077 358 5570

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

பிறப்பு
25
•
12
•
1972



இறப்பு
25
•
12
•
2020

### அஞ்ஜலா ஜெயகரன்

(எழுது வினைஞர்)

சண்டிலிப்பாய் மேற்கு சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அஞ்ஜலா ஜெயகரன் 25.12.2020 வெள்ளிக்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.12.2020) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சண்டிலிப்பாய் மேற்கு,
சண்டிலிப்பாய்.

தகவல்
குடும்பத்தினர்
077 741 2348

## Flexo அச்சக இயந்திரம் இயக்குநர் வேலைவாய்ப்பு

**தேவையான தகைமை:**
ஆகக்குறைந்தது 5 வருட அனுபவம். ஆர்வமுள்ளவர்கள் விண்ணப்பிக்கவும்.
Flexo Printing இயந்திர இயக்குநருக்கான வேலைவாய்ப்பு

தொடர்பு: Three star Packaging Solutions
No.50c, Kelaniganga Mill Road,
Mattakuliya, Colombo - 15
011 523 0052 (8.30am to 5.30 pm)

## விற்பனைக்கு

யாழ் பிறவுண் வீதியில் 6 பரப்பு, 4 பரப்பு, 3 பரப்பு காணியும். யாழ். நாவலர் வீதியில் 8 பரப்பு காணியும், 4 பரப்பு காணியும், 3 பரப்பு காணியும் வீடும். யாழ் வைமன் வீதியில் 3 பரப்பு காணியும், 2 1/2 பரப்பு காணியும், 1 1/2 பரப்பு காணியும். யாழ் நல்லூர் கோவிலுக்கு அண்மையில் 5 பரப்பு காணியும். கோவில் வீதியில் 5 பரப்பு காணியும், 4 பரப்பு காணியும். யாழ் ஆஸ்பத்திரி வீதியில் 6 பரப்பு காணியும், 4 பரப்பு காணியும், 22 பரப்பு காணியும். யாழ் கந்தர்மடம் சந்திக்கு அண்மையில் 3 பரப்பு காணியும். யாழ் பரமேஸ்வராச் சந்திக்கு அண்மையில் பலாலி வீதியில் 6 பரப்புக்காணியும் 3 பரப்புக் காணியும். யாழ் கொக்குவில் 2 1/2 பரப்பில் அமைந்த வீடும் காணியும். யாழ் ஆஸ்பத்திரி வீதியில் ஆஸ்பத்திரிக்கு முன்பாக 3 கடைகளும். யாழ் மாநகர சபைக்கு முன்பாக ஓர் தனிக் கடையும். யாழ் பொஸ்கோ பாடசாலைக்கு அண்மையில் 8 பரப்பு காணியும் வீடும். யாழ் கோட்ஸிற்கு அண்மையில் 6 பரப்பு காணியும். யாழ் சுண்டுக்குளி பாடசாலைக்கு அண்மையில் 1 1/2 பரப்பு காணியும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:0777 232 535

## யாழ்ப்பாணத்தில் அக்குபஞ்சர் மருத்துவம்

உங்களுக்குத் தெரியுமா?
அக்குபஞ்சர், மற்றும் பிராணிக் கீலிங், ரேய்கி, வர்ம சிகிச்சை போன்ற எளிமையான, பாதுகாப்பான இயற்கை மருத்துவ சிகிச்சைகளின் உதவியுடன் பக்க விளைவுகள் இல்லாமல் கடுமையான மற்றும் நாள்பட்ட நோய்களிலிருந்து முற்றிலும் விடுபட முடியும் என்று!

அக்குபஞ்சர் மூலம் பக்கவாதம், ஆஸ்துமா, ஒற்றைத் தலைவலி, மூட்டுவலி, நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம், மூக்கடைப்பு, சைனஸ் பிரச்சினைகள், கால் கை வலிப்பு (Fit), மாதவிடாய் பிரச்சினைகள், இடுப்புவலி, வீக்கம், விரிசுருள் சிரை நோய் (Varicose Veins), தோள்பட்டை இறுக்கம், உடல் பருமன் (obesity), வயிற்றோட்டம், மலச் சிக்கல், ஒவ்வாமை (Allergy), மனஅழுத்தம், இருதய நோய், குழந்தையின்மை, ஆண்மைக்குறைபாடு, கை, கால் விறைப்பு, வலிகள் போன்ற நோய்களிலிருந்தும் மற்றும் ஏனைய நோய்களில் இருந்தும் பூரண குணமடைய முடியும்.

Acupuncture, Acupressure, Auriculotherapy, Energy Medicine,Yoga Therapy, Varma Therapy, Moxibustion Therapy, Hijama (Cupping), Reiki, Electric Therapy, Massage Therapy.

Dr. K. Dinesh Bernard
(GDA- New Zealand, DMM- Malaysia, DAC-Sri Lanka)



Surabe -Power Acupuncture
கோப்பாய் வீதி, உரும்பிராய். 0740138906, 0766428906

## யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரியின் மணிவிழா நாயகனை பாராட்டி வாழ்த்துகிறோம்



திரு.கிருஷ்ணபிள்ளை சண்முகராசா
(ஆசிரியர்)

**சேவை விவரம்**
1. கிளி / கிளிநொச்சி இந்துக் கல்லூரி (20.01.1989 - 31.12.1993)
2. கிளி / பளை மத்திய கல்லூரி (01.01.1994 - 09.02.1997)
3. யா / யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி (10.02.1997 - 16.10.2017)
4. யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரி (17.10.2017 - 26.12.2020)

மாணவர் சமூகத்துக்கு சிறப்பாக சேவையாற்றி இன்றுடன் ஓய்வு பெற்றுச் செல்லும் எமது ஆசிரியரை உளமார வாழ்த்துவதோடு அவரது ஓய்வுகாலம் சிறப்படைய எல்லாம் வல்ல மருதடியானை வேண்டி நிற்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி.

## மணிவிழா வாழ்த்து



கிருஷ்ணபிள்ளை சண்முகராஜா
(B.Com-Dip.in Edu)
(ஆசிரியர்- மானிப்பாய் இந்துக்கல்லூரி)
27.12.2020

சண் எங்கள் நண்பன் - சகபாடி
பல்கலையில் நட்பாடி
நயம் படப் பேசி
நல்லோனாய் வாழும் நாயகன்
கம்பர் மலை வீரன்
கராத்தேயிலும் வல்லவன்
கணீர் குரல் பாடகன்.

அறுபதாவது அகவை நாளில்
அன்பு நண்பர்கள் வாழ்த்துகின்றோம்
1982 - 1986 பிரிவு யாழ். பல்கலை நண்பர்கள்

மா.திருலிங்கம் | கு. மகிழ்ச்சிகரன்
சி.ஞானசேகரம் | க.நித்தியானந்தன்
செ.விந்தன் | க.விமலநாதன்

## மாபிள் வேலை

உங்கள் வீடுகளிற்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்து தரப்படும்.
ஒரு சதுர அடி- 45 ரூபாய்
தொடர்புகளுக்கு- 0773341281

## விற்பனைக்கு

Toyota டொல்பின் வான் இல.PB-, டீசல், Convert, 5 கதவு, Manuval, Dual, A/C, A/J Seat, திருநெல்வேலி-யாழ்ப்பாணம்.
**விலை 49 லட்சம்.** தொடர்புகளுக்கு:
0777 684 263, 076 324 2599

## உடனடி வேலைவாய்ப்பு

கொழும்பில் உடனடி வேலைவாய்ப்புகள்
- மேசன்
- மேசன் உதவியாளர்
- கட்டட கூலியாட்கள்

தொடர்பு: திரு. க. சபேசன்
0779999020
Kingsquary (pvt) ltd.
2nd lane, Balavinayagar Road,
Thavasikulam,Vavuniya.


# வாக்குறுதிகளை அரசு நிச்சயம் நிறைவேற்றும்

## வாசுதேவ நம்பிக்கை

கொழும்பு,டிசெ.27

நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை அரசு முழுமையாக நிறைவேற்றும் என்று நீர்வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,



குறுகிய கால நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு புதிய அரசமைப்பு உருவாக்கப்படமாட்டாது. 2021 ஆம் ஆண்டின் முதல் காலாண்டுக்குள் புதிய அரசமைப்பை உருவாக்க எதிர்பார்க்கப்படுகிறது.

நாட்டுக்குப் பொருந்தும் வகையில் புதிய அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்பதற்காகவே நாட்டு மக்கள் அரசுக்கு ஆதரவை வழங்கினர்.

புதிய அரசமைப்பு முரண்பாடற்றதன்மையில் உருவாக்கப்பட வேண்டும் என்பதற்காக சட்ட வல்லுநர்களை உள்ளடக்கிய குழு நியமிக்கப்பட்டது. மக்களின் கருத்துக்களும் கோரப்பட்டுள்ளன.

அரசமைப்பு உறுதியானதாக இருக்கும் பட்சத்தில் அரச நிர்வாகம் பலமாகச் செயற்படுத்தப்படும். புதிய அரசமைப்பில் அனைத்து இன மக்களின் உரிமைகளும் பலப்படுத்தப்பட்டு, புதிதாக பல விடயங்களும் இணைத்துக் கொள்ளப்படும்.

புதிய அரசமைப்பை அடுத்த வருடத்தின் முதல் காலாண்டுக்குள் உருவாக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது. மாகாண சபைத் தேர்தலும் அடுத்த வருடம் மார்ச் மாதத்துக்குள் நடத்த ஆரம்பகட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை அரசு முழுமையாக நிறைவேற்றும். என்றார். (க-இ)


## விளையாட்டு விஞ்ஞான துறை
## பிரயோக விஞ்ஞானங்கள் பீடம்
## ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்
## கங்கொடவில, நுகேகொடை

### விளையாட்டு விஞ்ஞானம் மற்றும் முகாமைத்துவ கற்கைநெறியில் உயர்தகு டிப்ளோமா பாடநெறி - முதன்முறை அனுமதி (கல்வியாண்டு 2021/2022)

ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் பிரயோக விஞ்ஞான பீடத்தின், விளையாட்டு விஞ்ஞான துறையின் மூலமாக நடாத்தப்படும் விளையாட்டு விஞ்ஞானம் மற்றும் முகாமைத்துவ உயர்தகு டிப்ளோமா பாடநெறிக்கு முதன்முறையாக கல்வியாண்டு 2021/2022 இற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

**இப்பாடநெறி யாருக்காக?**

கல்வி அமைச்சிற்கேற்ப அரசாங்க பாடசாலைகளில் புதிதாக பணியமர்த்தப்பட்ட விளையாட்டு பயிற்சியாளர்கள், விளையாட்டு அதிகாரிகள் உடற்பயிற்சியாளர்கள் மற்றும் விளையாட்டுத்துறையில் ஈடுபாடுடைய எந்தவொரு நபரும் விண்ணப்பிக்கலாம்.

**பாடநெறி பற்றிய தகவல்கள்**

| | |
|---|---|
| தகைமை | - SLQF LEVEL IV |
| பாடநெறியின் காலம் | - **02 வருடங்கள்** |
| மொழி | - ஆங்கிலம் மற்றும் சிங்களம் |
| கல்வி கற்பிக்கும் நேரம் | - **பகுதி நேரம்** (சனி மற்றும் ஞாயிறு காலை 8.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை) |
| கல்வி கற்பிக்கும் முறை | - விரிவுரைகள் மற்றும் விளையாட்டு செயற்பாடுகள் / நிகழ்நிலை விரிவுரைகள் |
| | பாடநெறி கட்டணம் - ரூபா 100,000/= (3 தவணை முறைகளிலும் கட்டணத்தை செலுத்த முடியும்) |

விண்ணப்பதாரியிடமிருந்து எதிர்பார்க்கப்படும் தகைமைகள்

1. க.பொ.த (உயர்தர) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் அல்லது அதற்கு நிகரானதொரு தகைமையிருத்தல், அல்லது NVQF தரம் 5இற்கு உரித்தானதொரு கற்கைநெறியில் சித்தியடைந்திருத்தல் அல்லது அதற்கு நிகரானதொரு தகைமையிருத்தல்..

**அல்லது**

2. க.பொ.த (சாதாரண) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் மற்றும் மாகாண அல்லது தேசிய அல்லது சர்வதேச ரீதியில் விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்றிருத்தல்.

**அல்லது**

விளையாட்டு விஞ்ஞான துறைக் குறிப்பிட்டும் வகையில் (5) வருடங்கள் விளையாட்டு துறையில் பணி செய்தமைக்கான அனுபவமிருத்தல்.

பாடநெறிக்கு விண்ணப்பிக்கும் முறை

ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் இணையத்தளத்தினூடாக (www.sjp.ac.lk) விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்களை பதிவிறக்கம் செய்து, பூரணப்படுத்தி, பின் நிகழ்நிலை (Online) முறையில் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும். அத்துடன் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் பொழுது ஏதேனும் மக்கள் வங்கி கிளையில் 097-1-001-7-001-4075 என்ற மக்கள் வங்கியின் கணக்கிலக்கத்திற்கு 1000/= ரூபாவை வைப்புச் செய்து, அப்பற்றுச்சீட்டை ஸ்கேன் முறையில் பிரதியெடுத்து (Scan Copy) அதனை விண்ணப்பத்துடன் சேர்த்து நிகழ்நிலை (Online) முறையில் பதிவிறக்கம் (Upload) செய்ய வேண்டும். விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய இறுதித்திகதி - **2021 ஜனவரி மாதம் 25 ஆம் திகதி**

**மேலதிக தகவல்களுக்கு**

இணைப்பாளர்
விளையாட்டு விஞ்ஞானம் மற்றும் முகாமைத்துவ உயர்தகு டிப்ளோமா பாடநெறி
விளையாட்டு விஞ்ஞான துறை, பிரயோக விஞ்ஞானங்கள் பீடம்.
ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம். தொலைபேசி : 0112881530/1; 0760010997
மின்னஞ்சல் முகவரி : piumiri@sci.sjp.ac.lk

**பதிவாளர்**
**ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்.**
**26.12.2020**

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 06 . 12 . 1946

மறைவு 28 . 11 . 2020

## அமரர் திருமதி இராசலட்சுமி அருணகிரிநாதன்

(இராசாத்தி அக்கா)

தெல்லிப்பழை கொல்லங்கலட்டியை பிறப்பிடமாகவும் இல.21, கிறீன் வீதி, திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் திருமதி இராசலட்சுமி அருணகிரிநாதன் அவர்களின் 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்தியமும் 28.12.2020 திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் பிரிவுச் செய்தி அறிந்து நேரில் வந்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், இரங்கலை தெரிவித்தவர்களுக்கும் எமது நன்றி களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

கணவர் : அ.அருணகிரிநாதன்
மகள்மார் : கீதாஞ்சலி, புஸ்பலதா, சர்மிளா
மகன் : குமரன்
குடும்பத்தினர்.

தொ .பே: 0262222829
0779007405
WhatsApp : 0717887477

## விற்பனைக்குண்டு

புளியந்தோட்டம், K.K.S றோட், மல்லாகம் காங்கேயன் பேக்கரி அருகாமையில் 7 பரப்பு காணியுடன் சகல வசதிகளும் கொண்ட வீடு 3 மாடி, நான்கு கடையுடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
**077 900 3780**

## காணி தேவை

மாங்குளம், ஒட்டுசுட்டான், துணுக்காய், ஓமந்தை, பூவரசங்குளம், கிளிநொச்சி பிரதேசம் உட்பட வடக்கின் ஏனைய பகுதிகளிலும் 03 ஏக்கருக்கு மேற்பட்ட விவசாயக் காணிகள் விலைக்குத் தேவை.

தொடர்பு: **077 217 4038**

## வேலைக்கு பெண் பிள்ளைகள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கான பொருட்கள் மற்றும் சிறுபிள்ளைகளுக்கான விளையாட்டுப் பொருட்கள் விற்பனை செய்யும் நிறுவனத்திற்கு பெண் பிள்ளைகள் வேலைக்கு தேவை.

தொடர்புகளுக்கு:
**076 264 8766, 021 221 3323**

## சேவை

நீங்கள் அடகுவைத்து மீட்டெடுக்கமுடியாத நகைகளை எமது நிறுவனத்தின் ஊழியர்கள் மூலமாக நீங்கள் அடகு வைத்த நிறுவனத்திற்கு வருகை தந்து மீட்டு எடுத்து அதற்கான பெறுமதிப்பணம் அவ்விடத்திலேயே தரப்படும் நாடளாவிய ரீதியில் சிநேக பூர்வமான சேவை.

**AAA Gold Center**
**076 568 4346**

## பணிப்பெண் தேவை

மாதகலில் 2 வயது, 1 வயது பிள்ளைகளை பராமரிக்கவும், அத்துடன் மதிய உணவு மற்றும் வீட்டு வேலைகள் செய்வதற்கும் ஆள் தேவை. தங்கியிருந்து வேலை செய்பவர் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புக்கு: **076 695 8498**

## விற்பனைக்கு

மாங்கன்று, தேசி, தோடை, ஈரப்பலா, ஓட்டுபலா, கயூ, கொய்யா, மாதுளை, கமுகு, யம்பு, பசன்புறுட், ரகன் புறுட், தென்னங்கன்று, செவிளை தென்னை, விலும்பி நெல்லி, முருங்கன், பப்பா, டொமினேசி மா, அல்போன்சா மா, கோப்பி, பட்டர்புறுட், ரம்பிட்டான், கறுவா, கராம்பு, மாங்குஸ்த்தான், ஏலக்கா, சீதா, அன்னமுன்னா, நாவல், இலுப்பை, பாலை, முதிரை, வாகை, சவுக்கு, தேக்கு, மலை வேம்பு, ஊர்வேம்பு, சித்திரவேம்பு, சமண்டலை, கருங்காலி, காயா கொண்டல்-கொன்றை, நாகமரம், அன்னாசி, பொகஸ்பிரல், ரெட்பாம், கேவி, கொழும்பு வெற்றிலை, மிளகு மேலும் பல இன பூங்கன்று வகை, சாடி வகை, துளசி மாடம் சந்தூரியம், மஞ்சள் கன்று விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு: நியூ லங்கா பாம்**
**பலாலி வீதி, ஊரெழு மேற்கு பிள்ளையார் கோயில் வீதி, கணேசா பாடசாலை அருகில்**
**077 612 9343**

**நியூ லங்கா பாம் கிளை:**
K.K.S. வீதி, இணுவில்

## இயந்திரங்கள் விற்பனைக்கு

**டெபெ ட்ரெக்டர், டேலர் மற்றும் யன்மார் நெல் அறுவடை இயந்திரம், உத்தரவாதத்துடன் சலுகை விலைக்கு**

தர்ஸன ஏஜன்சி
என்ட் மோட்டர்ஸ்
யாழ்ப்பாண வீதி, ரம்பாவ.
**071 419 4092**

## நாகபூஷணி திருமண சேவை
## மணமகன் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பம், 1994 இல் பிறந்த சூரியன் செவ்வாயுடன் 20 பாவமுடைய, செவ்வாய்க் குற்றமற்ற, அவுஸ்ரேலியாவில் உள்ள அழகிய டாக்ரர் மணமகளுக்கு B.Sc.க்கு மேல் இலங்கையிலோ / அவுஸ்ரேலியாவிலோ மணமகன் எதிர்பார்க்கப்படுகிறது. நீங்கள் விரும்பும் மிகப் பொருத்தமான மணமக்கள் ஜாதகங்கள் உடன் தரப்படும். ஞாயிறு உட்பட ஏழுநாள்களும் திறந்திருக்கும்.

**இல.5, ஐந்தாம் ஒழுங்கை,**
**பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம் (பேபி ஸ்ருடியோவுக்கு பக்கத்து ஒழுங்கை)**
021 222 9306, 077 1387596



# சந்திமல், தனஞ்சய அபாரம் இலங்கை பலமான ஆரம்பம்

ஜொகன்ஸ்பேர்க், டிசெ. 27

தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தின் முதல் நாளின் அடிப்படையில் இலங்கை அணி பலமான ஆரம்பம் கண்டது. இதன்படி 6 இலக்குகளை இழந்து 340 ஓட்டங்களைக் குவித்துள்ளது இலங்கை.



இரண்டு ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடர் இந்த இரண்டு அணிகளுக்கும் இடையில் நடைபெறுகின்றது. முதலாவது ஆட்டம் செஞ்சூரியன் மைதானத்தில் நேற்று ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணியின் தலைவர் கருணாரத்ன முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார். ஆரம்ப வீரர்களாக கருணாரத்ன மற்றும் குசல் பெரேரா இருவரும் களமிறங்கினர். 22 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் கருணாரத்ன. குசல் மெண்டிஸ் 12 ஓட்டங்களுடனும், குசல் பெரேரா 16 ஓட்டங்களுடனும் பவிலியன் திரும்பினர். ஓர் கட்டத்தில் 54 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளை இலங்கை அணி இழந்திருந்தது. அதன் பின்னர் சந்திமல், தனஞ்சயடி சில்வா இருவரும் இணைப்பாட்டத்தை பலப்படுத்தினர். தனஞ்சயடி சில்வா ஒருநாள் ஆட்டங்களுக்குரித்தான பாணியில் விளையாடினார். 79 ஓட்டங்களை தனஞ்சய டி சில்வா பெற்றிருந்தபோது தொடைப் பகுதியில் ஏற்பட்ட தசைப்பிடிப்புக் காரணமாக வெளியேறினார். அதன் பின்னர் சந்திமல் தொடர்ந்தும் துடுப்பெடுத்தாடி 85 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். அற்புதமாக விளையாடிய டிக்வெல்ல 49 ஓட்ங்களுடன் ஆட்டமிழந்தார். ஹசரன்க 18 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார். இதையடுத்து இலங்கை அணி முதல் நாள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 340 ஓட்டங்களைப் பெற்றது. சானக 25 ஓட்டங்களுடனும் ராஜித 7 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்தில் உள்ளனர். பந்துவீச்சில் முல்டர் மூன்று இலக்குகளையும் சிபம்லா, இங்கிடி, நோர்ஜி மூவரும் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

(ம-ரி-4)

## கண்ணீர் அஞ்சலி



பிறப்பு 28 . 12 . 1937 — இறப்பு 25 . 12 . 2020

### திரு செல்லத்துரை கணேசலிங்கம் (ராசம்மான்)

ஜயா ஜயா என
அன்பாய் அழைத்தோமே
எங்கய்யா போனீர்கள்
எங்களை தவிக்க விட்டு
நிரந்தரமாக தூங்கி விட்டீர்களா
மீண்டும் ஒரு முறை - உங்கள்
முகம் காணோமோ - ஜயா
உங்களின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்

பேரப்பிள்ளைகள்,
யாகினி, யாதவி, கேசவி.

## மரண அறிவித்தல்



### பொன்னையா கணபதிப்பிள்ளை

மீசாலை வடக்கு மீசாலையைப் பிறப் பிடமாகவும் சிவன்கோவிலடி சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா கணபதிப்பிள்ளை அவர்கள் 26.12.2020 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா இராசம்மா தம்பதியரின் மூத்த புதல்வரும் காலஞ்சென்ற காசித்தம்பி சின்னத்தங்கம் தம்பதியரின் மருமகனும், நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், நடேஸ்வரன் (அதிபர், கிளி/பரமன்கிராய் அ.த.க.பாடசாலை) சோபனா (பிரான்ஸ்) பரந்தாமன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சுபோதினி (அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம்-சாவகச்சேரி) தயானந்தன் (பிரான்ஸ்), பிரதீபா ஆகியோரின் மாமனாரும், சதுரன், தனுஜன், அபிசாளினி, பிரதீப் ஆகியோரின், அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.12.2020) ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பி.ப 1.00 மணிக்கு தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

22/4, பொலிஸ்நிலைய ஒழுங்கை,
கண்டி வீதி, சாவகச்சேரி.

தகவல்:
க.நடேஸ்வரன் (மகன்)
077 248 7868

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி சண்முகலிங்கம் அன்ரன்



தோற்றம் 23.03.1939 — மறைவு 26.12.2020

நெடுந்தீவு கிழக்கை பிறப்பிடமாகவும் இல.32/7, அச்சக ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் என அன்பாக அழைக்கப்படும் சண்முகலிங்கம் அன்ரன் 26.12.2020 சனிக்கிழமை இறைபதம் அடைந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி வள்ளியம்மை தம்பதியரின் புதல்வனும், சந்திரா என அழைக்கப்படும் மேரி மெக்டலின் அவர்களின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான பிலிப்புப்பிள்ளை திரேசம்மா தம்பதியரின் மருமகனும், பிலிப்றோய் (ஆசிரியர்- வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை) பிலிப் ஜோய் (ஜோயல் பேக்கரி), பிலிப் றேகன் (யாழ் பிரதேச செயலகம், பட்டதாரி பயிலுனர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பானுஷா றோய் (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், ஊர்காவற்றுறை) டிலக்சி ஜோய் ஆகியோரின் அன்பு மாமனும், சுமங்கலா றெஜி (சுண்டுக்குளி மகளிர் பாடசாலை, ஆய்வுகூட உதவியாளர்) அன்ரன் கொலின்ஸ் (தென்கிழக்கு பல்கலைக்கழகம்) ஆகியோரின் பெரிய தந்தையும், காலஞ்சென்ற ஞானஇரத்தினம் மற்றும் ஜசிந்தா, லூசியா ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்ற மரியதாஸ், மற்றும் அமலதாஸ், யேசுதாஸ், இராசநாயகம் (கொழும்பு) மேரி மாக்ரெட், ஜோன் மார்க் (சுவிஸ்) காலஞ்சென்றவர்களான ஜோசப், இம்மானுவேல் மற்றும் அருட்பிரகாசம் ஆகியோரின் மைத்துனரும், மேரி லுசினா, விக்னேஸ்வரி, லலிதா (கொழும்பு) காலஞ்சென்ற கிறிஸ்ரி அருமைநாயகம் மற்றும் ரஞ்சினி (சுவிஸ்) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 28.12.2020 திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் இரங்கல் திருப்பலிக்காக யாழ். மரியன்னை பேராலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு பின்னர் கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

32/7, அச்சுக்கூட ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

தகவல்: மனைவி
பிள்ளைகள்.
077 5938383


**வீடு வாடகைக்கு உண்டு**

குடியிருப்பு மற்றும் வியாபாரத்திற்கு ஏற்ற வீடுகள் வாடகைக்கு உண்டு.

T.P: 076 3136 818

**ICT வகுப்புகள்**

புதிய பிரிவுகள்

GRADE 10: ICT Fundamentals of a Computer system
GRADE 11: Programming / O/L -Revision

ஆரம்பம் : 05.01.2021 10.00AM

- Zoom வகுப்புக்கள் பதிவு அவசியம்
- அலகு ரீதியான வகுப்புக்கள் / பரீட்சைகள்
- தமிழ் / ஆங்கில மொழி வகுப்புகள்/ பயிற்சி வகுப்புகள்
- சனி, ஞாயிறு 7AM - 8 AM / 5 PM - 6PM

IPS
யா/பல்கலைக்கழகம் அண்மையில்
திருநெல்வேலி.யாழ்ப்பாணம்.
T.P: 077 602 1794


## துயர் பகிர்கின்றோம்




எமது கல்லூரியின் ஆசிரியை திருமதி
பிரியந்தி மரீனா கியோமர் அவர்களின்
அன்புக் கணவர்

### சிமியோன் கியோமர் (வவா)

அவர்கள் நேற்று (26.12.2020) சனிக்கிழமை காலமானார். அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி
ஆசிரியர் வட்டம்

## மரண அறிவித்தல்



### சிமியோன் கியோமர் (வவா)

உடுவில் மல்வத்தையை பிறப்பிடமாகவும், இல.122, கோவில் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சிமியோன் கியோமர் (வவா) நேற்று (26.12.2020) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சாமுவேல் சிமியோன் மற்றும் லில்லிபுஸ்பம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான டானிசியஸ் பொன்மலர் தம்பதியரின் அன்பு மருமகனும், பிரியாந்தி மரினா (ஆசிரியை யாழ். மத்திய கல்லூரி) அவர்களின் அன்புக் கணவரும், மேரி டெலஸ்ரீனா, கொலஸ்ரிக்கா (பிரான்ஸ்) இயூட் சாள்ஸ் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், மரிய டெரன்ஸ் (ஓய்வுநிலை அஞ்சல் அதிபர்) செல்வநாயகம் (பிரான்ஸ்) ரதிகலாமலர் (சுவிஸ்) டவ்ணி அன்ரனற் (ஆசிரியர், சென்றோக் மகா வித்தியாலயம்) நில்மினி, தனுசா (மருந்தாளர் தேசிய வைத்தியசாலை-கொழும்பு) ஆகியோரின் மைத்துனரும், நியூட் நிசாந் (கனடா) குறோப்ரன் (பிரான்ஸ்) கொட்வின் (அஞ்சலகம், சுன்னாகம்) டினோஜா டிறோஜா, ஜான்சன் (பிரான்ஸ்) ஜனுசன் (பிரான்ஸ்) ஜென்சி (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும், ஜானிக்சன் (சுவிஸ்), எல்சி (சுவிஸ்), அமெலி (சுவிஸ்) சஜித்தா, விவிஜான், செயோன், பபிலோன், மேரியன் யோசப்பியன் ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (27.12.2020) 122 கோவில் வீதியிலுள்ள அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று, பி.ப 3.00 மணிக்கு நல்லடக்கத்திற்காக யாழ் புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

## அதிஸ்ரலாப சீட்டு குலுக்கல் இரத்து செய்தல்

மேற்படி விடயம் தொடர்பாக, 25.12.2020 அன்று குலுக்குவது என தீர்மானிக்கப்பட்ட அதிஸ்டலாப சீட்டானது குலுக்கவில்லை என்பதனை அறியத் தருவதோடு, சீட்டினை பெற்றுக்கொண்டவர்களுக் கான பணம் விற்கப்பட்டவர்களிடம் பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாட்டினையும் மேற்கொண் டுள்ளோம் என்பதனை அறியத்தருகின்றோம்.

நிர்வாகம்
அலைஓசை விளையாட்டுக்கழகம்
உடுப்புக்குளம், உப்புமாவெளி

## வீடு / காணி தேவை

வாடகைக்கு வீடுகள் தேவை.
விலைக்கு வாங்க வீடுகள், காணிகள் தேவை.

**T.P: 077 415 5897**

## காணி விற்பனைக்கு

இரண்டாம் ஒழுங்கை, பிரம்படி வீதி, கொக்குவிலில் 2 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**T.P: 076 168 0059, 076 702 3565**

## Water Proofing Solution

CONCRETE WATERPROOFING WORK (SLABS & WATER TANKS)
(நீர் கசிவுகளை சரி செய்தல் & ஏற்படாமல் தடுத்தல்).
CONCRETE CRACK & HONEYCOMBS REPAIRS
(கான்கிரீட் வெடிப்புக்களை சரி செய்தல்)
நேர்த்தியான முறையில் தொழில்நுட்பவியலாளரின் கண்காணிப்பில் செய்து தரப்படும்.

**Northern Water Proofing & Consultants**
**Mobile - 076 489 3524**

## இலவச கணினி, ஆங்கில வகுப்புக்கள்

**புதிய பிரிவுகள் பிரிவு - 30**
**Diploma in English / Spoken English**
**Diploma in ICT / MS-Office**

காலம் : 3 மாதங்கள்,
சான்றிதழ் வழங்கப்படும்.
**ஆரம்பம் : 01.01.2021 10.00 AM**

**IPS** திருநெல்வேலி.யாழ்ப்பாணம்.
**T.P: 076 685 2529**



## ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் நயினாதீவு.

# கூறுவிலை கோரல்

ஆலய பின்வரும் திருப்பணி வேலைகளுக்கான கூறுவிலைகள் அறங்காவலர் சபையினால் கோரப்படுகின்றன. பின்வரும் தகைமையுடையவர்கள் ஆலயத்திற்கு நேரடியாக வருகை தந்து கூறுவிலைப் படிவக்கட்டணமாக ஒவ்வொரு வேலைக்கும் தனித்தனியாக ரூபா 2000 த்தினை (மீளளிக்க முடியாதது) செலுத்தி கூறுவிலைப்படிவத்தைப் பூரணப்படுத்தி 10.01.2021 ஆம் திகதி மலை 5.00 மணிக்கு முன்னர் ஆலயத்திற்கு கிடைக்கக் கூடியதாக பதிவஞ்சல் மூலம் "செயலாளர்", அறங்காவலர் சபை, ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு எனும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். நேரடியாக சமர்ப்பிக்க விரும்புபவர்கள் அதற்கென ஆலய காரியாலயத்தில் வைக்கப்பட்டுள்ள கூறுவிலை பெட்டியினுள் இடமுடியும்.

வேலைகள் விபரம்

1) தீர்த்தக்கரை வில் மண்டபம் 02 அமைத்தல்
2) ஆலயத்தின் முகப்பு வளைவு அமைத்தல்
3) அம்பாள் அறிவாலயம் மற்றும் அரும்பொருட்காட்சியகம் என்பவற்றுக்கான புனரமைப்பு வேலைகள்.

குறிப்பு :- 1. பதிவுபெற்ற ஒப்பந்தகாரராக இருத்தல் வேண்டும்.
2. ஆலய கட்டுமான வேலைகளில் முன் அனுபவம் இருத்தல் வேண்டும்.
இவற்றுற்கான சான்றிதழ்களின் பிரதி கூறுவிலையுடன் இணைத்து அனுப்பப்படல் வேண்டும்.

திரு.ந.மோகனரூபன்,
செயலாளர்,
அறங்காவலர் சபை,
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்,
நயினாதீவு.

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்

## ஆசாரி சுப்பிரமணியம் (சின்னத்துரை) யோகலிங்கம்

**(யாழ் பல்கலைக்கழக பராமரிப்புப் பகுதி ஓய்வுபெற்ற தொழிலாளி)**

**மண்ணுலகில் : 22.10.1952 விண்ணுலகில் : 25.12.2020**



சரவணையைப் பிறப்பிடமாகவும் தற்போது தாவடியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் யோகலிங்கம் அவர்கள் நேற்று (25.12.2020) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் பார்வதி தம்பதியரின் அன்பு மகனும்., காலஞ்சென்ற இரத்தினம்-கனகாம்பிகைதேவி ஆகியோரின் மருமகனும், ஜெகதீஸ்வரியின் பாசமிகு கணவரும், சுதர்மினி, கஜரூபன், துஷாந்தன், நிவேதிகா ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், காளிதாசின் அன்பு மாமனாரும், மஜிசனின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற குணலெட்சுமி மற்றும் கனகேஸ்வரி (தாவடி), புஸ்பராசா (பிரான்ஸ்), பேரின்பராணி (கொழும்பு), நகுலேஸ்வரன் (பிரான்ஸ்), தவராசா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் பாலசிங்கம், துளசிதாசன், சந்திரவதனா, பாமா வினோதினி, புவனேஸ்வரி (மலர்), லோகேஸ்வரி (ரதி), நகுலேஸ்வரி (வவா), நகுலேஸ்வரன் (அப்பன்), குணேஸ்வரி (சாந்தி) மற்றும் அமரர் ஜெகதீஸ்வரன் (தம்பி) ஆகியோரின் மைத்துனரும், யோகேஸ்வரன், இராஜேஸ்வரி, காலஞ்சென்ற பரமேஸ்வரி, குகணேஸ்வரன் மற்றும் அனிதா (லண்டன்), துவாரகன் (பிரான்ஸ்), ராகவி (கொழும்பு) ஆகியோரின் தாய்மாமனும், யஸ்வினி, யாதவன், யதுர்ஷன், நிரோஜன், கிருத்திகா, நிதுர்சன், அஸ்வின், சச்சின், ஸ்பூர்த்தி ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 27.12.2020 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக முற்பகல் 10.00 மணிக்கு தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:**
**077 339 3386 -கஜரூபன் (மகன்)**
**077 370 8236 பாலசிங்கம் (மைத்துனர்)**

**தகவல் :**
**குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்

**தோற்றம்**
**28 . 12 . 1937**



**மறைவு**
**25 . 12 . 2020**

## செல்லத்துரை கணேசலிங்கம்

வேலணை மேற்கு வேலணை 6ம் வட்டாரத்தை (சிற்பனை) பிறப்பிடமாகவும் 145/5 மங்கையற்கரசி ஒழுங்கை நல்லூரை வதிவிடமாகவும், தற்போது கைதடி வடக்கு கைதடியில் வசித்து வந்தவருமாகிய செல்லத்துரை கணேசலிங்கம் 25.12.2020 வெள்ளிக்கிழமை இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை பூரணம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லையா செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற மீனாம்பிகை அவர்களின் அன்புக் கணவரும், வேல்வேந்தன் (லண்டன்), அனுச்செல்வன் (கைதடி) சந்திரிக்கா (சுவிஸ்) சசிகலா (ஜேர்மனி) சிவகலா (நல்லூர்) றசிகலா (லண்டன்) ஜெயகாந்தன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிறிராதா (லண்டன்) கௌசலா (ஆசிரியை, யா/ நாவற்குழி மகா வித்தியாலயம்) ரெட்னேஸ்வரன் (சுவிஸ்) சிவகுமார் (ஜேர்மனி) செல்வானந்தன் (நல்லூர்) சிறிபதி (லண்டன்) பத்மசிறி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், அபினாஸ் ஆகாஸ், ஆதேஷ், கஸ்வினியா, அரவிந்தன், அனோஜன், அருந்தா, இனியா, சகானா, ஜாகினி, ஜாதவி, கேசகி, சுவேதா, வாரணன், சுஜிதா, சஜிதா, சகிதா, ஜெய், அபிசா ஆகியோரின் அன்புப் பேரனும், அமரர் கார்த்திகேசு (அம்மான்) மற்றும் அம்பலவாணர் (கனடா) செல்வநாயகி (கனடா), அமரர் சபாநாதன் (செவ்வந்தி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், அமரர் சகுந்தலா மற்றும் ரதிதேவி (கனடா) அமரர்களான நிற்குணசிங்கம், சொர்ணேஸ்வரி இராஜலெட்சுமி, புனிதவதி, சாந்தலிங்கம் மற்றும் சண்முகலிங்கம் (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.12.2020) ஞாயிற்றுக்கிழமை மதியம் 12.00 மணியளவில் கைதடியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:**
077 032 4525, 077 674 5874

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

**தோற்றம்**
**23 . 07 . 1937**



**மறைவு**
**26 . 12 . 2020**

## கதிரவேலு பேரம்பலம்

சரவணையை பிறப்பிடமாகவும் கொக்குவில் பிரம்படியை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு பேரம்பலம் நேற்று (26.12.2020) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு முத்தாய்ச்சி தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான செல்லப்பா தெய்வானைப் பிள்ளையின் மருமகனும், பாக்கியலட்சுமியின் அன்புக் கணவரும், பேரின்பவதி, நாதன், கலா, ராசன், குகன் (எவரெஸ்ட் பான்சி) காலஞ்சென்ற சுதன் மற்றும் ராகினி (அவுஸ்திரேலியா), மதன் (அபிவிருத்தி உத்தியோகத்தர் முல்லைத்தீவு) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவகுமாரன், கலைமகள், திருச்செல்வம், ஜீவா, கேமா, சசிதரன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாம னாரும், திவேகா, துவாசினி, கேசவி, சுபைதா, ஜினிஷா, ஜிவிதா, அக்ஷயன், வர்சன், தர்வின் ஆகியோரின் அன்புப் பேரனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.12.2020) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல.39, மில் லேன், கொக்குவில்.**
077 924 5994

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## வடக்கில்...

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஒருவர் கொரோனாத் தொற்றுக்கு இலக்காகி உயிரிழந்த முதலாவது சம்பவம் இதுவாகும். வவுனியா உளுக்குளத்தைச் சேர்ந்த 60 வயதான சகோதர மொழி பேசும் பெண்ணே உயிரிழந்துள்ளார்.
கடந்த 20ஆம் திகதி வவுனியா மருத்துவமனைக்கு பெண் ஒருவர் சிகிச் சைக்காக வந்துள்ளார். குருதிப்போக்குக்கு சிகிச்சை பெற்றுக் கொள்ள வந்த அவரை 8ஆம் விடுதியில் மருத்துவர்கள் அனுமதித்துள்ளனர். அவருக்கு இரண்டு நாள்களில் மூச்சு விடுவதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. உடனடியாக அவச சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளார். அவருக்கு ஒட்சிசன் 'பம்' செய்யப்பட்டு மூக்கின் ஊடாக வழங்கப்பட்டுள்ளது. 24ஆம் திகதி பி.சி.ஆர். மாதிரிகள் பெறப்பட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. பரிசோதனை முடிவுகளில் தாமதம் ஏற்பட்ட நிலையில் மறுநாள் 25ஆம் திகதி பி.சி.ஆர். மாதிரிகள் பெறப்பட்டு அனுராதபுரம் அனுப்பி வைக்கப்பட்டது. அன்றைய தினம் மாலையில் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. உடனடியாகவே அவர் அனுராதபுரம் மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். அங்கு நேற்று மாலை 6.30 மணியளவில் உயிரிழந்துள்ளார். வடக்கில் இதன்மூலம் முதலாவது கொரோனா உயிரிழப்பு பதிவாகியுள்ளது.
இதேவேளை பெண்ணுக்கு எவ்வாறு கொரோனாத் தொற்று ஏற்பட்டது என்பது இதுவரை கண்டறியப்படவில்லை. வவுனியா மருத்துவமனையின் விடுதிப் பணியாளர்கள், நோயாளர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். சோதனையில் அவர்களுக்கு தொற்று இல்லை என்ற முடிவு கிடைக்கப்பெற்றுள்ளது.
பெண் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வரும்போதே தொற்றுடன் வந்தாரா அல்லது மருத்துவமனையில் சிகிச்சை பெறும்போது வேறு யார் மூலமாவது தொற்று ஏற்பட்டதா என்பது தொடர்பில் ஆராயப்பட்டு வருகின்றது. (ஒ.5.18,110)

## சண்டிலிப்பாயில்...

பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.
முல்லேரியா மற்றும் மருத்துவ ஆராய்ச்சி நிலைய ஆய்வுகூடங்களில் முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளில் இவர்களுக்கு தொற்று உள்ளதாக அறிக்கை கிடைத்துள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.
இதன்மூலம் மருதனார்மடம் தொற்று அடையாளம் காணப்பட்ட 16ஆவது நாளில் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 109ஆக உயர்வடைந்துள்ளது.
சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவைச் சேர்ந்த நான்கு பேருக்கே இவ்வாறு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.
இவர்களில் ஒருவர் மருதனார்மடத்தில் வியாபாரம் மேற்கொள்பவர். மற்றைய இருவர் சகோதரிகள். அவர்களின் சகோதரன் மருதனார்மடத்திலுள்ள கடையில் பணிபுரிபவர். அவருக்கு ஏற்கனவே தொற்று கண்டறியப்பட்டிருந்தது.
இதனை விட சண்டிலிப்பாய் சந்தையில் கடந்த 16ஆம் திகதி பி.சி.ஆர். மாதிரிகள் பெறப்பட்டிருந்தன. அதில் மாகியப்பிட்டியில் மீன் வியாபாரம் செய்யும் ஒருவரும் உள்ளடக்கம். அவருக்கு மருதனார்மடம் சந்தையுடன் நேரடித் தொடர்பு இல்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஒ.5,26)

## குளத்தில்....

ரின் உடல் கடற்படைச் சுழியோடிகளால் நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளது. கல்மடுநகர், சம்புக்குளத்தைச் சேர்ந்த இ. லோகிதன் (வயது 27) என்பவரே உயிரிழந்தவராவார். இவர் ஒரு பிள்ளையின் தந்தையாவார்.
இவரும், நண்பர்கள் இருவரும் நேற்று முன்தினம் மாலை கல்மடுக்குளத்தில் குளிக்கச் சென்றபோது, லோகிதன் நீரில் மூழ்கிக் காணாமல் போயிருந்தார். நேற்றுமுன்தினம் தேடுதல் மேற்கொண்டபோதும் அவர் கண்டுபிடிக்கப்படவில்லை. நேற்றுக் காலை கடற்படை சுழியோடிகள் குளத்தில் தேடுதல் நடத்தி உடலை மீட்டுள்ளனர். (ஒ.ப.6)

## ஆழிப்பேரலை...

2004ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 26ஆம் திகதி காலை இந்தோனேசியாவின் சுமாந்திரா தீவுக்கு அருகில் கடலுக்கு அடியில் ஏற்பட்ட 9.3 ரிக்டர் நிலநடுக்கத்தால் ஆழிப்பேரலை ஏற்பட்டது. ஒரு சில நிமிடங்களுக்குள் இந்த ஆழிப் பேரலை 2 லட்சத்து 30 ஆயிரம் பேரை காவு கொண்டது. பல மில்லியன் கணக்கான மக்களின் சொத்துக்களைக் கபளீகரம் செய்து, அவர்களை திக்கற்றவர்களாக மாற்றியது. இலங்கையில் இந்த ஆழிப் பேரலையால் 35 ஆயிரத்து 322 பேர் உயிரிழந்தனர். 21 ஆயிரத்து 411 பேர் காயமடைந்தனர். 5 லட்சத்து 15 ஆயிரத்து 115 பேர் இடம்பெயர்ந்தனர். 3 ஆயிரத்து 954 சிறுவர்கள் தங்கள் பெற்றோர்களை இழந்தனர். இவர்களில் 979 சிறார்கள் தங்கள் தாய், தந்தை இருவரையும் இழந்தனர்.
வடக்கு, கிழக்கில் உள்ள ஆறு மாவட்டங்களும் ஆழிப்பேரலையால் பெரும் பாதிப்புக்களைச் சந்தித்தன. பெரும் அழிவுகளையும், வடுக்களையும் உருவாக்கிய ஆழிப்பேரலை ஏற்பட்டு இன்றுடன் 16 ஆண்டுகள் கடந்துள்ளன. ஆழிப்பேரலையால் உயிரிழந்தவர்களை நினைவுகூரும் நிகழ்வுகள் இலங்கையிலும், உலக நாடுகளிலும் நேற்று முன்னெடுக்கப்பட்டன.

**உடுத்துறை**

வடமராட்சி கிழக்கு, உடுத்துறையில் உள்ள ஆழிப் பேரலை நினைவாலயத்தில் நேற்று நினைவேந்தல் உணர்வு பூர்வமான நடைபெற்றது.

**சாவகச்சேரி**

சாவகச்சேரி புனித லிகோரியார் ஆலய சேமக்காலையில் உள்ள நினைவுத் தூபியில் நேற்று நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெற்றன. ஆழிப் பேரலையில் உயிரிழந்தவர்களுக்கு மலர்தூவி, அஞ்சலி செலுத்தப்பட்டது.

**வவுனியா**

வவுனியா பூந்தோட்டம் நரசிங்கர் ஆலயம் மற்றும் வவுனியா நகரசபையின் ஏற்பாட்டில் அஞ்சலி நிகழ்வு நடைபெற்றது. பூந்தோட்டம் லயன்ஸ் விளையாட்டுகழக மைதானத்தில் அமைந்துள்ள சுனாமி நினைவுத் தூபியில் பிரார்த்தனை நிகழ்வு இடம்பெற்றது.

**முல்லைத்தீவு நினைவாலயம்**

முல்லைத்தீவு நகரில் உள்ள சுனாமி நினைவாலய வளாகத்தில் நேற்று நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெற்றன.

**கள்ளப்பாடு**

முல்லைத்தீவு, கள்ளப்பாடில் ஆழிப் பேரலையால் உயிரிழந்தவர்களுக்கு விசேடமாக ஒழுங்கமைக்கப்பட்ட இடத்தில் அஞ்சலி செலுத்தப்பட்டது. அமைக்கப்பட்ட கல்லறை மாதிரிக்கு ஆழிப்பேரலையின் போது உறவுகளை இழந்தவர்கள் தமது உறவுகளை நினைந்து, பூத்தூவி, தீபமேற்றி தமது அஞ்சலி செலுத்தினர்.

**கிழக்கு**

மட்டக்களப்பு, பாசிக்குடா கடற்கரைப் பகுதியில் உள்ள சுனாமி நினைவுத் தூபியில் நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்று நடைபெற்றன. ஆழிப்பேரலையில் உயிரிழந்தவர்களுக்கு தீபம் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

**மலையகம்**

ஆழிப்பேரலையில் உயிரிழந்தவர்களை நினைவுகூரும் நிகழ்வுகள் மலையகத்திலும் நேற்று நடைபெற்றன. ஹற்றன் புத்தர் சிலை முன்பாக சுடர் ஏற்றி, ஆழிப்பேரலையால் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.
(எ-ரி5-9,110,19,246,150)

## மிகப்பெரிய...

ரிகைச் சுதந்திரமும், கருத்துச் சுதந்திரமும் இருக்க வேண்டும். இதை இந்த அரசு கவனத்தில்கொண்டு செயற்பட வேண்டும். இல்லையேல் அதன் விளைவுகளை விரைவில் சந்தித்தே தீரும். இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா எச்சரிக்கை விடுத்துள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
நாட்டின் அரசைத் தீர்மானிக்கும் வல்லமை ஊடகங்களுக்கும் இருக்கின்றது. ஊடகங்களில் வெளிவரும் செய்திகளை வைத்தே யாரை ஆட்சியில் அமர்த்துவது என்ற தீர்மானத்தைப் பெரும்பாலான மக்கள் எடுப்பார்கள். இந்த நிலையில், ஊடகங்கள் மீது மீண்டும் ராஜபக்ச அரசு கைவைக்க ஆரம்பித்துள்ளது. அதனால் மிகப் பெரிய விளைவுகளை அரசு சந்திக்க வேண்டி வரும். 2015ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் மஹிந்த ராஜபக்ச தலைமையிலான அரசு கவிழ்வதற்குப் பெரும்பாலான ஊடகங்களின் ஒற்றுமையான பணியே காரணம். மஹிந்த ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில் வடக்கிலுள்ள ஊடகங்களும், தெற்கிலுள்ள ஊடகங்களும் பெரும் இழப்புக்களைச் சந்தித்திருந்தன. ஊடக நிறுவனங்களின் ஆசிரியர்கள், செய்தியாளர்கள் மற்றும் பணியாளர்கள் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டனர். பலர் கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்டனர். சிலர் கைதுசெய்யப்பட்டு சித்திரவதைகளின் பின்னர் விடுவிக்கப்பட்டனர். மஹிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் ஊடகங்கள் சந்தித்த அவலங்களுக்கு இன்னமும் நீதி கிடைக்கவில்லை. ஊடகங்கள் மீது கைவைத்த காரணத்தால்தான் மஹிந்த ராஜபக்ச அரசு சர்வதேச ரீதியில் அவப்பெயரைச் சுமக்க நேர்ந்தது. அதனால் ஆட்சியும் கவிழ்ந்தது. கடந்த நல்லாட்சியில் ஊடகங்கள் முழுச் சுதந்திரத்துடன் இயங்கின. எனினும், 2019ஆம் ஆண்டு நவம்பரில் துரதிஷ்டவசமாக ஆட்சி மாறியது. அதற்குப் பின்னால் மிகப் பெரிய சதி நடவடிக்கைகள் மறைந்து இருக்கின்றன. தற்போதைய புதிய ஆட்சியில் ராஜபக்ச குடும்பத்தின் மீள் எழுச்சியில் ஊடகங்கள் மீண்டும் நெருக்குவாரங்களைச் சந்திக்க ஆரம்பித்துள்ளன, என்றார். (ஒ.5,22)

## எழுமாற்று...

ராக இனம் காணப்பட்டுள்ளார். அவர் கோம்பாவில் 2ஆம் வட்டாரத்தைச் சேர்ந்தவர். புதுக்குடியிருப்பு பொதுச் சந்தை வியாபாரிகள் 12 பேருக்கு எழுமாற்று பி.சி.ஆர். சோதனைக்கு மாதிரிகள் பெறப்பட்டன. அவர்களின் மாதிரிகள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன. இதன்போது ஒருவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர் தம்புள்ள மரக்கறி விற்பனை நிலையத்துக்குச் சென்று மரக்கறிகளை எடுத்து வந்து புதுக்குடியிருப்பு சந்தையில் வைத்து, புதுக்குடியிருப்பு, உடையார்கட்டு மற்றும் விசுவமடு வியாபாரிகளுக்கு விற்பனை செய்பவர். எழுமாற்றுச் சோதனை மேற்கொண்டமையால் எவரும் தனிமைப்படுத்தப்படவில்லை. அத்துடன் தொற்றாளர் ஆலயத்துக்கும் நேற்றைய தினம் சென்றுள்ளார் எனவும் வழிபாட்டில் பலர் பங்கேற்றனர் எனவும் கூறப்படுகின்றது. (ஒ.5,26,246)

## ஜனாஸா...

வவுனியா மாவட்ட அனைத்து பள்ளிவாசல்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்டது. (எ.ஒ.110)

## பட்டப்பகலில்..

(வயது -32) என்பவரே உயிரிழந்துள்ளார். நேற்று முற்பகல் 10 மணியளவில் பல்லவராயன்கட்டு, சோலைமாதிரிக் கிராமத்தில் முருகன் கோயில் வீதியில் நடந்துள்ளது. இந்தச் சம்பவம் நடைபெற்ற நேரம் வீதியில் மக்கள் நடமாட்டம் இருக்கவில்லை. உழவு இயந்திரம் ஒன்றில் வந்து அந்தப் பகுதியில் பிரதீபன் இறங்கிய சிறிது நேரத்திலேயே இந்தக் கொலைச் சம்பவம் நடைபெற்றுள்ளது. உயிரிழந்தவரின் கழுத்துப் பகுதியில் முறிவுகள் காணப்படுகின்றன என்றும், கால் மற்றும் இடுப்புப் பகுதியில் வெட்டுக் காயங்கள் காணப்படுகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். இடுப்பு பகுதியில் கத்தியால் ஆழமாக குத்தியதால் ஏற்பட்ட அதிக குருதிப் போக்காலேயே உயிரிழந்தார் என்று மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன. இந்தச் சம்பவம் தொடர்பில் 52 வயதான சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவருக்கும் உயிரிழந்தவருக்கும் இடையில் அடிக்கடி வாய்த் தர்க்கம் இடம்பெறுவதாக முதல் கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது எனப் பொலிஸார் கூறினர். (எ.ஒ.6)

## கொரோனா...

தொடர்பில் அந்த அமைப்பால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,
மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 48 தமிழ் அரசியல் கைதிகளுக்கும் கொரோனா ஏற்பட்டிருந்தது. இவர்களில், நீரிழிவு போன்ற தொற்றா நோய்களால் பாதிக்கப்பட்டிருப்பவர்கள் அடங்கலாக, மருத்துவர் சிவரூபன், இந்து மதகுருவான இரகுபதி சர்மா உட்பட்ட 14 தமிழ் அரசியல் கைதிகள் வெலிக்கடை சிறைச்சாலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
சின்னையா சிவரூபன், சி.ஐ. இரகுபதி சர்மா, எட்வேட் சாம் சிவலிங்கம், தங்கவேல் சிவகுமார், நாகலிங்கம் மதனசேகர், தேவசகாயம் உதயகுமார், குலசிங்கம் குலேந்திரன், றுபட்ஷன் யதுஷன், சேவியர் ஜோண்ஷன் டட்லி, தாவீது நிமல்ராஜ் பிரான்சிஸ், விநாயகமூர்த்தி நெஜிலன், இரத்தினம் கிருஷ;ணராஜ், சின்னமணி தனேஸ்வரன், ஞானசேகரம் ராசமதன் ஆகியோரே சிறை மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றுவருகின்றனர். சிறைச்சாலைகளில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளை குறைக்கும் முகமாக சில பொறிமுறைகளுக்கூடாக அரசு 6 ஆயிரம் கைதிகளை விடு வித்துள்ளது. அதில் எந்தவொரு தமிழ் அரசியல் கைதியும் உள்வாங்கப்படவில்லை, என்றுள்ளது. (ஒ)

# ஆஸியின் வேகக்கூட்டணி மீண்டும் மிரட்ட எத்தனம்!



## தாக்குப்பிடிக்க இந்தியாவும் முனைப்பு

மெல்போர்ண், டிசெ. 27

இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் மீண்டும் தன் வேகப்பந்து வீச்சால் மிரட்டுவதற்கு எத்தனிக்கின்றது ஆஸ்திரேலிய க்கூட்டணி.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலியா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அந்த அணி 195 ஓட்டங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்தது. லபஷ்சேன் 48 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றார். அவரைவிட ஹெட் 38 ஓட்டங்களையும், வேட் 30 ஓட்டங்களையும் பெற்றனர். சிமித் ஓட்ட மெதையும் பெறாமல் ஏமாற்றினார்.

பந்துவீச்சில் பும்ரா 4 இலக்குகளையும், அஸ்வின் 3 இலக்குகளையும், சிராஜ் 2 இலக்குகளையும், ஜடேயா ஓர் இலக்கையும் பெற்றனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இந்தியா ஓர் இலக்கை இழந்து 36 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. அகர்வால் ஓட்டமெதையும் பெறாமல் ஆட்டமிழந்தார். கில் 28 ஓட்டங்களுடனும், புஜாரா 7 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர்.

(ம)

### பாமஸிக்கு ஆள் தேவை

பாமஸிக்கு அனுபவமுள்ள
சரசாலையில் வேலை
செய்யக்கூடியவர்கள் தேவை.

077 300 1713

### வேலையாள் தேவை

கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணத்தில் கட்டட நிர்மாணத்துறையில் BILL தயாரிப்பில் சிறந்த அனுபவம் மிக்க தொழில்நுட்ப உத்தியோகத்தர் (TO) ஒருவர் பிரபல நிறுவனமொன்றுக்கு தேவை.

● பகுதிநேரமாகவும் பணியாற்றலாம்.

தொடர்புகளுக்கு:

075 590 0000, 076 760 3066

### மாபிள்ஸ்

றெறாசோ ( Terrazzo) மாபிள் பதித்தல்
கிறனைற் (Granite) சமையலறைத் தட்டு, நில வேலைகள்
நவீன முறையில் செய்து தரப்படும்
Since-1952

தொல்புரம். தொடர்பு: 021 225 0186, 077 355 3372, 077 630 6733

# ஹசரங்க அறிமுகம்




ஜொகன்ஸ்பேர்க், டிசெ. 27

தென்னாபிரிக்க அணிக்கு எதிராக நேற்று ஆரம்பமான டெஸ்ட் ஆட்டத்துக்கான இலங்கை அணியின் வனிந்து ஹசரன்க சேர்க்கப்பட்டார். இது அவரின் முதலாவது டெஸ்ட் ஆட்டமாக அமைந்தது. இலங்கை அணி சார்பில் டெஸ்ட் அறிமுகம் பெறும் 151ஆவது நபராக ஹசரன்க வரலாற்றில் இடம்பிடித்தார். இவருடன் இணைந்து தென்னாபிரிக்கா வேகப்பந்து வீச்சாளர் சிபம்லாவும் டெஸ்ட் அறிமுகம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

(ரி-4)

## மரண அறிவித்தல்



### கணேசு செல்வராசா

| மண்ணுலகில் | விண்ணுலகில் |
|---|---|
| 21.08.1953 | 26.12.2020 |

ஏழாலை தெற்கு சூராவத்தையை பிறப்பிடமாகவும், ஏழாலை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கணேசு செல்வராசா அவர்கள் நேற்று (26.12.2020) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற கணேசு சரஸ்வதி தம்பதி யரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கணபதிப் பிள்ளை இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சிவனேஸ்வரியின் கணவரும், கபிலன் (லண்டன்), சுஜீபன் (காமாட்சி களஞ்சியம் யாழ்ப்பாணம்), கோப்பிணா (லண்டன்), கோகுலன், பமினா ஆகியோரின் அன்பு தந்தையும், அனு (லண்டன்), குருபரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், அனனிகா, அட்சரா ஆகியோரின் அன்பு பேரனும், சிவபாதசுந்தரம், இந்திராணி (ஜேர்மன்), மகேந்திரன் (மட்டக்களப்பு) இராஜேந்திரன் (ஜேர்மன்) ஆகியோரின் அன்பு சகோதரனும், விஜயலட்சுமி, ராசதுரை, இன்பராணி, ஜசிந்தா, நாகேஸ்வரி, திலகேஸ்வரி, காலஞ்சென்றவர்களான ஜெயராசா, ஜெகதீஸ்வரி, சிவகுமார் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.12.2020) ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஏழாலை உசத்தியோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்
சுஜீபன் (மகன்)

ஏழாலை மேற்கு, ஏழாலை.
077 646 1041

## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் சிவகெங்காதரன் (ராதா ஐயா)

**(ஆலய அறங்காவலரும் பிரதம குரு சங்கரத்தை பிட்டியம் பதி வீரபத்திரர் சமேத பத்திரகாளி அம்மன் ஆலயம்)**

சங்கரத்தை பத்திரகாளி கோயிலடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் - சிவகெங்காதரன் (ராதா ஐயா) 26.12.2020 சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் சிவபாதநேசம் அவர்களின் அன்பு மகனும், துரையப்பா சிவபாக்கியம் ஆறுமுகம் அவர்களின் அன்பு மருமகனும், சாவித்திரி, நடராசா காலஞானி ஆகியோரின் பெறாமகனும், சூரியகலாவின் அன்புக் கணவரும், திகழ்மதி (முகாமைத்துவ உதவியாளர் சுகாதார திணைக்களம் வட மாகாணம்) எழில்மதி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற சிற்சபேசன், சிவபூஷனம் (கனடா), சிவானந்தம், சிவநேச செல்வி, சிவனேசம், சிவகுமார் சிவமலர், சிவமங்கை, சிவபாலன் ஆகியோரின் அன்பு சகோதரனும், சீவரத்தினம், புவனேஸ்வரி, குலசிங்கம், ரட்ணராஜா, தேவி, குகசோதி ஆகியோரின் மைத்துனரும் அருள்குமார் (சினேரு என்ரபிரைஸ்), அட்சரதன் (கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனாரும், அ்சேதன் (யாழ் இந்து ஆரம்ப பாடசாலை) திலக்ஷிகா, அட்சவன் ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.12.2020) ஞாயிற்றுக்கிழமை பி.ப 1 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வழுக்கையாறு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சங்கரத்தை, வட்டுக்கோட்டை.
077 0869 706

தகவல் :
குடும்பத்தினர்

## மாணவர்களுக்கான புதிய கற்கை நெறிகள் Jan.2021 இரண்டாவது வாரத்தில் ஆரம்பமாகின்றன

**Civil Draftsperson (NVQ level 4) course - 1 year**

Minimum Qualification Passed G.C.E.(O/L) with pass in Mathematics & English

Course leads to:

- Follow course in NVQ level 5
- Register for drawings at local councils

**Computer Certificate Courses**

*(3-4 months Part time)*

- Certificate in MS OFFICE - (MS Word, Excel, Access & PowerPoint)
- Certificate in Graphic Designer - (PageMaker, PhotoShop & CorelDraw)
- Computer Hardware Technician
- Web Designing (HTML, CSS, JAVA Script, PHP, MYSQL)
- AutoCAD 2D & 3D Modeling
- Java, C++ Programming
- Accounting Package Tally

**Certificate in Craft Courses**

**(6 மாதங்கள் முழு நேரம் - தமிழ் மொழி மூலம்)**

- குளிரூட்டுதல் பயிற்சி நெறி - Refrigeration & Air-Conditioning Mechanic
- மின் இணைப்பும் நிர்மாணமும் - Electrical Wiring

மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டது. (TVEC ) பதிவு இலக்கம் : P25/0014, Facilities : Sports

For More Information : DIRECTOR
JAFFNA COLLEGE INSTITUTE OF TECHNOLOGY
VADDUKODDAI, JAFFNA, SRI LANKA.
Tel :0213213139/ 0212250975
E-mail: eicit@sltnet.lk



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 27.12.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

ஆறில்லா ஊருக்கு அழகு பாழென்றாலும் யாழில்
வேறில்லை வழுக்கியாற்றை தவிர சாறில்லாப் பூவிலும்
வெல்லமாக 'செல்பி' எடுத்து ஒரேநாளில் பேமாஸாக்கி
நல்லாயிருந்த இல்வாரையையும் நாசமாக்குவர் பார்!
–கொரோனா சித்தர்


பக்கங்கள்: 24

Registered as a Newspaper

# சஞ்சீவி

மலை 33: வள்ளுவர் ஆண்டு : 2051 மார்கழி 12 ஞாயிற்றுக்கிழமை (27.12.2020) சிகரம் : 28





பா.குமுதன்

# பசி தீர்த்த குளம் பலி எடுத்தது!


ரசீந்திரன்


சானுஜா


சஞ்சீவன்



**19.12.2020**

அன்று சனிக்கிழமை. மாலை நான்கு மணிஇருக்கும். மாடுகளின் தொல்லையில் இருந்து தனது நெற்காணியை பாதுகாப்பதற்காக தனது நண்பருடன் இணைந்து வேலியை அடைத்துவிட்டு, மதிய உணவுக்காக நெல்லுப்புலவு எனும் கிராமத்தில் அமைந்துள்ள தனது வீட்டுக்குப் புறப்பட்டார் ரசீந்திரன்.

ரசீந்திரனுக்கு பூர்வீகம் மட்டுவில். ஆனாலும் அவர் பிறந்தது வளர்ந்தது எல்லாம் வவுனிக்குளத்தை அண்டியுள்ள நெல்லுப்புலவில்தான். விவசாயத்துடன், சொந்தமாக ஒரு வாகனத்தையும் கொள்வனவு செய்து பல்வேறு தொழில்களிலும் ரசீந்திரன் ஈடுபட்டிருந்தார்.இரண்டு பிள்ளைகள். மனைவி பிரதேசசபை ஊழியர். இதனால் வேலையோடு, பிள்ளைகளையும் பகலில் பராமரிக்கும் பொறுப்பும் ரசீந்திரனுடையதே.

வீட்டுக்கு வந்து உணவருந்திவிட்டு ஓய்வெடுத்துக் கொண்டிருந்த ரசீந்திரனை,13 வயதான மகன் பிரவீனின் குரல் ஈர்த்தது.

"அப்பா, வவுனிக்குளம் வான் பாயுதாம். எல்லாரும் போய்ப் பார்க்கினம். நாங்களும் போய்ப் பாப்பமோ?" என்று ஆசையாகக் கேட்டான். நெல்லுபுலவில் இருந்து வவுனிக்குளம் வெறும் 500 மீற்றர் தூரம் தான். வீட்டிலிருந்து பார்க்கவே குளக்கட்டு தெரியும். தங்களுக்கு தண்ணீர் சுரக்கும் தாயான, வவுனிக்குளம் நிரம்பி பூரிப்போடு இருப்பதை ஒவ்வொரு வருடமும் பார்த்து மகிழ்வதென்பது ஊரவர்களுக்கு ஒரு திருவிழாவைப் போல. இந்த வருடமும் ஊரவர் எல்லோரும் போய், வவுனிக்குள அழகை ரசிக்கத் தொடங்கியிருந்த நிலையிலேயே ரசீந்திரனின் மகன் பிரவீனும் அதைப் பார்க்கும் ஆசையை தந்தையிடம் வெளிப்படுத்தியிருந்தான்.

மனைவியையும் வரும்படி அழைத்தார் ரசீந்திரன்.

" வீட்டில கொஞ்சம் வேலை இருக்கப்பா. நீங்கள் பிள்ளையளைக் கூட்டிக் கொண்டுபோய்க் காட்டிக் கொண்டு வாங்கோ"

மனைவி சொன்னதும்,

"சரி அப்ப இவைக்கு குளத்தைக் காட்டிபோட்டு, அப்பிடியே போய் வயலுக்கும் பசளை எறிஞ்சிட்டு வாறன்" என்று பிள்ளைகளான பிரவீன், சானுயா இருவரையும் தனது வாகனத்தில் ஏற்றிக் கொண்டு புறப்பட முற்பட்டவரை இன்னொரு குரல் தடுத்தது.

" எங்க குளத்துக்கோ போறீங்கள், நானும் வரட்டோ?"

அந்தக் குரலுக்குச் சொந்தக்காரன், சஞ்சீவன். பிரவீனின் வயதுக்கார பெடியன், பக்கத்துவீடு மட்டு மல்ல, இவர்களுக்குச் சொந்தமும் கூட.

" சரி வந்து ஏறு"

அவனையும் ஏற்றிக்கொண்டு ரசீந்திரன் , சானூஜாவை மடியில் இருந்தி வைத்தபடி வாகனத்தைச் செலுத்தத் தொடங்கினார். வாகனத்தின் பின்பக்கத்தில் பிரவீனும், சஞ்சீவனும்.

மாலை 4.30 .

முழுதுமாக நிரம்பி, தண்ணீர் முட்டிமோதிக் கொண்டிருந்த வவுனிக்குள அணைக்கட்டு வழியாக விரைந்து கொண்டிருந்தது ரசீந்திரனின் வாகனம். இன்னும் கொஞ்சத் தூரம் தான். சுருங்கை வந்துவிடும். சுருங்கை வழியே சீறிக்கொண்டு நுரை தள்ளியபடி பாய்ந்தோடும் நீரை தானும் பார்த்து, பிள்ளைகளுக்கும் காட்டிவிட்டால் ரசீந்திரன் வந்தவேலை முடிந்துவிடும். ஆனால், அதற்குள் சீராகச் சென்ற வாகனம், திடீரென ஓரிடத்தில் வெட்டித்திரும்ப- 'சடார்!!'

வவுனிக்குளக் கட்டில் அந்த வாகனம் கவிழ்ந்து, அப்படியே குளத்துக்குள் வீழ்ந்தது. வாகனம் விழுந்த வேகத்தில் வெளியே தூக்கி எறியப்பட்ட, பிரவீன் குளத்து நீரில் 'தொப்' பென வீழ்ந்து, மூழ்கி பின் நீருக்கு மேலே வந்தான். வந்தவனுக்கு என்ன நிகழ்கின்றதெனப் புரிந்து கொள்ளமுடியவில்லை. ஆபத்து என்பது மட்டுமே மூளையில் உறைக்க, அப்படியே வேகமாக நீந்திக் கரை சேர்ந்தான். கரையிலே எவருமில்லை. தந்தையையும், தங்கையையும், சஞ்சீவனையும் காணவில்லை. பயம் வந்தது.

" அப்பா!"

பெருங்குரலெடுத்து அழுதபடி கத்தத் தொடங்கினான். சற்றுத் தூரத்தே தங்கள் வாகனம் மூழ்கிய இடத்தை வெறித்துப் பார்த்தபடி குளிரிலும், பயத்திலும் நடுங்கியபடி அழுதுகொண்டிருந்தான். வாகனத்துக்குள்தானே அப்பாவும், தங்கச்சியும், சஞ்சீவனும்?

" அப்பா ...அப்பா..."

தந்தையைக் காணாமல் அழுத சம்பந்தருக்கு ஞானப்பால் ஊட்ட வந்த எந்தக் கடவுளரும், அன்றைக்கு பிரவீனின் தந்தையையோ, தங்கையையோ,சஞ்சீவனையோ காப்பாற்ற வரவேயில்லை.

அழுது கொண்டிருந்த பிரவீனின் முகத்தில் திடீரென ஒரு நம்பிக்கை ஒளி.


குளத்து நீரில் ஏதோ அசுமாத்தம். தண்ணீருக்கு மேலே சானுஜாவையும் ஒரு கையில் தூக்கிக் கொண்டு ரசீந்திரன் தெரிந்தார். கூடவே சஞ்சீவனும்.

" அப்பாடா, அவர்களுக்கு ஏதுமில்லை" என பிரவீன் ஆறுதலடைவதற்குள், அடுத்த நொடியே மூவரும் மீண்டும் நீருக்குள் மாயமானார்கள். இவன் இன்னும் அழத்தொடங்கினான்.

அதற்குள், வாகனம் வீழ்ந்ததைக் கண்ட இருவர் ஓடி வந்தனர். வந்தவர்களுக்கு நீந்தத் தெரியாது. கரையில் நின்று கூப்பாடு போடுவதால் எதுவும் நடந்துவிடப்போவதில்லை என்பதால், சுருங்கைப் பகுதிக்கு ஓடிப்

# ஒரு புதிய யாப்பும் தமிழ் மக்களும்

○ நிலாந்தன்







அரசாங்கம் ஒரு புதிய யாப்புக்கான முன்மொழிவுகளைக் கேட்டிருக்கிறது. அதற்குரிய கால அவகாசம் இம்மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைகிறது. தமிழ் மக்கள் மத்தியில் உள்ள பல்வேறு தரப்புகள் அவ்வாறு முன்மொழிவுகளை வழங்கி வருகின்றன.

கூட்டமைப்பு, மூத்த சட்டத்தரணியாகிய கனகேஸ்வரன் தலைமையில் ஒரு முன்மொழிவைத் தயாரிப்பதற்கான குழுவை உருவாக்கியிருக்கிறது. இதுபோலவே விக்னேஸ்வரனும் ஒரு குழுவை உருவாக்கியிருகிறார். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் ஒரு முன்மொழிவை ஏற்கனவே தயாரித்திருப்பதாகக் கூறப்படுகிறது.இது தவிர மட்டக்களப்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா ஒரு யாப்பு முன்மொழிவை தயாரித்திருக்கிறார்.இவற்றோடு தமிழ்க் கட்சிகளை ஒருங்கிணைக்கும் பணியில் ஈடுபட்டிருக்கும் மாவை சேனாதிராஜாவின் அணியும் யாப்புருவாக்கத்துக்கு ஒரு குழுவை உருவாக்கியிருக்கிறது. கட்சிகளைத் தவிர சமூக அமைப்புகளும் முன்மொழிவுகளைத் தயாரித்துள்ளன.இவை யாவும் உள்நாட்டுக்குள். நாட்டுக்கு வெளியே புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகளும் யாப்புருவாக்க முயற்சிகளில் ஈடுபடுகின்றன.

இவ்வாறு பல்வேறு தரப்புக்கள் தமிழ் மக்களுக்கான யாப்பு முன்மொழிவை உருவாக்குவது ஒரு விதத்தில் தமிழ் அரசியலின் பல்வகைமையைக் காட்டுகிறது என்று எவரும் திருப்திப்படலாம். மாறாக அது தமிழ்த் தரப்பு எந்தளவுக்குச் சிதறிப்போயிருக்கிறது என்பதைக் காட்டவில்லையா?.

அரசாங்கம் உண்மையாகவே ஒரு யாப்பை உருவாக்கப் போகிறது என்று நம்பத்தக்க நிலைமைகள் நாட்டில் இல்லை.ஒரு புதிய யாப்பு ஏன் நாட்டுக்கு தேவை? ஏனெனில் நடப்பு யாப்பு நாட்டை ஒரு தேசமாக கட்டி எழுப்பத் தவறிவிட்டது. நாட்டை ஏன் ஒரு தேசமாக கட்டி எழுப்ப முடியவில்லை? ஏனென்றால் இனங்களுக்கிடையே நல்லிணக்கத்தை உருவாக்க முடியவில்லை. ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்த பின்னரும் இனங்களுக்கிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியவில்லை.

எனவே ஆயுதமோதல் ஒரு காரணம் அல்ல. விளைவுதான். ஆயின் மூலகாரணம் எது? இன ஒடுக்குமுறைதான். இந்த நாட்டில் வாழும் மூன்று இனங்களையும் "சக நிர்மாணிகளாக" ஏற்றுக்கொள்ளாத ஓர் அரசியல் செல்நெறிதான். இன்னும் ஆழமாகச் சொன்னால் ஒரு பெரிய இனம், ஒரு பெரிய மதம் இந்த முழு தீவுக்கும் உரிமை கோருகிறது. அது ஏனைய தேசிய இனங்களை இந்த நாட்டின் சக நிர்மாணிகளாக ஏற்றுக் கொள்ளத் தயாரில்லை.இதுதான் மூல காரணம். இந்த மூல காரணத்தின் விளைவே தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம்.அந்த விளைவை 2009 ஆம் ஆண்டு தோற்கடித்து விட்டார்கள். ஆனால் மூல காரணம் அப்படியே இருக்கிறது. இப்போதிருக்கும் அரசாங்கம் அந்த மூல காரணத்தின் ஆகப்பிந்திய வளர்ச்சியாகக் காணப்படுகிறது. அது தனிச் சிங்கள வாக்காளர்களே தன்னைத் தெரிந்தெடுத்ததாகக் கூறுகிறது.எனவே இன நல்லிணக்கத்தை உருவாக்க முடியாத ஓர் அரசாங்கம் எப்படி ஒரு புதிய யாப்பை உருவாக்கப் போகிறது? நிச்சயமாக அந்த யாப்பு இன நல்லிணக்கத்தில் இருந்து உற்பத்தியாகப் போவதில்லை. அந்த யாப்பு ஒரு புதிய தேசத்தை நிர்மாணிக்கப் போவதில்லை.

உலகம் முழுவதும் போருக்குப் பின்னரான சமூகங்களை, தேசங்களை கட்டியெழுப்பும் போது புதிய யாப்பு எனப்படுவது இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தின் மீதே கட்டியெழுப்பப்படும். அதன்படி நல்லிணக்கப் பொறிமுறையின் பிரிக்கப்படவியலாத ஒரு பகுதியாகவே அது உருவாக்கப்படுகிறது. ஆனால் இலங்கைத்தீவிலோ நிலைமை தலைகீழாக இருக்கிறது. அரசாங்கத்தின் புதிய யாப்பு நல்லிணக்கப் பொறிமுறையின் ஒருபகுதியாக உருவாக்கப்படவில்லை.

அரசாங்கம் தனிச் சிங்கள வாக்குகளால் வெற்றி பெற்றதாகக் கூறிக்கொள்கிறது. தனிச் சிங்கள வாக்குத்தளம் எனப்படுவது ஏனைய சிறிய தேசிய இனங்களின் வாக்கு வங்கியில் தங்கியிருக்கத் தேவையில்லாத

**தனிச் சிங்கள வாக்குகளால் அசுர பலத்தோடு வெற்றி பெற்றிருக்கும் அரசாங்கம் ஒரு பொறியாக அல்லது தந்திரமாக முன்வைக்கும் யாப்புருவாக்க முயற்சியை அரசாங்கத்துக்கே ஒரு பொறியாக மாற்ற சிதறிக் கிடக்கும் தமிழ்த்தரப்பு ஒன்றுபட்டு முயற்சிக்குமா?**

ஒரு வெற்றி என்று பொருள். ஒரு பெரிய இனத்தால் மட்டும் தீர்மானிக்கப்படுகின்ற ஒரு அரசாங்கம் என்று பொருள். இதை இன்னும் கூராக சொல்வதானால், இந்தச் சிறிய தீவை யார் ஆள்வது என்பதனை ஏனைய சிறிய தேசிய இனங்கள் தீர்மானிக்க கூடாது என்று பொருள்.அதாவது ஏனைய சிறிய இனங்களை அவர்கள் இந்தச் சிறிய தீவின் "சக நிர்மாணிகளாக" ஏற்றுக்கொள்ளவில்லை. அப்படியென்றால் மூன்று இனங்களையும் சக நிர்மாணிகளாக ஏற்றுக்கொள்ளாத ஒரு யாப்பைத்தான் அவர்களால் உருவாக்க முடியும்.

அப்படி ஒரு யாப்பை அவர்கள் ஏன் உருவாக்க முயற்சிக்கிறார்கள்? காரணம் மிகவும் எளிமையானது. அடுத்த ஜெனீவாக் கூட்டத் தொடரை எதிர்கொள்வதற்கான ஒரு தந்திரமாக இருக்கலாம். ராஜபக்சக்கள் ஜெனீவாத் தீர்மானத்தில் இருந்து பின்வாங்கப் போகிறோம் எனக் கூறிவிட்டார்கள்.எனினும் ஜெனீவாத் தீர்மானத்தின் பிரகாரம் நிலைமாறு கால நீதியின் கீழ் உருவாக்கப்பட்ட கட்டமைப்புக்களை கலைக்காமல் தொடர்ந்தும் பேணுகிறார்கள். அப்படித்தான் யாப்புருவாக்கமும். நிலைமாறுகால நீதியின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டிய ஒரு வீட்டு வேலைதான். நிலைமாறு கால நீதியின் நான்காவது தூணாகிய மீளநிகழாமை என்ற பகுதிக்குள் அது வருகிறது. ஒரு நாட்டில் மோதலுக்கு காரணமான மூல காரணத்தை அகற்றி மோதல்கள் மீளவும் நிகழ்வதைத் தடுப்பது. அதற்கு வேண்டிய கட்டமைப்பு சார்மாற்றங்களைச் செய்வது. அவ்வாறான மாற்றங்களில் ஒன்றுதான் புதிய யாப்பும். இந்தக்காரணத்தினால் தான் அரசாங்கம் ஒரு யாப்பை உருவாக்கப் போவதாக ஒரு தோற்றத்தைக் கட்டியெழுப்புகிறது.ஜெனீவாவை எதிர்கொள்வதற்கான ஒரு தந்திரம் இது. ராஜபக்ச பாணியிலான ஒரு உள்நாட்டுப்பொறுப்புக் கூறும் பொறிமுறை? இந்தத் தந்திரத்தை தமிழ்த்தரப்பு எப்படி எதிர்கொள்ளவேண்டும்? தந்திரமாகத்தான் எதிர்கொள்ள வேண்டும்.

முதலாவதாக - இது ஒரு தந்திரம்; இது நல்லிணக்கப் பொறிமுறையிலிருந்து பிரிக்கப்பட்ட யாப்புருவாக்கம் என்பதை ஐ.நா.வுக்குஅம்பலப்படுத்தவேண்டும். ஆனால் எந்தக் கட்சியும் அதைச் செய்யவில்லை.

இரண்டாவதாக-தமிழ்த் தரப்பு யாப்புருவாக்க முயற்சியில் ஒரே தரப்பாகத் திரள வேண்டும்.இன்னும் ஆழமாகச் சொன்னால், ஒரு தேசமாகத் திரள வேண்டும்.அது ஒரு தேசத்தின் முன்மொழிவாயிருக்க வேண்டும்.


மூன்றாவதாக - ஒரு புதிய தேசத்தை நிர்மாணிப்பதற்கான இலங்கைத்தீவின் புதிய யாப்பு எனப்படுவது தமிழ் மக்களை ஒரு தேசமாக ஏற்றுக்கொள்ள வேண்டும். அந்த அடிப்படையில் யாப்பு முன்மொழிவைத் தயாரிக்க வேண்டும். அரசாங்கம் அதை ஏற்றுக்கொள்ளுமோ இல்லையோ தமிழ் மக்கள் தங்களை ஒரு தேசமாகப் பிரகடனப்படுத்த வேண்டும். ஒரு தேசம் என்பதன் அடிப்படையிலேயே ஒரு கூட்டாட்சியைக் கேட்கவேண்டும்.


*(15ஆம் பக்கம் பார்க்க)*





○ தி.ராஜ்





# இலங்கைக்கு அழுத்தமா? தமிழருக்கான நீதியா?

வீரிட்டு அழுகின்ற குழந்தைக்கு உணவு ஊட்டுவதற்கு தூரத்தே தெரியும் நிலவைக் காண்பிப்பதைப்போல, 10 ஆண்டுகளாக நீதிக்காக ஓடித் தேய்ந்து கொண்டிருக்கும் தமிழினத்துக்கு 'ஜெனீவாவைக்' காண்பித்து திருப்திப்படுத்தப் பார்க்கின்றன தமிழ்த் தேசியக் கட்சிகள். இந்தத் தமிழ்த் தேசியக் கட்சிகள் கூட்டினுள் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மாத்திரம் விதிவிலக்கு. 'ஜெனீவா நாடக அரங்கு' எப்போது திறந்ததோ அப்போதிலிருந்து அதன் மீதான நம்பிக்கையீனத்தை வெளிப்படுத்திவரும் தமிழ்த் தேசியக் கட்சி ஒன்றே ஒன்றுதான். அது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிதான். இப்போதும் அதே நிலைப்பாட்டையே அந்தக் கட்சி பிரதிபலிக்கின்றது.

**10 ஆண்டுகளில் பூஜ்ஜியம்**

ஜெனீவா நாடக அரங்கு 2012ஆம் ஆண்டு திறந்தது. அன்றிலிருந்து இன்று வரை மார்ச் மற்றும் செப்ரெம்பர் மாதங்களில் 'ஜெனீவா' 'ஜெனீவா' என்று தமிழ் அரசியல்வாதிகள் புலம்புவதுதான் வாடிக்கை. ஐ.நா. மனித உரிமைகள் சபை ஊடாக இதுவரை தமிழருக்கு நீதி கிடைக்கவில்லை. தீர்வு எட்டப்படவில்லை. ஆனாலும் செக்கு மாட்டைப்போல திரும்பத் திரும்ப ஜெனீவா அரங்கிலேயே தமிழ் அரசியல்வாதிகள் சுற்றிக் கொண்டிருக்கின்றனர்.

**பலவீனம்**

ஐ.நா. மனித உரிமைகள் சபை ஒன்றும் ஐ.நா. பாதுகாப்புச் சபை போன்று பலமானதல்ல. ஐ.நா. மனித உரிமைகள் சபையில் தீர்மானங்கள் எதுவும் நிறைவேற்றலாம். ஆனால் அந்தத் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்கு, எந்த நாட்டுக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்பட்டதோ அந்த நாடு இணங்கியாகவேண்டும். சம்பந்தப்பட்ட நாடு இணங்க மறுத்தால், திமிறினால் ஐ.நா. மனித உரிமைகள் சபை வேடிக்கைதான் பார்க்க முடியும். இலங்கை விடயத்தில் இதுதான் நடந்தது. நடக்கின்றது.

ஐ.நா. மனித உரிமைகள் சபை ஊடாக 'மென்வலு' இலங்கை மீது பிரயோகிக்கப்பட்டது. 'வன்வலு' பிரயோகிக்கப்பட்டால் கூட அதைச் செய்ய மறுக்கும் இலங்கை மீது 'மென்வலு' பிரயோகிக்கப்பட்டால் எதுவும் நடக்காது.

2014ஆம் ஆண்டு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளராக இருந்த நவநீதம்பிள்ளை அம்மையாரால் மனித உரிமைகள் ஆணையக விசாரணை இலங்கைக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டது. (இதனையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனும், சுமந்திரனும் சர்வதேச விசாரணை என்று தமிழர்களின் காதில் பூ சுத்தி வருகின்றனர்.)

அந்த விசாரணை அறிக்கையின் பிரகாரம் போரின் போது இழைக்கப்பட்ட குற்றங்களை விசாரிப்பதற்கான நீதிப் பொறிமுறையை அமைப்பதிலேதான் 'தமிழ்க் கூட்டமைப்பு - நல்லாட்சி அரசு' நாடகம் உச்சம் பெற்றது. கலப்பு நீதிமன்ற பொறிமுறைக்கு, உள்ளகப் பொறிமுறை, சர்வதேசப் பொறிமுறை என்று வார்த்தைகளால் விளையாடி, இலங்கை அரசுக்கு கால அவகாசத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெற்றுக் கொடுத்தது.

**தனிமனித அழிவு**

ஜெனீவா விவகாரங்களை 2011ஆம் ஆண்டிலிருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் கையாண்டு வருபவர் எம்.ஏ.சுமந்திரன். தனி மனிதனின் கையில் பொறுப்பை ஒப்படைத்துவிட்டு ஏனையோர் பேசாமடைந்தைகளாகினர். நல்லாட்சி அரசுடன் நெருக்கமான ஊடாட்டத்தைப் பேணிய எம்.ஏ.சுமந்திரன், இலங்கை அரசுக்கு கால அவகாசத்தை மூன்று தடவைகள் பெற்றுக் கொடுத்தார். இரண்டாவது தடவை கால அவகாசத்தை அவர் பெற்றுக் கொடுக்க முனைந்தபோது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் 'ஒரு பகுதி' நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதை மறுதலித்து ஐ.நா. மனித உரிமைகள் ஆணையருக்கு கடிதம் அனுப்பியபோதும், எல்லோரையும் வவுனியாவுக்கு அழைத்து 'மூளைச்சலவை' செய்து அந்தக் கடிதத்தை மீளப் பெறச் செய்தவர் சுமந்திரன்.

'இலங்கைக்கு கால அவகாசம்' பெற்றுக் கொடுக்கின்றார் சுமந்திரன் என்று தமிழ்த் தேசியப் பரப்பில் பலமான குற்றச்சாட்டு எழும்போது வழக்கம்போன்று தனது பாசையில் அவர், 'இலங்கை மீதான கண்காணிப்பு நீடிப்பே' வழங்கப்படுகின்றது என்றார்.

இலங்கையின் அரசுகளைக் காப்பாற்றி, தமிழரின் நீதிக்கான தேடலைத் தொலைக்க முயன்றவர் சுமந்திரன். தனித்து சுமந்திரன் மீது குற்றம் சுமத்திவிட்டு கூட்டமைப்பின் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களும் தப்பித்துவிட முடியாது. அவர்களும் முதுகெலும்பில்லாதவர்களாக சுமந்திரன் சொல்வதெற்கெல்லாம் 'ஆமாம்' போட்டதால் வந்த விளைவு இது.

**வல்லரசுக்கு தாளம்**

இப்போது மீண்டும் 'ஜெனீவா நாடக அரங்கு' தூசு தட்டப்படுகின்றது. இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுப்பதற்காகவா அல்லது பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்கவா இந்த அரங்கு மீண்டும் திறக்கப்படுகின்றது என்ற கேள்வி முக்கியமானது. இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டிய வல்லரசுகளின் தேவைக்காக தமிழர் விவகாரம் கறிவேப்பிலையாக மீண்டும் பயன்படுத்தப்படுகின்றது.

வல்லரசுகளின் தாளத்துக்கு இப்போது சுமந்திரன் ஆடுகின்றார். இழைக்கப்பட்ட போர்க் குற்றங்களுக்கு நீதி வேண்டும் என்பது பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் அவா. இலங்கை அரசை தன் வழிக்கு கொண்டு வருவதற்கு அழுத்தங்கள் பிரயோகிக்கவேண்டும் என்பது அமெரிக்க வல்லரசின் நோக்கம்.

ஜெனீவா அரங்கு ஊடாக இலங்கை அரசு மீது 'மென்வலு' அழுத்தத்தை பிரயோகிக்க விரும்பும் அமெரிக்காவின் தேவையை தமிழர் பிரச்சினையை வைத்து பூர்த்திசெய்ய முயற்சிக்கப்படுகின்றது.

**மற்றொரு தீர்மானம்**

இலங்கை தொடர்பில் மற்றொரு தீர்மானம் தொடர்பில் பேசப்படுகின்றது. ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அமெரிக்கா இல்லாததன் காரணமாக பிரிட்டன், இணை அனுசரணை நாடுகள் இணைந்து தீர்மானத்தை முன்வைக்கவுள்ளன. பிரிட்டன் தீர்மானம் முன்வைப்பது தொடர்பில் தமிழ்த் தேசியக் கட்சிகள் அனைத்துடனும் கலந்துரையாடல் நடத்தியுள்ளது.

'இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை கடந்த காலத் தீர்மானங்கள் போன்று முன்வைக்க முடியாது. இலங்கை அரசு தீர்மானத்துக்கு இணைஅனுசரணை வழங்காது. எதிர்க்கும். அத்துடன் கொரோனா இடர் நேரத்தில் இலங்கைக்கு அவசரமாக வந்த சீனக் குழு இலங்கையை சர்வதேச அரங்கிலிருந்து காப்பாற்றும் என்ற உறுதிமொழியையும் வழங்கியிருக்கின்றது. எனவே தீர்மானத்தைக் கொண்டு வரும்போது அது வெல்வதற்காக 24 நாடுகளின் ஆதரவை ஆகக் குறைந்தது திரட்டவேண்டியிருக்கும். எனவே கனதியான தீர்மானம் இலங்கைக்கு எதிராக முன்வைப்பது சாத்தியக் குறைவானது' என்று தமிழ்த் தேசியக் கட்சிகளுடனான கலந்துரையாடலில் பிரிட்டன் நிலைப்பாட்டை எடுத்தியம்பியுள்ளது.

**சுமந்திரனின் கடிதம்**

இதன் பின்னரே இலங்கை அரசுக்கு கடந்த காலங்களில் கால அவகாசத்தைப் பெற்றுக் கொடுத்த ஒரு தொகுதி புலம்பெயர் அமைப்புக்களால் வரையப்பட்ட வரைவு ஒன்று நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் ஊடாக, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.வி. விக்னேஸ்வரனுக்கும் கையளிக்கப்பட்டது. 'இலங்கைக்கு கால அவகாசம்' வழங்கும் மென்மையான பிரேரணையாக அது இருந்தமையால் கஜேந்திரகுமாரும், விக்னேஸ்வரனும் நிராகரித்துவிட்டார்கள். ஆனால் வழக்கம் போல சுமந்திரன் அதில் அப்படியொரு வாசகமே இல்லை என்று வாதிடுகின்றார். 'பூ' என்றும் சொல்லலாம் 'புஷ்பம்' என்றும் சொல்லலாம் என்ற கதை போலதான் சுமந்திரனின் இந்த வாதாட்டம்.

**அமெரிக்காவுக்கு பின்னடைவு**

இதற்கிடையில் அமெரிக்காவுக்கு மிகப் பெரிய அவமானத்தையும் ஏமாற்றத்தையும் கொடுக்கும் நகர்வு ஒன்று நடைபெற்றது. மிலேனியம் சவால் உடன்படிக்கையில் இலங்கையை கைச்சாத்திடச் செய்ய அமெரிக்காவால் முடியவில்லை. ஆனானப்பட்ட வல்லரசான அமெரிக்கா, மாங்கொட்டை அளவில் இருக்கும் இலங்கையிடம் தோற்றுப்போனது.

இதன் பின்னர் அமெரிக்கா தனது வியூகத்தை மாற்றியது. இலங்கை தொடர்பில் முன்னர் கொண்டு வந்த தீர்மானங்களைவிட கனதியான வாசகங்களுடன் தீர்மானத்தைக் கொண்டு வருவதற்கு திட்டமிட்டது. இது தொடர்பில் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனுக்கும் அது தெரிவித்தது. இந்த பின்னணியிலேயே, முன்னர் கொடுத்த வரைவில் மாற்றங்களைச் செய்து ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரிடம் சமர்ப்பிக்க கூட்டமைப்பு (சகல கட்சிகளும் இணங்கவில்லை) முடிவு செய்துள்ளது எனச் சொல்லப்படுகின்றது.

**ஜெனீவா பொருத்தமான களமா?**

ஜெனீவா அரங்கில் இலங்கைக்கு எதிராக 6 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. அதில் இறுதி மூன்று தீர்மானங்களும் இலங்கை அரசும் இணை அனுசரணை வழங்கி, கால அவகாசம் வழங்கி நிறைவேற்றப்பட்டன. இவை எதுவும் நடைமுறைப்படுத்தப்படாத சூழலில் இலங்கைக்கு எதிராக ஜெனிவாவில் மீண்டும் தீர்மானம் நிறைவேற்றுவதால் என்ன நடக்கப்போகின்றது? எனவே இந்த இடத்தில் துணிந்து சில காரியங்களை மேற்கொள்ள வேண்டிய தேவை பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கும் அவர்கள் தம் பிரதிநிதிகளுக்கும் எழுந்துள்ளன. விசப் பரீட்சையில், அமிலச் சோதனையில் களமிறங்க வேண்டிய சூழல் எழுந்துள்ளது. இந்தச் சூழல் ஒன்றும் பஞ்சு மெத்தை அல்ல. கத்தி மேல் நடப்பதைப் போன்றது. கரணம் தப்பினால் மரணம் என்கின்ற நிலைதான். ஆனால் இதுவரையிலும் ஜெனீவா அரங்கால் எதுவும் நடக்காத நிலையிலும், எதுவும் நடக்கப்போவதில்லை என்ற நிலையிலும் இந்த முடிவை துணிந்து எடுப்பது காலத்தின்தேவை.

**ஐ.சி.சி.**

தமிழர்களுக்கு நீதி தேடும் விவகாரத்தை ஜெனீவா அரங்கில் மீண்டும் கொண்டுவர வேண்டாம். எங்கள் விடயத்தை ஐ.சி.சிக்கோ (சர்வதேச குற்றவியல் நீதிமன்றம்) ஐ.சி.ஜேக்கோ அல்லது சிறப்பு தீர்ப்பாயம் ஊடாகவோ தீர்வைப் பெற்றுத்தாருங்கள் என்று வல்லரசுகளிடம் பாதிக்கப்பட்ட தமிழர் தரப்பு ஒரே குரலில் கோரவேண்டும். வல்லரசுகளுக்கு இலங்கை அரசை ஆட்டுவிக்க வேண்டிய தேவை இப்போது. அவர்களின் இலகுவான தெரிவு ஜெனீவா. ஆனால் அதன் ஊடாகத் தமிழருக்கு நீதி கிடைக்காது. எனவே பாதிக்கப்பட்ட எங்களுக்கு இதுதான் தேவை என்பதைச் சொன்னால் அதனைச் செய்யவேண்டிய கட்டாய சூழல் வல்லரசுகளுக்கு இப்போது எழுந்திருக்கின்றது. அதை கனகச்சிதமாகப் பயன்படுத்தவேண்டும். ஆனால் ஜெனீவா அரங்கு வேண்டாம், ஐ.சி.சி. தான் வேண்டும் என்று பாதிக்கப்பட்ட மக்களின் குரலை அழுத்தமாகவும் நேர்த்தியாகவும் வலியுறுத்த தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றுபடுமா?




# எம்.சி.சி ஒப்பந்தம் ஏன் கடாசப்பட்டது?

அ.நிக்ஸன்

திருகோணமலை நகரை கொழும்பு நகரின் உப நகரமாக மாற்றுவது உட்பட இலங்கைத் தீவின் அபிவிருத்தித் திட்டங்களை மையமாகக் கொண்ட அமெரிக்காவின் 'மிலேனியம் சவால்கள்' கூட்டுத்தாபனம் (Millennium Challenge Cooperation MCC) இலங்கையோடு செய்யவிருந்த ஒப்பந்தத்தைக் கடந்தவாரம் ரத்துச் செய்துள்ளது.

2018ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் நியூயோர்க்கில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபைக் கூட்டத்தில் அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உரையாற்றச் சென்றிருந்தார். அதன் போதே அமெரிக்காவின் மிலேனியம் சவால்கள் கூட்டுத்தாபனத்தின் அப்போதைய நிறைவேற்று அதிகாரி புரோக் பியேர்மன், (Brock Bierman) மைத்திரிபால சிறிசேனவை சந்தித்து உரையாடியிருந்தார். 480 மில்லியன் டொலர் நிதியை தானாகவே வழங்க அவர் முன்வந்தார். இது பற்றி மைத்திரிபால சிறிசேன அப்போது நியூயோர்க்கில் இலங்கைச் செய்தியாளர்களைச் சந்தித்துக் கூறியுமிருந்தார். இதன் பிரகாரம் இந்த நிதியை வழங்குவதற்கான ஒப்பந்தம் 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் கைச்சாத்திடப்பட்டிருக்க வேண்டும். ஆனால் மகாநாயக்க தேரர்கள், பௌத்தகுருமாரின் எதிர்ப்புகள் காரணமாகவே ஒப்பந்தம் கைச்சாத்திடத் தாமதமாகியது.

இலங்கையில் விவசாயத்துக்குரிய நிலங்களை விற்பதற்குரிய நிலங்களாக மாற்றுவதே இந்த ஒப்பந்தத்தின் பிரதான இலக்காக இருந்தது. இதனால் இலங்கை அரசாங்கத்திடம் இருக்கும் எண்பது சத வீதமான விவசாய நிலங்கள் பறிபோய்விடும் என்ற அச்சத்தினாலேயே பௌத்தகுருமார் இதற்குக் கடும் எதிர்ப்பு வெளியிட்டிருந்தனர் என்பது பொதுவாகத் தெரிந்த கதை.

ஆனால் கொழும்பின் உப நகரமாகத் திருகோணமலை நகரை மாற்றியமைப்பதே இந்த ஒப்பந்தத்தின் பிரதான நோக்கம். கொழும்பில் இருந்து திருகோணமலைக்கும், திருகோணமலையில் இருந்து கொழும்புக்கும் குறைந்தது மூன்று மணிநேரத்தில் செல்வதற்குரிய அதிவேக நெடுஞ்சாலை அமைக்கும் திட்டம் எம்.சி.சி எனப்படும் இந்த ஒப்பந்தத்தின் பிரதான உள்ளடக்கங்களில் ஒன்று. இதன் காரணமாகவே ஆரம்பத்தில் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட மைத்திரி - ரணில் அரசாங்கம் விருப்பம் கொண்டிருந்து.

இதேகாலப் பகுதியில்தான் இலங்கை இராணுவத்துக்கு மில்லியன் அமெரிக்க டொலர் நிதியை வழங்கவுள்ளது என அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் அறிவித்துமிருந்தது. இராஜாங்கத் திணைக்களத்தின் பேச்சாளர் ஹீதர் நொயட், இந்து சமுத்திர வலய பாதுகாப்புக் குறித்து கவனம் செலுத்தி வருகிறே அதனடிப்படையில் இந்த நிதியை வழங்குவதாகவும் அப்போது கூறியிருந்தார். ஆகவே திருகோணமலை நகரை மையப்படுத்தியதாக அமைந்திருந்த எம்.சி.சி ஒப்பந்தத்தைப் பயன்படுத்தி, கிழக்குப் பிரதேசத்தை தமிழ் பேசும் மக்கள் தமது தாயகப் பிரதேசம் என்று கூற முடியாத அளவுக்கு இலகுவான முறையில் சிதைக்கக் கூடியதாக இருக்கும். இதன் மூலம் வடக்கு, கிழக்கு நில அடிப்படையில் இணைய முடியாதவொரு சூழலும் உருவாகியிருக்கும்.

இந்தத் திட்டத்தை வெளிப்படையாகச் சிங்களக் கடும்போக்காளர்களுக்கு எடுத்துக் கூறமுடியாத நிலமை அன்று மைத்திரி- ரணில் அரசாங்கத்துக்கு ஏற்பட்டிருந்தது. ஏனெனில் 2015 மேற்குலக நாடுகளின் திட்டத்தின்படி நல்லாட்சி என்று கூறியே அவர்கள் ஆட்சியமைத்திருந்தனர். அத்தோடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவையும் காப்பாற்ற வேண்டியதொரு தேவை ரணில் விக்கரமசிங்கவுக்கும் இருந்தது. தற்போது இந்த ஒப்பந்தம் ரத்துச் செய்யப்பட்டதால், அமெரிக்கா இலங்கை மீது கோபமாக இருப்பதாகவும், இதனால் கடும் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு அது ஜெனீவா மனித உரிமைச் சபை வரை தாக்கம் செலுத்தும் எனவும் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

ஆனால் இங்கு பிரச்சினை அதுவல்ல. ஒரு காலத்தில் ராஜபக்ச குடும்பத்தின் நெருங்கிய நண்பராக இருந்த முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவும் கோத்தாபய ராஜபக்சவும் முரண்பட்டுக் கொண்டதே காரணமாகும். இந்த ஒப்பந்தத்தை அப்போது செயற்படுத்த இருந்தவர் பாட்டலி சம்பிக்க ரணவக்க. இவர் மைத்திரி -ரணில் அரசாங்கத்தில் நகர அபிவிருத்தி அமைச்சராக இருந்தவர். இவருடைய பரிந்துரையின்பேரிலேயே அப்போது கொழும்பு -திருகோணமலை அதிவேகச் சாலைக்கான வரைபடம் தயாரிக்கப்பட்டிருந்தது.

> இலங்கையில் விவசாயத்துக்குரிய நிலங்களை விற்பதற்குரிய நிலங்களாக மாற்றுவதே இந்த ஒப்பந்தத்தின் பிரதான இலக்காக இருந்தது. இதனால் இலங்கை அரசாங்கத்திடம் இருக்கும் எண்பது சதவீதமான விவசாய நிலங்கள் பறிபோய்விடும் என்ற அச்சத்தினாலேயே பௌத்தகுருமார் இதற்குக் கடும் எதிர்ப்பு வெளியிட்டிருந்தனர் என்பது பொதுவாகத் தெரிந்த கதை.

அதிவேகச் சாலையோடு சேர்ந்து திருகோணமலை நகரை எப்படி சிங்கள மயப்படுத்துவது என்பதற்கான திட்டவரைபாக வும் அது அமைந்திருந்தது. அந்த வரைபடத்தை பாட்டலி சம்பிக்க ரணவக்க அன்று முதன் முதலில் சம்பந்தனிடமே கையளித்துமிருந்தார். அதன் உள்ளடக்கம், அது பற்றிய ஆபத்துக்கள் எதனையுமே சம்பந்தன் அறிந்திருக்க வாய்ப்பில்லையா அல்லது தெரிந்தும் தனது இயலாமையால் அமைதியாக இருந்தாரா என்பது பற்றிய கேள்விகளும் உண்டு.

திருகோணமலை நகர அபிவிருத்தி என்ற வாஞ்சையோடு அந்த வரைபடத்தை சம்பந்தன் பாட்டலி சம்பிக்க ரணவக்கவிடம் இருந்து பெற்றிருக்கவும் கூடும்.

இருப்பினும் சம்பிக்க ரணவக்கவோடு எழுந்த முரண்பாட் டால், இந்த ஒப்பந்தம் கைகூடவில்லை. அமெரிக்காவினால் ஒப்பந்தம் ரத்துச் செய்யப்பட்டமை தொடர்பாக சம்பிக்க ரணவக்க, மங்கள சமரவீர ஆகியோர் கூட இதுவரை கருத்துக்களை வெளியிடவும் இல்லை. இருந்தாலும் திருகோணமலை தற்காலிகமாகத் தப்பியது என்பதே ஆறுதல்

அதேவேளை, ரணில் - மைத்திரி அரசாங்கத்தில் அம்பாந்தோட்டைத் துறைமுகம் 99 வருடக் குத்தகைக்கு சீனாவுக்கு வழங்கப்பட்டுள்ளது. அந்தக் குத்தகைக்கான ஒப்பந்தத்தையும் ரத்துச் செய்ய வேண்டியதொரு அவசியம் கோத்தாபயவுக்கு உண்டு.

ஆகவே எம்.சி.சி ஒப்பந்தத்தில் கைச்சாத்திடாமல் தவிர்த்ததன் மூலம், அம்பாந்தோட்டைத் துறைமுகக் குத்தகைக்கான ஒப்பந்தத்தையும் செயற்படுத்தாமல் தவிர்த்துக்கொள்ள முடியுமென கோத்தாபய கருதவும் கூடும். அதன் மூலம் இலங்கை, அமெரிக்கா பக்கமும் இல்லை சீனாவோடும் இல்லை இலங்கை தனித்துவமாகவே செயற்படுகின்றது என்றவொரு செய்தியை ஒப்பாசாரத்துக்கேனும் சிங்கள மக்களுக்குக் கூற வசதியாக இருக்குமென்றும் கோத்தாபய நம்புகிறார் போலும்.

எம்.சி.சி ஒப்பந்தம் ரத்துச் செய்யப்பட்டாலும், அது வேறொரு வடிவில் அல்லது இலங்கை கேட்கின்ற வேறு விடயதானங்களுக்கு அமெரிக்கா விட்டுக் கொடுக்கக்கூடிய ஏது நிலையும் உண்டு.

எம்.சி.சி ஒப்பந்தத்தில் இலங்கை கைச்சாத்திடாவிட்டாலும் பிரச்சினையில்லை என்று ராஜாங்கச் செயலாளர் மைக் பொம்பியோ கடந்த ஒக்ரோபர் மாத இறுதியில் கொழும்புக்கு வந்தபோது ரூபவாஹினி தொலைக்காட்சிக்கு வழங்கியிருந்த நேர்காணலில் கூறியிருந்தார் என்பது இங்கு நோக்க வேண்டிய ஒன்று.

ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலை குறித்த பேச்சுக்களை மையமாகக் கொண்டே இலங்கையில் சிங்கள ஆட்சியாளர்களின் நகர்வுகள் ஒவ்வொன்றும் அமைகின்றன. மேற்குலக நாடுகளின் திட்டங்களினால் இலங்கையில் ஆட்சி மாற்றப்பட்டாலும், அந்த மேற்குலக நாடுகள் மற்றும் இந்தியா, ஜப்பான் போன்ற நாடுகளின் இந்தோ பசுபிக் பிராந்தியப் பாதுகாப்புத் திட்டங்களுக்கு ஒத்துழைத்தல், அந்த நாடுகளின் நோக்கங்களைச் செயற்படுத்துதல் என்பதில் சிங்கள ஆட்சியாளர்கள் கவனம் செலுத்துவர் என்பது கண்கூடு.



# கள்ளமௌனம் கலையட்டும்!

எஸ்.ராஜ்குமார்






ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 46ஆவது கூட்டத்தொடர் பெப்ரவரி மாதம் 22ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில், அது தொடர்பான காய் நகர்த்தல்கள் தீவிரம் பெற்றுள்ளன. எனினும் தமிழ்த் தலைமைகள் தொடர்ந்தும் கள்ளமௌனம் காத்து வருகின்றன. தமிழ்த் தேசியக் கட்சிகள் ஓரணியில் நின்று ஒருமனதாக முடிவெடுத்து வலுவானதாக, கனதியானதாக ஓர் அறிக்கையை இதுவரை வெளியிடவில்லை. பொறிமுறைகள் உருவாக்கப்பட வேண்டிய நேரத்தில் இவ்வாறு கள்ள மௌனம் காத்துவிட்டு, பின்னர் தனியே ஓரிருவர் மீது பழிபோடுவதால் என்ன நிகழ்ந்துவிடப் போகின்றது?

இலங்கை அரசினால் மேற்கொள்ளப் பட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று 2012ஆம் ஆண்டிலிருந்து இலங்கைக்கு எதிராக இந்தப் பேரவையில் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதுவரை 20 பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன. ஆனால் அவற்றுக்கெல்லாம் 'டிமிக்கி 'கொடுத்து வந்த இலங்கை, இந்த ஆண்டின் முற்பகுதியில் நடைபெற்ற கூட்டத்தொடருக்குச் சென்று இந்தப் பேரவையின் தீர்மானங்களுக்கு கட்டுப்பட முடியாதென்றும் தாம் வெளியேறுவதாகவும் எங்களை அறுத்து விட்டு விடும்படியும் அழுத்தமாக சொல்லிவிட்டு வந்துவிட்டது.

இது, ஊருக்குள்ளே பல கொலைகளைச் செய்த ஒருவன் குற்றவாளியாக காணப்பட்டு அவனுக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு விசாரணைகள் நடைபெற்று வரும் நிலையில் அந்த கொலைகாரன் நீதி மன்றத்துக்குச் சென்று "இந்த வழக்கை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன், இதிலிருந்து நான் விலகுகிறேன் "என்று சொல்லிவிட்டு வருவது போலவும், அப்படிச் சொன்னதும் அந்த நீதிமன்றமும் அவனை எதுவும் செய்யாது விட்டுவிடும் என்பது போலவும் இருக்கிறது.

இவ்வளவு கெத்தாக, ஜெனிவாவில் சொல்லிவிட்டு வந்த இலங்கை, இனி ஐக்கிய நாடுகளின் மனித உரிமை பேரவை எங்களை ஒன்றும் புடுங்க முடியாது என்ற ரீதியில் அலப்பறை பண்ணிக் கொண்டிருந்தது. ஆனால் இப்போது தமது தரப்பு (அ)நியாயத்தைச் சொல்லப்போவதாக கிளம்பத் தயாராகி வருகிறது. அதற்கு முன்னேற்பாடாக மாகாணசபைத் தேர்தல்களை நடத்தப் போவதாகவும், தமிழர் தரப்புடன் பேசப்போவதாகவும், காணாமல்போனோர் அலுவலகத்தை செயல்படுத்தி ஒப்புக்குச் சப்பாணியாக ஒரு காணாமல் போனோர் பட்டியலை வெளியிட்டும் இருக்கிறது. அடுத்து அரச தரப்பிலுள்ள சில தமிழ் 'ஜால்ரா'க்களுடன் ஜெனிவாவிலே போய் இறங்கி அவர்கள் மூலமாக இவைகளையெல்லாம் சாதனைகளாகச் சொல்லப்பண்ணி அடுத்த பிரேரணைக்கு ஆப்பு வைக்க திட்டமிட்டு வருகிறது இலங்கைத் தரப்பு. இலங்கை அரசின் அடாவடியான போக்கால் கடுப்பாகியிருக்கிறது சர்வதேசம். முஸ்லிம் எதிர்ப்பு நடவடிக்கைகளால் வெறுத்துப்போயிருக்கின்றன முஸ்லிம் நாடுகள். இவ்வாறானதொரு நிலையில் அமெரிக்காவும் பிரிட்ட னும் இணைந்து புதிய பிரேரணை ஒன்றைக் கொண்டு வரத் திட்டமிட்டு செயல்பட்டு வருகின்றன. இந்தப் பிரேரணையின் நகல் ஒன்று இலங்கையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகச் சொல்லப்படுகிறது. தமிழ்க் கட்சிகளை ஒன்றுபட்டு ஏகமனதான தீர்மானங்களைச் சமர்ப்பிக்கும்படி கேட்டிருக்கிறது பிரிட்டன். ஆனால் தமிழ் தரப்பிலோ நிலைமை தலைகீழ்.

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என்ற முப்பெரும் கட்சிகளும் இணைந்து இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் பாரப்படுத்த வேண்டும் அல்லது சர்வதேச தீர்ப்பாயத்தின் முன் நிறுத்த வேண்டும் அல்லது விசேட ஆய்வாளர் அல்லது சர்வதேச நீதிமன்றம் என்று எங்காவது சிக்கலில் சிக்கவைக்க வேண்டும் என்பது தமிழர்களின் வேணவாவாக இருக்க, சுமந்திரன் மட்டும் முந்திரிக்கொட்டையாக முந்திக்கொண்டு அமெரிக்க மற்றும் பிரிட்டன் தூதுவர்களை தனியே சந்தித்து வருகிறார்.

ஏனைய கட்சிகளோ அதைக் கேட்போம்; இதை வலியுறுத்துவோம் என்று வாய்ச்சவடால் விட்டுக் கொண்டிருக்கின்றன.

தற்போது தனிமனிதனின் கைகளுக்குள் அனைத்தும் செல்லும்படியாக விட்டுவிட்டு, ஒற்றை மனிதன் ஒரு தேசத்துக்கே உரித்தான முடிவுகளை எடுக்கும்படியாகப் பண்ணிவிட்டு அனைத்தும் முடிந்தபின்னர் காட்டுக்கத்தல் கத்துவதாலோ, அவர் சொதப்பிவிட்டார்; இவர் கவிழ்த்துவிட்டார் என்று புலம்புவதாலோ என்ன பயன் வந்துவிடப் போகின்றது. கள்ளமௌனம் காத்தலும் பாரதூரமான குற்றமே. மௌனம் கலையுங்கள் இனியேனும்! ■



## II குழைக்காட்டு கதைகள்

### கதை I

முதல் நாள் கனமழை பெய்திருந்தது. நானும் அப்பாவும் வயல் உழுவதற்குப் போயிருந்தோம். எங்களிடம் இரண்டு எருதுகள் நின்றன. ஒன்று நல்ல சிவலை. அதற்கு 'ராஜா' என்று பேரும் வைத்திருந்தேன். நல்ல திமில். பெருத்த புஷ்டியான எருது. எமது பட்டியில் இருந்த நாம்பன்தான் அது. நல்ல வடிவு. ஆனால் ஆள் பச்சைக்கள்ளன். நாலு காலையும் பிரட்டி உழவின் நடுவே விழுந்தும் கிடக்கும். மற்றது சுட்டியன். நல்ல மாடு. பயந்த சுபாவம் . ஆனால் தொழிலுக்கேற்ற மாடு. "நெற்றிச் சுட்டி நேரே கொடிச்சி வால், நாலு கால் சிலம்பம்" அந்த மாட்டின் இலட்சணச் சிறப்பை அடிக்கடி அப்பா சொல்லுவார். மாடுகளுக்கு சிறப்பை சொல்வதில் அவர் பழுத்த அனுபவசாலி. உழத் தொடங்கினோம். தரை சரியான ஈரமாக இருந்தது. உழவு பொலியவில்லை. கலப்பையின் படவாளில் மண் கும்பியாக ஒட்டிக் கொண்டது. சிவலையும் இரண்டு தரம் தொப்பென்று விழுந்து படுத்தும் விட்டது. ஒரு வயல் உழுவதற்கிடையில் மாடுகளும் நாங்களும் களைத்து விட்டோம்.

"வேண்டாம் மோனை நாலுநாள் கழித்து உழுவோம் .
மாட்டை அவிழ். ஈரத்தில் உழ ஏலாது"

உழவு திருப்தியில்லை. திரும்பிவிட்டோம்.

### கதை II

தங்கமயில் மாமா நல்ல பிரயாசைக்காரர். நல்ல கமக்காரன். கண்டாவளையில் பத்து ஏக்கர் கமம் சொந்தமாக இருந்தது. வருடா வருடம் நல்ல விளைச்சல். சொந்தமாக 135 மொடல் உழவு இயந்திரம், கலப்பை எல்லாம் வாங்கிக் கொண்டார். எல்லாம் கண்டாவளை பத்து ஏக்கர் கமம் தந்த பலாபலன் என்று அடிக்கடி சொல்லிக் கொள்வார். கூடவே இரண்டு வேலையாட்களும் இருந்தனர். ஊரில் நிற்பதைவிட கமத்திலைதான் அதிக நாள்கள் நிற்பார். இடையில் வவுனிக்குளத்தில், குளத்துக்கு கிட்டவாக 10 ஏக்கர் கமம் மலிவாக வரவே அதையும் வாங்கிக் கொண்டார். கண்டாவளைக்கும் வவுனிக்குளத்துக்கும் இடையிலான தூரத்தை அவர் கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை.

இரண்டு கமத்துக்கும் விதைப்புக்கு ஏற்பாடு செய்ய மிகவும் சிரமமாக இருந்தது. வவுனிக்குளம் விதைத்து கண்டாவளைக்கு வர காணியில் தண்ணீர் கூடி விட்டது. சரி சேற்றடி அடித்து விதைத்து விட்டுச் செல்.வோம் என அவர் போகையில் வவுனிக்குளப் பசளை போடும் காலம் தப்பிவிட்டது. சரியான சீரழிவு. நிலைமையைப் புரிந்து கொண்ட தங்கமயில் மாமா வவுனிக்குள வயலை பாட்டு விலைக்கு என்றாலும் விற்றதால் தப்பித்துக் கொண்டார்.

### கதை III

தாய் வழிக் குடும்பத் தலைமை போய்விட தந்தை வழி தலைமைக் குடும்ப அமைப்பு தோன்றியபோது பலதார மணம் நிகழ்ந்திருக்க வாய்ப்புள்ளது. நாளடைவில் பலதார திருமணம் நாகரிகம் அற்றதாகிவிட்டது. ஆனாலும் ஆங்காங்கே இருதார மணம் நிகழ்ந்து கொண்டிருந்தது. முதல் மனைவி தவறும்போது இரண்டாம் தார திருமணம் நிகழ்வது பாரதூரமான விளைவை ஏற்படுத்தாது. முதல் மனைவி இருக்கத்தக்கதாக இரண்டாவது திருமணம் செய்தவர்களை ரூ வீல் (Two wheel )என அழைப்பதைக் கண்டிருக்கின்றேன்.

இப்படி ஒருவர் எதிர்பாராத விதமாக இரண்டு திருமணம் செய்து கொண்டார். அவருக்கு அது மனதளவில் வெட்கமாக இருந்தது.

"அங்கை பார் உதிலை சிவப்பு சேட்டோட போறார். அவருக்கும் இரண்டு பொண்டில்மார்" என்று தனக்கான அணியைத் தேடிக் கொள்வார்.

இரண்டு குடும்பத்திலும் மூன்றும் நான்கும் பிள்ளைகள் வேறு. உழைப்பு வருமானம் போதாமல் அவதிப்பட்டார். முதல் மனைவிக்கு தங்கச் சங்கிலி செய்ததை அறிந்த இரண்டாம் மனைவி வானுக்கும் பூமிக்கும் குதிக்கத் தொடங்கினார்.

ஒருநாள் கடைப்பக்கம் நடந்து வந்தார். கடைக்காரர் கேட்டார்.

"எங்கையடா சைக்கிள்"

"வித்துப் போட்டன்" சைக்கிளை வித்து இரண்டாவது மனைவிக்குத் தங்கச் சங்கிலி செய்து கொடுத்து இருக்கின்றார். பாவம் இப்ப பொடி நடை.




சரி ஏன் இந்த மூன்று கதைகளும்?
சும்மா ஒரு ஊர்ப் பழமொழி சொல்லத்தான்.

**கதை I -ஈர உழவு**
**கதை II - ஈர் ஊர் வேளாண்மை**
**கதை III -தாரமிரண்டும் தனக்கில் பகை.**

**"ஈர உழவும், ஈர் ஊர் வேளாண்மையும், தாரமிரண்டும் தனக்கில் பகை!"**
இது எப்போதோ அப்பா சொன்ன பழமொழியாக இருக்கக் கூடும்.

கோகுலராகவன்

# கொரோனா



# 2.0

ஆர்.பிரகாஷ்

உலக ஓட்டத்தை இந்த வருடம் ஒட்டுமொத்தமாக முடக்கியிருந்தது கொரோனாப் பெருந்தொற்று. ஒரு முனையில் கொரோனாவைக் கட்டுப்படுத்த, தடுப்பூசிகள் கண்டுபிடிக்கப்பட்டு அதன் வினைத்திறன் சோதிக்கப்பட்டுக்கொண்டிருக்கையில், மறு முனையில் இடி இறங்கியிருக்கின்றது. அதுதான் கொரோனா 2.0. கூடுதல் வலிமையுடன், கூடுதல் தகவமைப்புடன், கூடுதல் வீரியத்துடன் புதிய வகைக் கொரோனா பிரிட்டனில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பிரிட்டனில் பரவும் கொரோனா தமது நாடுகளுக்கும் வந்துவிடக் கூடாது என்று உலக நாடுகள் பலவும் பல்வேறு பயணக் கட்டுப்பாடுகளை இறுக்கமாக விதித்து அதை நடைமுறைப்படுத்தியுள்ளன. பிரிட்டனின் அயல் நாடுகளும், இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், சவூதி உள்ளிட்ட எண்ணற்ற நாடுகளும் பிரிட்டனுக்குப் பயணத் தடைகளை விதித்துள்ளன. பிரிட்டனின் நெருங்கிய நட்பு நாடுகள்கூட ஈவிரக்கம் காட்டவில்லை. கடந்த ஒரு வாரத்துக்குள் இந்தப் பயணத் தடைகள் மலைபோல் குவிக்கப்பட்டுள்ளன. இது கொரோனாவின் புதிய வலிமையை தெட்டத் தெளிவாகவே புடம்போட்டுக் காட்டுகின்றது.

பிரிட்டனில் பரவும் கொரோனாவின் ஆபத்து உலகுக்கு தெரிய வருவதற்கு முன்னர் அது பிரிட்டன் எல்லைகளைத் தாண்டிவிட்டது என்பதுதான் தற்போது கூடுதல் அதிர்ச்சி. ஸ்பெய்ன், ஆஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, இந்தியா உள்ளிட்ட நாடுகளில் இந்தப் புதிய வகைக் கொரோனா அவதானிக்கப்பட்டுள்ளது. அத்தகையவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். கூடுதல் கண்காணிப்பு அவர்கள் விடயத்தில் அந்தந்த அரசுகளால் செலுத்தப்படுகின்றது. இறுக்கமான ஊரடங்குகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. இவ்வளவும் ஒரு பக்கத்தில் இருக்கட்டும், கொரோனாவுக்காக கண்டுபிடிக்கப்பட்ட தடுப்பூசிகளால் அந்தக் கொடும் அரக்கன் அழிக்கப்படுவானா என்பதும் தற்போது தொங்குநிலையே. அமெரிக்கா, பிரிட்டன், சீனா, இஸ்ரேல் ஆகிய நாடுகளின் நிறுவனங்களால் தடுப்பூசிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.



ஆனால் இந்த நிறுவனங்களில் ஒன்றேனும் '100 வீதம் எமது மருந்து கொரோனாவுக்கு எதிராக வேலை செய்கின்றது' என்று கூறுவதாக இல்லை. தொலைக்காட்சிகளில் வருகின்ற சலவைத் தூள்களில் குறிப்பிடப்படுவதைப்போன்று 99 வீதம், 95 வீதம் என்பதாகத்தான் அந்த நிறுவனங்களின் உத்தரவாதங்கள் அமைகின்றன. இதற்கேற்ப தடுப்பூசி செலுத்தப்பட்ட நபர்களுக்கு பக்கவிளைவு உள்ளிட்ட அசம்பாவிதங்கள் ஏற்பட்டுள்ளமையும் உத்தியோகபூர்வமாகக் கண்டறியப்பட்டது. அமெரிக்கத் தாதியொருவர் தடுப்பூசி செலுத்தப்பட்ட பின்னர் இடம்பெற்ற நேரலை நிகழ்வில் மயங்கி வீழ்ந்தமையும் இதற்கு ஆகச்சிறந்த - ஆகப்பிந்திய எடுத்துக்காட்டு.

ஆக, கண்டுபிடிக்கப்பட்டுள்ள தடுப்பூசிகளே கொரோனாவை அழிக்குமா? ஆரோக்கியமானதா? பக்க விளைவுகளை ஏற்படுத்துமா? என்பவை தொடர்பில் தெளிவில்லாத நிலையில், கொரோனா புதிய வடிவில் அதுவும் கூடுதல் வலிமையுடன் 'திரும்ப வந்துட்டேன்னு சொல்லு' என்று வந்து நிற்கின்றது. இனி, கூடுதல் வலிமையுடன் வந்துள்ள கொரோனாவை ஏற்கனவே கண்டுபிடிக்கப்பட்ட தடுப்பூசிகள் கட்டுப்படுத்துமா? அல்லது இந்த நடைமுறைகள் முதலில் இருந்து ஆரம்பிக்குமா? என்பது அடுத்த இமாலயக் கேள்விகள்.

உலக சுகாதார நிறுவனம் கொரோனா விடயத்தில் சரியாக நடந்து கொள்ளவில்லை, முறையாகக் கையாளவில்லை, இன்னும் திறம்பட விடயத்தை எடுத்துச் சென்றிருக்கலாம் என்ற குற்றச்சாட்டுக்கள் பரவலாக உள்ளன. ஆனால், அந்த அமைப்புச் சொன்ன ஒன்றுமட்டும் இன்று உண்மையாகிப்போனது. அது 'கொரோனாவுடன் வாழப்பழகுங்கள்' என்பதேயாம். ஆம்! கொரோனாவுடன் வாழப் பழகுங்கள். அதுவொன்றே தற்போதுள்ள வழி!.



# எழுத்தின் மொழி

## தமிழ் நாட்டிலிருந்து ஒரு கண்ணோட்டம்

சாகித்ய அகாதமி 2007ம் ஆண்டு முதல் 'பிரேம்சந்த் ஃபெலோஷிப்'பை வழங்கி வருகிறது. சார்க் நாடுகளில் வாழும் ஒரு எழுத்தாளரைத் தேர்வு செய்து இந்த நல்கை அளிக்கிறார்கள்.

2017ம் ஆண்டுக்கான பிரேம்சந்த் ஃபெலோஷிப் ஈழத்தின் முக்கியப் படைப் பாளியான ஐயாத்துரை சாந்தன் அவர்களுக்கு 2019ல் அளிக்கப்பட்டது.

அந்த ஆண்டு நான் சாகித்ய அகாதமி விருது பெற டெல்லி சென்றிருந்த போது சாந்தனைச் சந்தித்து உரையாடினேன். சென்னைக்கு அவர் வந்திருந்த போதும் எனது இல்லத்துக்கு வந்திருந்தார்.




சாந்தன் ஈழத்தின் முக்கியமான எழுத்தாளர். 50 ஆண்டுகளாகத் தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதி வருகிறார். ரஷ்ய இலக்கியங்களின் மீது தீவிர ஈடுபாடு கொண்டவர். ரஷ்ய மொழி அறிந்தவர். உலக இலக்கியங்களில் சிறந்தவற்றை மொழிபெயர்ப்புகளும் செய்திருக்கிறார். சாந்தனோடு பேசிக் கொண்டிருப்பது இனிமையான அனுபவம். தேடித்தேடி படிக்கக் கூடியவர் என்பதால் நிறையப் புதிய விஷயங்களை அவரிடமிருந்து அறிந்து கொள்ள முடிகிறது. சமகாலத் தமிழ் படைப்புகள் அத்தனையையும் வாசித்திருக்கிறார். எளிமையானவர். மிகச்சிறந்த நண்பர்.

அவர் சாகித்ய அகாதமியின் விருந்தினராக இந்தியாவுக்கு வருகை தந்து ஒன்றரை மாதகாலம் மும்பை, சென்னை, கல்கத்தா, பெங்களூர் ஆகிய இடங்களில் இந்திய எழுத்தாளர்கள் பலரையும் சந்தித்து உரையாடிய அனுபவத்தை எழுத்தின் மொழி என்ற நூலாக எழுதியிருக்கிறார். சுவாரஸ்யமான நூல். சாகித்ய அகாதமி பரிசு வழங்கும் விழாவில் அவரது சிறப்புரை நடைபெற்றது. அழகான ஆங்கில உரையது. இந்திய இலக்கியங்கள் மீதான அவரது ஈடுபாட்டையும் ஈழ இலக்கியங்களின் வரலாற்றுத் தொடர்பையும் வெளிப்படுத்துவதாக அமைந்திருந்தது.

டெல்லிக் குளிரில் பயணம் செய்தது. தமிழ் சங்கத்தில் உரை நிகழ்த்தியது. காந்தி குறித்த கருத்தரங்கில் கலந்து கொண்டது. பத்திரிகை நேர்காணல், மற்றும் பல்வேறு நண்பர்களின் சந்திப்பு. பெங்களூர் சென்றது. அங்கே நடைபெற்ற சாகித்ய அகாதமி கூட்டம். கொல்கத்தா புத்தகச் சந்தைக்குப் போனது. தாகூர் நினைவு இல்லத்தைப் பார்வையிட்டது. தக் ஷிணேஷ்வர், பேலூர் மடம் என கல்கத்தா அனுபவங்களை அவர் விவரித்துள்ளது நாமும் அவருடன் இணைந்து பயணிப்பது போன்ற அனுபவத்தைத் தருகிறது.

"மனித உணர்வுகள் எந்த இனத்தவர்க்கும் எல்லா மொழியினர்க்கும், எல்லா நாட்டினர்க்கும் எக்காலத்தும் மாறுபாடில்லாதவை. எனவே அவற்றைக் கூறுகிற இலக்கியங்களும் ஒன்றே. தேச மொழி எல்லைகள் மட்டுமன்றிக் கால எல்லைகளையும் தாண்டியவை இலக்கியங்கள். ஈழப்போர்க்கால வாழ்வின் போது அந்த வாழ்வை ஏற்கெனவே அநுபவித்த ஒன்றாய் என்னை உணரச் செய்தவை ஹெமிங்வே, ஷொலோகோவ் ஆகியோரின் நாவல்களைப் படித்த அனுபவங்கள்.

எழுதப்படுகிற மொழிகள், பொருளைக் காவுகிற பணியை மட்டுமே செய்கின்றன. அவற்றை வாசகன் மனதில் தொற்ற வைத்ததும் குறித்த அந்த மொழிகளின் பணி முடிந்துவிடுகிறது. எஞ்சி நிற்பது அந்த படைப்புத் தந்த பரவசம் அல்லது தரிசனம். அதுதான் இலக்கியம் என நான் நம்புகிறேன்,". என அவர் தனது உரையில் குறிப்பிட்டமை முக்கியமானது.

பிரேம்சந்த் பெயரால் வழங்கப்படும் இந்த நல்கை, அவரைப் போலவே எளிய மக்களின் துயர் துடைக்க எழுதும் எண்ணம் கொண்ட சாந்தனுக்கு வழங்கப் பட்டிருப்பது மிகப் பொருத்தமானது. அவர் இன்னும் பல உயரிய விருதுகள் பெற வேண்டும் என வாழ்த்துகிறேன்.

எஸ்.ராமகிருஷ்ணன்
(எஸ்ராவின் வலைப்பக்கத்திலிருந்து)

தேன் மழை

# மதியம் திரும்பிய பின்....


சோ.பத்மநாதன்

○ ம.பா. மகாலிங்கசிவம்

கல்வி கற்கவேண்டிய பருவத்திலுள்ள மாணவர்களிற் பலர் பருவத்தே பயிர் செய்யாது கல்வியில் நாட்டமின்றித் திரிகின்றனர். கல்வி கற்பது பயனற்றது என்றும், வேப்பம்காயைப் போலக் கசப்பதாகவும், பேயைப் பிடிப்பது போல் இருப்பதாகவும் கூறிக்கொண்டு பாடசாலைக்குச் செல்லாது தெருக்களிலே திரிகின்றனர். மதியம் திரும்பிய பின்னரான முதுமைப் பருவத்திலும் கல்வி கற்பவர்களையும் கண்முன்னே காண்கின்றோம். அறிவைத் தேடிக் கொள்வதற்காகவும், பதவி, சம்பள உயர்வுக்காகவும், சமூக அந்தஸ்தை உயர்த்திக் கொள்வதற்காகவும் இவர்கள் தொடர்ந்து உயர்கல்வி கற்றுக் கொண்டே இருக்கின்றனர். சாந்துணையும் கல் என்கின்ற வள்ளுவர் முதலிய பண்டைத் தமிழ்ப் புலவர்களின் வாக்குகளுக்கு இவர்கள் இலக்கணமாக திகழ்கின்றனர்.

மதியம் திரும்பியபின் கல்வியைத் தொடரும் இவர்கள் குடும்பத்தில் ஏற்படும் எத்தனையோ சவால்களுக்கு முகம் கொடுத்த படியே தான் கல்வியைத் தொடர வேண்டியுள்ளது. பெற்றோர் கற்கச் செல்லும்போதோ, பிள்ளைகளுக்குரிய இத்தனை செயற்பாடுகளையும் செய்வதுடன் தமது தேவையையும் பூர்த்தி செய்ய வேண்டிய பெருஞ் சோதனைக்கு உள்ளாகின்றனர். இவ்விடயம் பற்றிய கவிஞர் சோ.பத்மநாதனின் 'மதியம் திரும்பிய பின்' என்னும் கவிதை இங்கே தரப்படுகின்றது.

**பிள்ளை படிக்கும் வயதில் இது பாவம்**
**சொல்லுக் கேளாமல் தொடங்கி சனி ஞாயிறு**
**என்று பாராமல் அலையுது ஒரு பொழுது**
**நின்றறியாது இந்நாள் வெயிலில் பிரஷரடி**
**தோளில் ஒருநோ தொடங்கி ஒரு மாதம்**
**நூலகத்தில் அள்ளிவந்த புத்தகக் கட்டோடு அந்த**
**மூலையிலே குந்தி இருந்தால் முடியுமோ**
**வேலை? எனக்கு விசராய் வருகுதடி.**

**பக்கத்து வீட்டுப் பரிமளத்தின் தோள்களில் தன்**
**துக்கச் சுமையை இறக்கிச் சுகம் காண்பாள்**
**அட்மிஷனில் தேறி அருஞ்சாதனை புரிதல்**
**பற்றி ஒரு வார்த்தை பாவி சொல்ல மாட்டாளாம்**

**மின்சாரம் நின்றுபோய் வீடே பொலிவிழக்க**
**சம்சாரம் செய்துவரும் சகாயத்துக் கீடாய்**
**இழுப்புக் கொடியில் ஒரு தொட்டி நீர் இறைத்து**
**உடுப்புத் துவைத்து முறையாய் உலரவிட்டு**
**வெந்ததும் வேகாததுமாய்ப் பறித்தெடுத்து**
**நின்ற நிலையில் கவளம் விழுங்கிவிட்டு**
**காலை புறப்பட்டுக் காவலரணில் மரம்**
**நாலு சுமந்து வழியில் ஹெலிகொப்ரர்**
**சுற்றிச் சுடப்போய் மதகுள் சுருண்டுமுன்**
**தைக்கத் தவழ்ந்து சயிக்கில் தனில்மீளத்**
**தாவி வளாகம் வரும்வழியில் சந்தியிலே**
**நீளுகிற க்யூவுக்கென் நெஞ்சு பறிகொடுத்து**
**சின்னண்ணை வீட்டில் சிறுcan எடுத்துப் போய்**
**மண்ணெண்ணெய் வாங்க மணி நேரம் செலவிட**

**கொப்பி குடுக்கினமாம் அஞ்சாறு வாங்குங்கோ**
**கப்புறு கடையிலே சோப்பிருக்காம் கேக்குதே?**
**ரோச் பற்றி வாங்குங்கோ கட்டாயம் சாமத்தில்**
**ஆச்சி இருமினால் ஆரெழும்பிப் பாக்கிறது.**
**மாவின்றி அப்பம் கிளம்ப மறுக்குதப்பா**
**லீவு எடுங்கோ நாளைக்கு லீலா கலியாணம்**
**என்று மனையாட்டி இட்ட பணிகளெல்லாம்**
**ஒன்றும் மறவா(து) உளத்தில் நிறுத்தி வந்தால்......**

**மாஸ்லோவின் கொள்கை வர மறுக்கும் !**
**தோன்டைக்கின் பூனை கதவுப் பொறியைத் தொட மறுக்கும்!**
**பிளேற்றோவின் தத்துவங்கள் பெஸ்ரலொஜிக் கூடாக**
**முளைக்கத் தொடங்குகையில**
**மொன்ரிஸோரி சேர்த்துக் கொள்வா.**

**இரவில் படிக்க இருந்தால் எனது மகள் குரல்**
**"எழுதித்தாருங்கோ கட்டுரை இப்பொழுதே**
**ஏழாம் ஆம் ஆண்டு ஆனால் இரண்டு முழுப்பக்க**
**நீளம் தலைப்போ "தமிழர்தம் பண்பாடு"**

**ஐம்பதிலும் அப்பன் படும் அல்லல் கண்டு நொந்தென**
**குஞ்சுக் குழந்தை குமுறி அழுத கண்ணீர்**
**வாத்தியை நொந்து மனசாரவே திட்டித்**
**தீர்த்துத் திருக்குறளில் மேற்கோளும் போட்டு இதனை**
**நாளை கொடு அவனென் படைப்பில்**
**குறை சொன்னால்**
**ஆளை நிறுத்தி அடிப்பன் செருப்பாலை**
**பிள்ளையென்ன எங்கள் தமிழ் பண்பாட்டுக்**
**கோலங்கள்**
**இன்னும் எனக்கே புரியவில்லை இவனோ**
**சின்னஞ்சிறுசு அறியும் என நினைக்கும் செம்மறியை**
**என்ன செய்யலாம் என்று**
**எனக்கொருக்காச் சொல்லுங்கோ.**

சோ.ப என்ற இரண்டு எழுத்துக்களால் ஈழத்துக் கவிதை உலகில் நன்கு அறியப்பட்டவர் சோ.பத்மநாதன். மஹாகவி, நீலாவணன், முருகையன் முதலியோரின் வெற்றிடங்களை நிரப்புவதாகக் கருதப்படுபவர். பலாலி ஆசிரியர் கலாசாலை அதிபராகப் பணியாற்றியவர். தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் நிறைந்த பாண்டித்தியம் கொண்டவர். வடக்கிருத்தல், சுவட்டெச்சம், நினைவுச் சுவடுகள், தென்னிலங்கை கவிதை, ஆபிரிக்கக் கவிதை, நல்லூர் முருகன் காவடி சிந்து முதலிய கவிதைத் தொகுப்புக்களை வெளியிட்டவர். இலங்கை அரசின் உயர் விருதான சாகித்திய மண்டலப் பரிசு, வடமாகாண விருது, ஆளுநர் விருது என்பவற்றைப் பெற்றுக் கொண்டவர்.

'மதியம் திரும்பிய பின்' என்னும் இக்கவிதை, கவிதை சொல்லியின் மனைவியின் கூற்றுடன் தொடங்குகிறது. பிள்ளை படிக்கும் வயதில் கணவன் சொல்லுக் கேளாமல் பட்டப்படிப்பின் கல்வி (டிப்ளோமா) கற்கத் தொடங்கி சனி ஞாயிறு எல்லாம் அலைகிறாரே என்ற ஆதங்கம் மனைவிக்கு. தான் அட்மிஷனில் தேறி அருஞ்சாதனை புரிந்ததைப் பாவி பக்கத்துவீட்டுப் பரிமளத்துக்குச் சொல்லவில்லையே என்ற ஆதங்கம் கவிஞருக்கு.

கல்வி கற்கப் புறப்படுமுன் கவிஞர் பட்ட துயரங்கள் அடுத்து கூறப்படுகின்றன. இழுப்புக் கொடியில் ஒரு தொட்டி நீர் இறைத்தல் முதலிய பல வேலைகளையும் செய்து விட்டு நின்ற நிலையிற் கவளம் விழுங்கிவிட்டு அந்தரப்பட்டுக் கவிஞர் புறப்படுகிறார். வழிப் பயணம் என்ன இலகுவானதா? அவர்கள் காவலரண் அமைப்பதற்கு மரம் தூக்கிக் கொடுத்தல் முதலிய போர்க்கால நினைவுகள் எம் மனதிலும் கிளர்ந்தெழும் வகையில் கவிஞர் அவற்றைச் சித்திரித்துள்ளார்.

இந்தப் பிரச்சினைகளுடன் திரும்பிவரும்போது வாங்கி வரச்சொல்லி மனைவி சொல்லிவிட்ட பொருள்களின் பட்டியலும் நினைவில் வர மூன்றாம் நிலைக் கல்வி எப்படி மூளைக்குள் நுழையும்? கற்க வேண்டியவையோ கடினமான தத்துவங்கள். புரிந்துகொள்வது எவ்வாறு?

மாஸ்லோவின் கொள்கை வர மறுக்கும்!

தோன்டைக்கின் பூனை கதவுப் பொறியைத் தொட மறுக்கும் எனக் கவிஞர் நகைச்சுவையாகக் கூறுகிறார். மாணவரின் தேவைகளை அடிப்படையாகக் கொண்ட தேவைக் கொள்கையை வடிவமைத்த மாஸ்லோ, அறையினுள் வைக்கப்பட்ட உணவை பலமுறை எடுக்க முயன்று தவறி இறுதியில் கதவைத் திறக்கும் வழியைக் கண்டறிந்த பூனையை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட முயன்றுதவறல் கொள்கையை முன்வைத்த தோன்டைக் முதலியோர் இங்கு குறிப்பிடப்படுகின்றனர்.

இவ்வளவும் முடித்து வீட்டுக்கு வந்து படிப்போம் என்றால் வீட்டிலும் நெருக்கடி. கவிஞரின் ஏழாம் வகுப்பில் படிக்கும் மகள் கட்டுரை எழுதித்தருமாறு கேட்கிறாள். தலைப்பு, குருவித் தலையிற் பனங்காய் வைக்கும் தலைப்பு. தமிழர்தம் பண்பாடு. இந்த அவலநிலையை ஏற்படுத்திய ஆசிரியர் பிள்ளை என்ன எங்கள் தமிழ்ப் பண்பாட்டுக் கோலங்கள். இன்னும் எனக்கே புரியவில்லை இவனோ சின்னஞ் சிறுசு அறியும் என நினைக்கும் செம்மறியாகச் சுட்டப்படுகின்றார். குழந்தை உளவியலுக்குப் பொருத்தமற்ற விடயங்கள் கற்பிக்கப்படல் பிள்ளையின் சிந்தனை தூண்டப்படாமல் பெற்றோர் எழுதிக் கொடுக்கும் விடயங்கள் ஒப்படைகளாக ஒப்படைக்கப்படுதல் முதலிய கல்விக் கொள்கைகளின் தவறுகளும் கவிதையூடு வெளிச்சம் போட்டுக் காண்பிக்கப்படுகின்றன.

கவிதையை வாசித்து முடிக்கையில் அறிவைத் தேடும் விடயத்தில் முதியோரே ஈடுபடும்போது இளையவர்களாகிய நாம் என்ன செய்கின்றோம்? என்ற சிந்தனை இளையோர் நெஞ்சில் நெருடாமற் போகாது.

மணிக் கதை

○ மௌனா

# மௌன தவம்



அந்த மனிதன் இறைவனை நோக்கி நீண்டகாலமாக தவம் புரிந்து கொண்டிருந்தான்.

வருடங்கள் உருண்டன.

இறைவனின் கருணை அவனுக்குக் கிடைப்பதாக இல்லை. அவர் அவன் முன் தோன்றி "பக்தன் உனக்கு என்ன வரம் வேண்டும்?" எனக் கேட்கத் துணியவில்லை. ஆனாலும் அவன் சலிக்கவில்லை. சோர்வடையவில்லை. விடாப்பிடியாக தவத்தை தொடர்ந்தான். தேவலோகத்தில் இறைவனிடம் இறைவி கேட்டாள்.

"தேவரீர் ஏன் அந்தப் பக்தனுக்கு இரங்கவில்லை. அவனின் தவத்தின் உறுதியில் உங்களுக்கு நம்பிக்கையில்லையா?"

இறைவன் மௌனியாகவே இருந்தார். இறைவி விடவில்லை.. "நீங்கள் அவனுக்கு கருணை காட்ட வேண்டும். பாவம் அந்தப் பக்தன் பல்லாண்டு காலமாகத் தவத்தில் இருக்கிறான்..." என்று இறைவனை இறைஞ்சினாள்.

"கொஞ்சம் பேசாமல் இரு தேவி... என்னை அவனுக்கு தரிசனம் கொடுக்கச் செய்து இக்கட்டில் மாட்டி விட வேண்டாம்" என்றார் இறைவன்.

"என்ன? உங்களை இக்கட்டில் மாட்டுவதா? என்ன சொல்கிறீர்கள்?" என்றாள் இறைவி


"இப்போது அவன் முன் தோன்றினால் என்னால் செய்யவே முடியாத வரமொன்றைக் கேட்பான்"

"அப்படி உங்களால் வழங்கமுடியாத வரம் என்னவாம்?"

"ஈழத் தமிழ் தேசியத் தலைவர்களை ஒருமுகமாகச் சிந்திக்க வையுங்கள் என்பான் அவன். அது என்னால் முடிந்த காரியமா? நீயே சொல்.." என்றான் இறைவன்

இறைவி மௌனியானாள்

# 27 இற்கான கவிதைகள்



பாலகா நீ கேளடா
தரையிலிருந்து ஆழக்
கடலில் இறங்கி நீல
வானையும் தொட்டு சீறும்
கொடி ஏற்றினோம் அன்று
அடக்கியதால் அகிலம் எமை
கறி மீனுக்கும் கையேந்தும்
நிலை காண் இன்று

**சி.தருண்**
யா/அராலி சரஸ்வதி வித்தியாசாலை

அலை பாயும் கடலோரம்
விளையாடும் சிறு நண்டாய்
விரைந்தோடி வருவாயா?
இரு மீன்கள் கரம் தாங்கி
உலை வேகும் கறியாக்க
விலையில்லை உன் பாசம்
அலையோடு போராடும்
உன் தந்தை பசி தீர்க்க

**ர.கார்த்திகாயினி**
வற்றாப்பளை

பிஞ்சு உள்ளம் ஒன்று
பிஞ்சுக் கைதனில்
குஞ்சு மீனுடன்
அஞ்சா நடையுடன்
பஞ்சு போன்ற
மணல்தனில்
கொஞ்சும் சிரிப்புடன்
கஞ்சனவன் கருமீனை
காசில்லாமல் தான்
கொடுத்தானோ?

**வி.சரஸ்வதி**
முழங்காவில்

தரை வான் கடல்தனில்
நிரை நிரையாய் நிமிர்ந்து
கொடி ஏற்றிய தமிழன் –வெறும்
இரண்டே மீனுக்காய் இரந்து
தவித்திடும் நிலை இன்று
வருங்கால மகனுக்கு – வீர
வரலாறை சொல்லியே
வளர்த்திடு வளமுடன்

சி.பாவரசன்
யா/வட்டு இந்துக் கல்லூரி

துள்ளித் துள்ளி விளையாடி
பள்ளி செல்ல வேண்டிய பாலகன்
பூந்தமிழ் புத்தகத்தை புரட்டி
பைந்தமிழ் பயில வேண்டியவன்
அன்னை தந்தை அரவணைப்பில்
அகமகிழ வேண்டியவன்
அலை கடல் கரையதனில்
மீன் சுமக்கும் சோகம் இது

**சி.கோதீஷன்**

மழலையின் விதியினால்
குடும்பம்தான் கதியென்று
மணல் மண் சூட்டில்
தூண்டிலிட்டு காத்திருக்கையில்
சிக்கியது இரு மீன் தூண்டிலிலே....
கண்டதும் கடைந்தது தயிர் போல்
சிறுவனிவன் முகத்தில்,
புன்சிரிப்பு........

**ஆ.கர்ணிகா**
யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி

## பரிசு பெறும் கவிதை

**கண்ணை மூடா தூங்கும் மீனை**
**கபடமாய் பிடித்து வந்து**
**பிஞ்சு மனத்திடம் கொடுத்திட**
**பின்னலிட்ட அதன் சிரிப்பும்**
**துள்ளி செல்லும் அழகும் காண**
**துரிந்து கரை வரும் கடலலை**

**ப.கவிஷா**

அலை மோதும் ஆழியில்
அடித்து வந்த பலவற்றில்
கரையொதுங்கும் மீன்களை
கரங்களில் பிடித்த வண்ணம்
பெற்றவளின் பசி போக்க
பெருமையுடன் காத்திருக்கும்
மணல் மீது நடை போடும்
மழலையின் அழகே அழகு!

கு.சோபனா

**சிறு கால் மணல் புதைய**
**கரம் இரண்டில் மீன் ஏந்தி**
**புன்சிரிப்போடு நடந்து செல்லும்**
**சிங்காரச் சிறு பயலே**
**பசிக்காக எடுத்துச் செல்கிறாயா**
**அன்றி தந்தைக்கு உதவிடும்**
**தயாள சிந்தனையா?**

**சி.சிவடனுஷன்**
நல்லூர்.

சின்னஞ்சிறு மலரொன்று
பென்னம் பெரிய கனவுடனே
அலைவீசும் கடலோரமதில்
அள்ளித் தரும் காட்சியது
வஞ்சகமில்லாத வதனமே சாட்சியாய்
குழந்தையின் சிரிப்பிலே
இறைவனைக் காண்கிறோம்

**இ.ரிஷிதா**, நயினாதீவு

நீ நடக்கையில் இதமாக
தாங்குகிறது மண்
உன் அழமை மிதமாக
ரசிக்கிறது விண்
உன் கையில் வலுவாக
தவழ்கிறது மீன்
எம் எல்லோர்க்கும் மெதுவாக
உன் மீது நிற்கிறது கண்

வினோத் சிந்து
அரியாலை

கடற்கரை தனிலே
கால் புதையும் மணலதனில்
கையில் இரு மீன்களுடன்
வாடிய குஞ்சு ஒன்று
வாடியை நோக்கி போகுதிங்கே
கூடி வர யாருமின்றி
தனிமையின் தவிப்பிது

முல்லைக்கிளி
தண்ணீரூற்று

இருகரமதில் மீன்கள் வதனமதில் புன்னகை
உள்ளமதில் நிறைவு மீன்களை அன்னையிடம்
வழங்கி உணவாக்கி ருசித்திருவாய்
இல்லை விற்பனை கண்டு பணம் பெறுவாய்
எதுவாகினும் விரைவாக ஓடிச்செல் வீட்டை நோக்கி
அலை வந்து மோதலாம்
உன் வருங்கால வாழ்வுக் கனா அதிலே அள்ளுண்டு போகலாம்
ஓடிச்செல் வீடு நோக்கி

**லஷ்மி சாம்பசிவம்** ,சித்தன்கேணி

சமுத்திரம் எங்கும்
சுதந்திரமாய்ச்
சுற்றித்திரிந்த
மீன்களிரண்டு...
வலைச்சிறையில் வந்து
குழந்தையிவன்
கரச்சிறைக்குள்
அழகாய் அகப்பட்டுக்
கொள்ள இவன்
சமுத்திரத்தையே நீந்திக்
கடந்த
சாதனையாளன் போல
உவகை கொண்டு
விரைகின்றான்
அன்னையிடம்...

அல்வை, த.சிவா

கடற்கரை மணலில்
கால் புதைத்து நடந்து
கரங்களிலே மீன் கொண்டு
செல்லும் செல்லமே....

கொரோனாவெனும் அரக்கன்
காவுகொள்வான் கவனம்
முகத்திரை எங்கே தளிரே
தாய் தந்தை கவனமெங்கே?

**முல்லையூர் கர்மயோகி**

தந்தையின் தொழிலை விரும்பி
மீனைப் பற்றின கைகள்
தாய் மண்ணில் தலை நிமிர்ந்து வாழ
குடும்பத்திற்காக சுமக்கின்றான்
முகத்தில் ஒருவித சந்தோசம்
பெரிய காரில் சென்றாலும் கிடைக்காது
இவன் குழந்தை தொழிலாளி இல்லை
நாளைய சந்ததியின் போராளி.

**கஜிதா அம்பலவாணர்**
**புன்னாலைக்கட்டுவன்**

ஆழ் கடலுக்குள் ஆழப்புதைந்து
ஆரோகணித்து ஆர்ப்பரித்து
ஆடி அசைந்து சென்றிடும்
அற்புத மீனினமே !
என் பிஞ்சுக் கரங்களுக்குள்
உங்கள் உயிரை துறந்து விட்டது
ஏனோ!

**கு.ஜனீல்சன்**, யாழ்ப்பாணம்

# மௌனமொழி

## 28



இந்த ஒளிப்படத்தைப் பார்த்ததும் உங்கள் சிந்தனை யில் உதிக்கும் கவிதைகளை 8 வரிகளுக்கு மேற்படாமல் உடனே எழுதி அனுப்புங்கள். மிகச் சிறப்பான ஒரு கவிதைக்கு ரூபா. 1000/பரிசாகக் காத்திருக்கிறது. பாராட்டுப் பெறும் ஏனையவை மௌனமொழி பகுதியில் பிரசுரமாகும்.

**உங்கள் கவிதைகள் எங்கள் கதவைத் தட்ட வேண்டிய கடைசி நாள்:**
**02.01.2021**

கவிதைக்கு பரிசு 1000/=

அனுப்ப வேண்டிய முகவரி:
**உதயன் சஞ்சீவி**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
மின்னஞ்சல் முகவரி: *uthayansanjeevi@gmail.com*
0773165555

# உயர்தரத்துக்கு பின்னான உயர்கல்வி

25 கவனத்துடன் அணுக வேண்டியது காலக் கடமை



இ.சர்வேஸ்வரா
விரிவுரையாளர், கல்வியியல்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்



உலக அளவில் நெருக்கடிமிக்க 2020ஆம் ஆண்டில் 25 வாரங்கள் எமது சமூகத்தின் நன்மை கருதி உயர்தரத்துக்குப் பின்னான உயர்கல்வி எனும் தலைப்பிலான சில கருத்துக்களை இக்கட்டுரைத்தொடர் மூலமாக பகிரக் கிடைத்த வாய்ப்பு மிகப் பெறுமதியானது. இவ் வாய்ப்பை வழங்கிய உதயன் பத்திரிகையின் சஞ்வீவி வார இதழுக்கும் பத்திரிகை ஆசிரியருக்கும் நன்றிகள்.

இக்கட்டுரைத் தொடரின் மூலமாக பல்கலைக்கழக அனுமதிகள் தொடர்பான நுட்பங்கள், மற்றும் விழிப்புணர்வு ஓரளவுக்கேனும் எமது சமூகத்தில் மேம்பட்டு இருக்கும் என்பது கட்டுரையாளரின் எதிர்பார்ப்பாகும்.

குறிப்பாக பல மாணவர்கள் திறமை இருந்தும் உரிய வழிகாட்டுதல்களின்றி பல்கலைக்கழக வாய்ப்புகளைத் தவறவிடுகின்ற சந்தர்ப்பங்கள் ஒன்று இரண்டல்ல, நூற்றுக்கணக்கில் எமது சமூகத்தில் உள்ளன. இந் நிலைமைகளை அனுமதிப்பது என்பது கல்வி சார்ந்த நோக்கு நிலைகளில் முன்னோக்கி நகர வேண்டிய ஒரு சமூகத்திற்கு உகந்தது அல்ல. அதன் அடிப்படையிலேயே இக்கட்டுரையாளர் தன்னால் இயன்ற அளவுக்கு பல்கலைக்கழக அனுமதிகளின் பெறுமதித் தன்மை குறித்த ஒரு தெளிவை ஏற்படுத்த முயன்றார்.

இலங்கை சனத்தொகையில் மிகக் குறைந்த எண்ணிக்கையான இலங்கை தமிழர்களே தற்போது இலங்கையில் உள்ளனர். இவர்களுக்குள்ளும் பாடசாலை உயர்தரக் கல்விக்கு முதன்மை கொடுத்து அதனைக் கற்கின்ற பிள்ளைகளைக் கொண்ட குடும்பங்களின் எண்ணிக்கையும் மிக குறைவானது. இப் பின்னணியில் சரியான கல்வித் திட்டமிடல் வழிகாட்டுதல்கள் மூலமாக எமது பிள்ளைகள் அனைவரையும் ஏதோ ஒரு விதத்தில் பல்கலைக்கழகம் அல்லது இன்னுமோர் உயர்கல்விக் கூடத்திற்கு அனுப்பி வைக்க முடியும் என்பது கட்டுரையாளரின் அசைக்க முடியாத நம்பிக்கை.

நீண்டகால திட்டமிடுதலுடன் கல்விக் கட்டமைப்புகளில் சரியான மாற்றங்களை ஏற்படுத்துவதனுடாகவும் இந்த தூரநோக்கை அடைந்து கொள்ள முடியும். குறிப்பாக பின்வரும் விடயங்களில் நாம் அதிக கவனம் எடுக்க வேண்டும்.

1. பல்கலைக்கழக அனுமதிகளில் மட்டுமன்றி உயர்கல்வித் துறையிலேயே அதிக வாய்ப்பைக் கொண்ட கணித விஞ்ஞான தொழில்நுட்பத் துறைகளுக்கு நாம் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.
2. உயர்தர விஞ்ஞான கல்வி தொடர்பில் தப்பான அபிப்பிராயங்களில் கட்டியெழுப்பப்பட்ட அச்சத்தைக் களைய வேண்டும்.
3. பாடப்பரப்புக்கு அப்பால் பிள்ளைகளின் பொது அறிவு மற்றும் நுண்ணறிவுத் திறன்களை வளர்ப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.
4. சாதாரணதரப் பரீட்சை தேவைப்பாடுகளில் தவறிழைக்கும் பிள்ளைகளை மீளவும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு ஆற்றுப்படுத்த வேண்டும். கணிதம் விஞ்ஞானம் ஆங்கிலம் ஆகிய பாடங்களில் அதிக கவனம் எடுக்க வேண்டும்.
5. பிள்ளைகளின் ஆங்கில அறிவை சராசரிக்கு மேம்பட்ட நிலைக்கு உயர்த்த வேண்டும்.
6. தேசிய நிலைகளில் முதன்மை பெறும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான முயற்சிகளில் இறங்க வேண்டும். அதாவது திறமை மிக்க மாணவர்களை மேலும் திறமை மிக்கவர்களாக உருவாக்குதல் வேண்டும்.
7. கலைப்பிரிவில் கல்வி கற்கும் மாணவர்கள் பொருத்தமான பாடங்களைத் தெரிவு செய்வதற்கு உரிய வழிகாட்டுதல்கள் வழங்கப்படல் வேண்டும். குறிப்பாக பாடசாலைகள் மற்றும் ஆசிரியர்களின் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக பாடங்களைத் தெரிவுசெய்யும் நிலையைத்தவிர்த்து, மாணவனின் தேவைக்காக பாடங்களைத் தெரிவுசெய்யும் நிலை முற்று முழுதாக கட்டமைக்கப்படவேண்டும்.
8. பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கும் போது சரியான வழிகாட்டுதலை வழங்கி கிடைக்கத்தக்க அத்தனை வாய்ப்புகளையும் உச்சமாக பயன்கொள்ள வேண்டும்.
9. இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கு அதிக தமிழ் மாணவர்களை அனுப்பி வைக்கின்ற பொழுது அதுவொரு சமூக எழுச்சியாக மாறும். பல்கலைக்கழக அனுமதிகளைப் பூர்த்தி செய்த பின்னர் அடுத்த நிலையில் உள்ள மாணவர்களை உரிய வழிகள் மூலமாக கல்வியியல் கல்லூரிகள், அரசின் ஏனைய பல்கலைக்கழகங்கள், உயர்கல்வி நிறுவனங்கள், அங்கீகரிக்கப்பட்ட தனியார் கல்வி நிறுவனங்களுக்கு வழிப்படுத்த முடியும். அதன் மூலமாக உயர்தரப் பரீட்சையில் தகமை பெற்ற அத்தனை பிள்ளைக்கும் உயர்கல்வியைப் பெற்றுக் கொடுப்பது என்பது இயலக்கூடியதொரு காரியமாக ஆகும். இந்நிலையை உருவாக்க தனிமனித மட்டத்திலும் குடும்ப மட்டத்திலும், சமூக மட்டத்திலும் கல்வி நிர்வாக கட்டமைப்புக்கள் மட்டத்திலும் உயர்கல்விக்கூட குழாத்தினர் மட்டத்திலும் பொறுப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும்.
10. இதற்காக பொருத்தமான கட்டமைப்புக்களை உருவாக்குவது தொடர்பாக நாம் சிந்திக்க வேண்டும்.
11. வடக்கு மாகாணத்தின் கல்வித் தரநிலையை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகளை உற்பத்தி செய்யத்தக்க சுயாதீன கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்படுதல்வேண்டும். இக் கட்டமைப்பில் கல்வித்துறை சார்ந்த அதிகாரிகளோடு துறைசார் வல்லுநர்கள், பெற்றோர்கள் என ஒரு கூட்டு ஏற்பட வேண்டும்.
12. யாழ்ப்பாண பல்கலைக்கழகம், வடக்கு கல்வியை மேம்படுத்துவது தொடர்பான தலைமைத்துவத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும். குறிப்பாக கொள்கை வகுப்புகள், பொதுப் பரீட்சை பெறுபேறுகளின் பகுப்பாய்வின் மூலமான பரிந்துரைகள், பாடசாலைக் கல்வியில் அவ்வப்போது மேற்கொள்ளப்படும் ஆய்வுகளின் மூலமாக கல்வித்துறை அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கல் மற்றும் அறிவுப்பரவலாக்கம் என பல்வேறு நிலைகளிலும் பல்கலைக் கழகத்தின் வகிபாகம் என்பது தவிர்க்க முடியாததும் அவசியமானதும் ஆகும்.
13. பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கும்போது, மாணவர்களுக்கு உரிய வழிகாட்டுதல்களை வழங்குவதற்கான கருத்தமர்வுகள் வருடம்தோறும் நிகழ்த்தப்பட வேண்டும். அத்துடன் பல்கலைக்கழக கல்வி தொடர்பான வழிகாட்டுதல் என்பது மாணவர்கள் உயர்தர பரீட்சைக்குத் தோற்றிய பின்னர் வழங்கப்படுவதற்கு மாறாக சாதாரண தரப் பரீட்சை நிறைவு செய்த பின்னர் அவர்களுக்கு வழங்கப்படுவதன் ஊடாக பல்கலைக்கழகத்துக்குள் இலகுவாக அதிக எண்ணிக்கையான மாணவர்களை உட்செலுத்த முடியும்.
14. கல்வி சார் ஆலோசனைகளை பெற்றுக் கொள்ளத்தக்க கட்டமைப்புகளும் பொறிமுறைகளும் கல்வி நிர்வாக இயந்திரத்துக்கு அப்பால் சுயாதீன சமூக தலைமைத்துவத்தின் கீழ் உருவாக்கப்படுதல் வேண்டும். கிராமங்கள் தோறும் செயற்படுகின்ற கிராமியமட்ட அமைப்புகளில் கற்றுத் தேறிய இளைஞர்களை உள்வாங்கி அவர்களின் மூலமாக இலவசமாக கல்வி ஆலோசனைகளை வழங்கத்தக்க பொறிமுறைகளைத் தாபித்தல் வேண்டும்.

உயர்தரப் பரீட்சையில் முதல் தடவையில் சித்தியடையத் தவறுகின்ற ஆயிரக்கணக்கான பிள்ளைகள் நம் சமூகத்தில் உள்ளார்கள். மீத்திறன் மாணவர்களைக் கொண்டதாக மதிக்கப்படும் பாடசாலைகளில்கூட, இத்தகைய மாணவர்களின் எண்ணிக்கை அதிர்ச்சி தரத்தக்க இலக்கங்களில் இருக்கின்றது. தேசிய நிலையில் சாதிக்கும் முதன்மை பெறும் பல எண்ணிக்கையான மாணவர்களைக் கொண்ட அதே பாடசாலையில் சமாந்தரமாக உயர்தரத்தில் மூன்று பாடங்களிலும் சித்தி பெறத் தவறியிருக்கும் பல மாணவர் கள் இருக்கின்றார்கள். குறிப்பாக கணித விஞ்ஞான துறைகளில் இந்நிலையிருப்பது சமூகத்திற்கு ஓர் மிகப் பெரும் பின்னடைவு நிலையாகும். மீத்திறன் மாணவர்கள் எனும் அடிப்படையில் அவர்களை முதல் தடவை பரீட்சைக்குத் தோற்றிய பின்னர் ஒன்றாக அணிதிரட்டி இரண்டாம் தடவை பரீட்சைக்கு தோற்றுவதற்கு இடைப்பட்ட ஆறுமாத காலப் பகுதிக்குள் மிக நுட்பமான முறையில் வழிகாட்டி தயார்ப்படுத்தி உற்சாகமூட்டி பரீட்சைக்கு தோற்ற வைப்பதன் மூலமாக மிகப்பெரும் விடயங்களைச் சாதிக்க முடியும். இதனை இலங்கையின் முஸ்லிம் தலைவர்கள் ஆற்றி வருவதையும் அதற்கான ஏராளமான கட்டமைப்புக்களை தங்குமிட வசதிகளுடன் உருவாக்கி இருப்பதும் நாம் முன்னுதாரணமாகக் கொள்ளக் கூடிய ஒரு விடயமாகும்.

எமது சமூகத்திலும் பல நிறுவனங்கள் கல்வி மேம்பாடு குறித்து சிந்திப்பதுடன் அதற்காக தம்மை அர்ப்பணித்துச் செயற்பட்டுவரும் நிலையில், தங்குமிட வசதிகளுடன் மாணவர்களை குறுகிய காலத்துக்கு தங்கவைத்து மிகச் சிறப்பான அறுவடையை பெறத்தக்க உள்ளக கட்டமைப்புகளை மேம்படுத்த வேண்டும். ஆன்மீகத் தலைவர்கள் மற்றும் சமூக தலைவர்களின் வழிப்படுத்தல் மற்றும் கல்விப்புலம் சார்ந்தவர்களின் அர்ப்பணிப்பான பங்களிப்போடு இக் கட்டமைப்பு முன்னேறிவருமாகவிருந்தால் நமது சமூகத்தில் கணித விஞ்ஞான துறை சார்ந்து பல நூற்றுக்கணக்கான வல்லுனர்களை உருவாக்க முடியும் என்பது கட்டுரையாளரின் அசைக்க முடியாத நம்பிக்கையாகும்.

நிறைவாக, வலிகள் பல சுமந்த எமது இனம் அழிந்து அழிந்து போய் விடாமல் இருப்பதற்கு காப்பரணாக இருந்தது எமது இனத்தின் கல்விப் பாரம்பரியம் என்பதை எவரும் மறுக்க முடியாது. இலங்கைத் தேசத்தில் தற்போது இருக்கும் அரசியல் சுழ்நிலைகளில் தமிழர்கள் இலங்கைத் தேசத்திற்கு வேண்டப்பட்டவர்கள் என தம்மை நிரூபிக்க வேண்டியதொரு தேவையிருக்கின்றது.

குறிப்பாக அரசு இயந்திரத்தை கொண்டு நடத்துவதற்கு தமிழர்களின் அறிவு, ஆற்றல், திறமை அவசியம் என்பதை உணர்த்த வேண்டும். இத்தகைய நிலைமை ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் வரை மிக நீண்ட காலமாக இலங்கையில் இருந்ததை நாம் அறிவோம். அந்நிலையை மீளவும் உருவாக்க வேண்டும். பல்கலைக்கழகங்கள் என்பது வெறுமனே பட்



டதாரிகளை உற்பத்திசெய்யும் தொழிற்சாலைகள் அல்ல. அவை ஒரு பிள்ளையின் வாழ்க்கையை மாற்றத்தக்கவை மட்டுமன்றி ஒரு சமூகத்தின் போக்கையே மாற்றும் சர்வ வியாபகம் மிக்க செழுங்கலை நியமங்கள். உலகளாவிய ரீதியில் அறிவுப் பாரம்பரியத்தில் பல்கலைக்கழகங்களின் தனித்துவம் உன்னதமானது. காலமாற்றத்தில் பல்வேறு நிறுவனங்கள் உருவாகியி ருந்தாலும், ஒரு பாரம்பரியம் மிக்க கல்வி முறைமையாக தனித்துவமான அடையாளமாகவிருப்பது பல்கலைக்கழகக் கல்வியே.

அந்தக் கல்வியை ஒருவர் பெற்றுக் கொள்ளும்போது இயல்பாக அவருக்குள் தன்னூக்கம், ஆளுமை தன்னம்பிக்கை, சமூகத் தலைமை ஏற்கும் தனித்துவம் என பல்வேறு விடயங்கள் பரிணமிக்கின்றன.

எனவே தமிழர்களின் பல்கலைக்கழக கல்விப் பாரம்பரியத்தை தக்கவைப்பதற்கும் பயன்கொள்வதற்கும் உயர்தரத்திற்கு பின்னான உயர்கல்வி தொடர்பில் ஆழமாகவும் அகலமாகவும் சிந்தித்து பயன் பெறுவோமாக.

(முற்றும்)

# ப்ளீஸ்!





○ சிக்மலிங்கம் றெஜினோல்ட்

சில வாரங்களுக்கு முன்பு கழிவுகளை ஒழுங்காக அப்புறப்படுத்தாமல் விடுவதைப் பற்றியும் அதனால் உண்டாகும் சுற்றாடல் பாதிப்பைப் பற்றியும் இந்தப் பத்தியில் குறிப்பிட்டிருந்தோம். அதற்குச் சாட்சியமாக கடந்த வாரம் யாழ்ப்பாண நகரத்தின் மையப்பகுதியிலிருந்து பெருந்தொகையான கழிவுகளை (குப்பைகளை) சுத்திக ரிப்பாளர்கள், கழிவு வடிகால்களிலிருந்து மீட்ட காட்சிகள் நம்முடைய தலைகளைக் கவிழ்க் குமளவுக்கு வெளிவந்தன. இந்தக் காட்சிகள் நேரிலும் சமூக வலைத்தளங்களிலும் பார்ப்போரை அதிர்ச்சிக்குள்ளாக்கிக் கவலைப்படுத்தின. ஆனாலுமென்ன, இதையெல்லாம் வலு சிம்பிளாகக் கடந்து போய் விடுவோம். அதிகபட்சம் ஒரு வாரத்துக்குக் கூட பலருடைய கவனத்தில் இது தங்கி விடாது. அதற்குப் பிறகு பேசுவதற்கும் கொண்டாடுவதற்கும் அல்லது திட்டுவதற்கும் வேறு ஏதாவது சங்கதி வந்து விடும்.

ஆனால், இதே காலப்பகுதியில் யாழ்ப்பாண நகரம் வெள்ளத்தில் மூழ்கியது. பஸ் நிலையம், ஆஸ்பத்திரி, பாடசாலைகள், கடைகள், தெருக்கள் எல்லாவற்றையும் வெள்ளம் ஆட்சி செய்தது. சனங்களும் ஊடகங்களும் குய்யோ முறையோ என்றெல்லாம் கூவி அழுதன. அரசியல்வாதிகள் ஓடோடி வந்து வெள்ள நிவாரண பரிகாரம் செய்ய முற்பட்டனர். அதையும் சமூக வலைத்தளங்கள் பல்லிளித்தபடி சுமந்தன. வெள்ள நிவாரணத்துக்காக வெளியேயும் கையேந்தினார்கள் சில தொண்டர்கள். அடிப்படைப் பிரச்சினை என்னவென்று தெரிந்து கொள்ளாமல், அல்லது புரிந்துகொள்ள விரும்பாமல் ஆடுகின்ற கூத்து இது. இப்படித்தான் தொடர்ந்தும் எல்லாவற்றிலும் ஆயிரமாயிரம் (கேலிக்) கூத்துகள் ஆடப்படுகின்றன.



கழிவு வடிகால்களையே சீராக வைத்திருக்கத் தெரியாத, கழிவுப் பொருள்களை ஒழுங்காக அகற்றத் தெரியாத சமூகமாக இருப்பதன் விளைவுகளே இதெல்லாம். அதுவும் வரலாற்றுப் பெருமை மிகு பண்பாட்டுப் பெருநகரில்.

ஆனால், இதைப்பற்றிப் பேசினால் அதை யாருமே கண்டுகொள்ள மாட்டார்கள். பல இடங்களிலும் குப்பைகளையும் கழிவுகளையும் நம்மில் பலரும் எந்த விதமான பொறுப்பும் கூச்சமும் இல்லாமல் மிகத் துணிச்சலாக வீசுகிறோம். கடைகளின் ஓரங்களில் தினமும் கொட்டப்படும் கழிவுகள், பொது இடங்களில் வீசப்படும் குப்பைகள் எல்லாமே நம்முடைய கண்களில் வண்ணக் காட்சிகளாகத் தினமும் ஏறிக் கொண்டிருக்கின்றன. அதையெல்லாம் நாம் பொருட்படுத்தாமல் கடந்தே சென்று கொண்டிருக்கிறோம். ஏனென்றால், இதற்கும் நமக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை என்ற வைராக்கியம் தானே?

கழிவுகளை ஒழுங்காக அகற்ற வேண்டும் என்ற சமூகப் பொறுப்பும் அப்படியான ஒரு கரிசனைப் பண்பாடு என்ற கத்தரிக்காயும் நமக்கு வேண்டாம். கழிவுகளை அகற்றுவதற்கான செலவும் அதற்கான பொறிமுறையும் நம்மிடம் அதிகாரபூர்வமாகவே இருக்கின்றன. இதற்காக நகரசபை, மாநகர சபை, பிரதேச சபைகள் உள்ளன. அதிகாரிகளும் ஊழியர்களும் இருக்கிறார்கள். இவர்களையும் இந்தச் சபைகளையும் ஆண்டு நடத்துவதற்கு நாமே பெருமையோடு தெரிவு செய்த மக்கள் பிரதிநிதிகளும் உள்ளனர். (இந்த மக்கள் வேறு யாருமல்ல. நாமேதான்). ஆனால், அவர்களுக்கு இதிலெல்லாம் பொறுப்பில்லை. இதைப்பற்றி எதுவுமே தெரியாது. அவர்களுக்குத் தெரிந்ததெல்லாம் ஆளும் கட்சி - எதிர்க்கட்சி என்ற பேதங்களும் துரோகி - தியாகி என்ற வேறுபாடுகளுமே. அதற்கப்பால் எதைப்பற்றியும் சிந்திப்பதற்கு அவர்களுக்கு நேரமும் கிடையாது. மூளையும் கிடையாது.இதனால் கழிவுகள் தம்பாட்டில் பெருகுகின்றன. கழிவுகளும் கழிவுகளும் சேர்ந்து குப்பைகளும் குப்பைகளும் கலந்து எல்லாமே கழிவு மயம், குப்பை மயமாகி விட்டது. அந்தக் குப்பைகளை - கழிவுகளை அள்ளி வெளியே தெருவில் வைத்துக் கொண்டாடுகிறோம்.

பண்பாட்டுப் பெருநகரில் கண்கொள்ளாக் காட்சி கலர் கலராக மிளிர்கிறது. ஆண்டு தோறும் இந்தக் காட்சிகள் இனி தொடர்ந்து நடந்தாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை. ஏனென்றால், எந்தப் பிரச்சி னைக்குத்தான் நாம் தீர்வு கண்டிருக்கிறோம்? எதைத்தான் நாங்கள் ஒழுங்காகத் துப்புரவாக்கியிருக்கிறோம்?

இது தனியே யாழ்ப்பாணத்தில் மட்டும்தான் என்றில்லை. கிளிநொச்சியிலும், வவுனியாவிலும், மட்டக்களப்பிலும், அக்கரைப்பற்றிலும் இதே கதையும் கதியும் தான். இன, மத, பிரதேச வேறுபாடுகள் வேறு விசயங்களில் இருக்கக் கூடும். கழிவுகளைச் சேர்க்கும் விதத்திலும், குப்பைகளாகவே நடந்து கொள்வதிலும் நமக்கிடையில் வேறுபாடுகள் கிடையாது.

இரண்டு வாரங்களுக்கு முன்பு யாழ்ப்பாணத்தை மூழ்கடித்த வெள்ளம் இந்த வாரம் மட்டக்களப்பு உள்ளிட்ட கிழக்கு மாகாணத்தை மூழ்கடித்துக் கொண்டிருக்கிறது. இவ்வளவுக்கும் இந்த நகரங்கள் இருப்பதே கடலின் ஓரத்தில். களப்புகளின் நடுவே. எந்தக் காரணம் கொண்டும் வெள்ளம் ஏறவே முடியாது. பெய்கிற மழை அவ்வளவும் கடலிலும் களப்பிலும் ஓடிச் சேர்ந்து விடும். நாற்றம் என்ற சொல்லுக்கே இடமிருக்காது.

ஆனால், என்ன நடக்கிறது?

சபைகளில் விவாதங்கள் நடக்கின்றன. ஆளுந்தரப்பின் ஆடைகளைக் களைவதிலேயே எதிர்த்தரப்புகள் ஆர்வமாக உள்ளன. எதிர்த்தரப்புகளை தொலைப்பதிலேயே ஆளும் தரப்புகள் மும்முரமடைகின்றன. வெள்ளம் வடிய முன்னரே ஆட்சிக் கவிழ்ப்புகள் பற்றிய கரிசனையே எல்லோருடைய தலைக்குள்ளும் ஏறியிருக்கிறது. யாழ்ப்பாணம் மாநகரசபையின் ஆட்சி தோற்கடிக்கப்பட்டிருக்கிறது. நல்லூர் பிரதேச சபையின் கதியும் இதுதான். இப்படியே ஒவ்வொரு இடத்திலும் ஒருவர் காலை ஒருவர் இழுப்பதிலேயே கவனம் குவிந்தால், கழிவுகள் பெருகாமல் வேறு என்னதான் நடக்கும்? ஆனால், நம்முடைய கவனமோ இந்தச் சபை நடனங்களைப் பற்றி அறிவதிலேயே சென்று கொண்டிருக்கிறது.

கழிவுகளை ஒழுங்காக அதற்குரிய இடங்களில் போடாது விட்டால் தண்டம் அறவிடலாமே என்றொரு நண்பர் கேட்கிறார். அருமையான யோசனை தான். அதையும் விட கழிவுகளை அகற்றும் பொறிமுறையை ஒழுங்காகக் கடைப்பிடிக்காத தலைவர்களுக்கும் நிர்வாகத்துக்கும் தண்டம் விதிக்கலாமே! இதைப்பற்றியும் யாராவது யோசியுங்கள். தேர்தல் கால ஆலோசகர்களும் அறிஞர்களும் மதியுரைஞர்களும் எங்கே போனார்கள்? ஏனென்றால் கழிவுகளால் வெள்ளப் பிரச்சினைதான் என்றில்லை. நுளம்புப் பெருக்கம், துர்நாற்றம், சுற்றாடல் மாசடைதல் என்று ஏராளம் பிரச்சினைகள். இவை உண்டாக்குகின்ற நோய்கள். நிலத்தடி நீர் கெடுதல். விலங்குகள், பறவைகள் போன்ற உயிரினங்களுக்கு ஏற்படுகின்ற பாதிப்புகள் எனப் பல பிரச்சினைகள் உண்டு.

இதையெல்லாம் புரிந்துகொள்ள முடியாமலிருக்கிறோம் என்றால், நாம் படித்த சமூகத்தினர் என்ற பெருமிதங்களுக்கு சவுக்கடிதான். தேசமொன்றைப் பற்றி நெடுங்காலமாகவே கனவு கண்டு கொண்டிருக்கிறோம் என்றால், அந்தத் தேசம் இப்படித்தான் நாறிக் கிடக்கப்போகிறதா? அந்த நாற்றமெடுக்கும் தேசத்தின் நற்குடிமக்களாக இப்படித்தான் இருக்கப்போகிறோமா? தயவு செய்து மூக்கிலிருந்து கையை எடுத்து, ஆழமாக மூச்சை எடுத்து விட்டுக் கொண்டு இதற்கொரு பதிலைச் சொல்லுங்கள். ப்ளீஸ்.




உங்கள் படைப்புக்களும் சஞ்சீவியில் பிரசுரமாக வேண்டுமா?

• கட்டுரை
• சிறுகதை
• ஓவியம்
• கவிதை
• பத்தி எழுத்து
• மருத்துவம் தொடர்பான சந்தேகங்கள்

எதுவானாலும் அனுப்பி வையுங்கள். தரமானவற்றை பிரசுரிக்க

நீங்களும் எழுதலாம்


அனுப்ப வேண்டிய முகவரி:
உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு 0773165555

sanjeevi@uthayan.com

சஞ்சீவி காத்திருக்கிறது.

# எறியம்...



○ நீதுஜன் பாலா

என்னடா, இன்னுமா காடு முடியேல்ல.."
"சுவரேஜையும் காணேல..."
"அஞ்சு மணித்தியாலம் ஆகுது.. ரோட்டு முடியுதில்ல. எப்பிடி இது சாத்தியப்படும்... விளங்கவே இல்லையே.." இதற்கு தேனீ என்ன சொல்லுவான் என்பது தெரிந்தே கேட்டேன்.
"இது கட்டாயமா பேய் பிசாசு வேலை தான்.." தேனீ முனகினான்.
"ஏற்கெனவே விசரில இருக்கிறன்.. அலம்பாமல் ஆராவது ஆக்கள் வருகினமா பார்... இனி ஓடிப் பிரயோசனமில்ல..." என்றபடி பைக்கை நிறுத்தினேன்.
இறங்கி இருவரும் வீதியில் உட்கார்ந்தோம். கண்டியில் ஒரு சின்ன வேலை.. தேனீயையும் இழுத்துக் கொண்டு யாழ்ப்பாணத்திலிருந்து காலை புறப்பட்டது, கிளிநொச்சியில் பொலிசிடம் வசை பட்டது, வவுனியாவில் சாப்பிட்டது என்று மதவாச்சி கடந்து யானைகள் உலவும் நெடிய காட்டை ஊடறுத்துப் போகும் வீதிக்குள் பைக்கை விட்டவரை எல்லாமே சாதாரணமாகத் தான் நடந்தது. அதற்குப் பிறகுதான் எல்லாமே குழப்பமாக இருக்கிறது.
ஏறத்தாழ ஐந்து மணிநேரமாக ஓடுகிறோம், ஓடுகிறோம்... எதுவுமே மாறவில்லை.. காடு மட்டும் கடக்கிறது.. ஒரே மாதிரிக் காடு. மரங்களின் அமைப் பில் கூட மாற்றமில்லை. ஆட்கள் நடமாட்டம், வேறு வாகனங்கள், விலங்குகள், ஒழுங்கைகள் எதையும் காணோம். இருவருக்குமே பைக்கில் வவுனியா தாண்டுவது இது முதல் முறை, பாதை மாறினோமா என்று பார்த்தால், கிளைகளே இல்லாமல் நேர்கோடாக இருக்கிறது வீதி.
"அடேய்.. யோசிச்சுப்பார்.. இப்பிடி நடக்கிறது சாதாரணமா சாத்தியமில்ல... கட்டாயம் ஏதோ ஒரு சக்தி செய்யிற வேலைதான். உண்மைய சொல்லு. கவுரிக் காப்பு நேரம் வேற.. மச்சம் கிச்சம் திண்டு துலைச்சனியே? அம்மன் கோவம் ஆயுசுக்கும் ஆட்டும்.." தேனீ வழக்கம்போல கடவுள் பரப்புரையை தொடங்கினான். ஆனால் இந்தமுறை என்னால் மறுக்கமுடியவில்லை. சூழ்நிலை அப்படி. அதற்காக ஏற்கவும் முடியவில்லை. கொள்கை அப்படி.
"பொத்து சனி..! இவ்வளவு நேரத்தில ஒரு ஆள்.. ஏன் மிருகம், பறவையைக் கூடக் காணேல்ல, பெற்றோல் குறைஞ்சு பைக் நிக்கேல்ல. மீட்டர் அசையுதில்ல... பெற்றோல் மீட்டர் அடித் தொங்கல்.. இப்பிடி இவ்வளவு நீளத்துக்கு நேர்கோடான வீதி இலங்கையிலேயே இல்ல.. கிட்டத் தட்ட எழுபத்தைஞ்சு கிலோமீற்றரா ஒரே மாதிரி இருக்கு... ஒண்டும் விளங்கேல்ல தான்.
கொஞ்சநேரம் இருந்து பார்ப்பம், ஏதாவது வாகனம் வருகுதோ பார்ப்பம். இல்லாட்டி திரும்பி வந்த பாதையிலையே போவம்.. வேற என்ன செய்யிற..."
திரும்பிப் போவது புத்திசாலித்தனம்தானா என்று தெரியவில்லை. வந்த பாதையும் அதன் திசையில் நீண்டுகொண்டு போனால்? உண்மையாகவே இது கடவுளின் வேலையா?
அமானுஷ்யமா?
பயம் மனதின் பெரும்பான்மையை அபகரித்தது. அறிவின் அறைகள் ஓய்வெடுக்க ஆரம்பித்தன. கடவுள் நம்பிக்கை பயத்தின் வடிவில் உருவெடுக்க ஆரம்பித்தது.
பயண அலுப்பில் வீதியிலேயே தூங்க முயன்றேன்.

**"ஏறத்தாழ ஐந்து மணிநேரமாக ஓடுகிறோம், ஓடுகிறோம்... எதுவுமே மாறவில்லை.. காடு மட்டும் கடக்கிறது.. ஒரே மாதிரிக் காடு. மரங்களின் அமைப்பில் கூட மாற்றமில்லை. ஆட்கள் நடமாட்டம், வேறு வாகனங்கள், விலங்குகள், ஒழுங்கைகள் எதையும் காணோம்."**

'பஸ்ஸில போ தம்பி' என்ற அம்மாவின் முகம் இனி இல்லையா.. இந்த இடத்தில் சாவு எப்படி வரும்? யானை பிதுக்கியா, அல்லது இரவில் சலங்கை ஒலிக்கப் பேய்கள் வரப் போகின்றனவா..

★ ★ ★

"அடேய்...! இங்க பாரடா... ஏதோ ஒண்டு வருகுது..!"
எழுந்து பார்த்தேன். தூரத்தில் வீதியின் தொலை முடிவில் ஒரு புள்ளியாக உருவம் ஒன்று வந்து கொண்டிருந்தது. உருவமும் வாழ்க்கை மீதான நம்பிக்கையும் மெதுமெதுவாகப் பெருத்தது.
உருவம் ஒரு கிழவன் எனத் தெரிந்தது, காத்திருக்காமல் உடனடியாக பைக்கில் ஏறி அவரை நோக்கி ஓடினோம்.
"வாருங்கள்.. உங்களை நோக்கித்தான் நானே வருகிறேன்.."
"ஐயா... இங்க...ரோட்டு... நீங்க.. நக்காம.. சீ, நிக்காம.." தேனீ உளறினான். "அமைதி அமைதி.. எனக்கு எல்லாம் தெரியும். உங்கள் பயணமும் வீதியும் முடியாமல் நீண்டுகொண்டே இருக்கிறது. சரிதானே?"
"சரிதான், உங்களுக்கும் அதே பிரச்சினையா?" நான் ஆயாசப்பட்டேன்.
"இல்லை, உங்கள் பிரச்சினையை விளங்கப்படுத்தவே நான் வந்தேன். ஆனால்.."
"சொல்லுங்கோ.."
"சொன்னால் உங்களுக்குப் புரியும், ஆனால் நம்பத் தான் மாட்டீர்கள். ஆனால் இதுவரை நடந்த எதுவுமே நீங்கள் தொடர்ச்சியாக நெடுநேரம் நேர் வீதியில் பயணித்துக்கொண்டிருப்பது தர்க்க சாத்தியமில்லாதது என்பதால் இனி நான் சொல்வதும் சாத்தியமில்லாததாகத் தெரிந்தாலும், நீங்கள் நம்பத்தான் வேண்டும்"
"சொல்லித் தொலையுங்களேன் பார்ப்பம்.."
"இந்த உலகமே, பிரபஞ்சமே, உங்கள் வார்த்தைகளில் சொல்லப்போனால் ஒரு மாயை. முப்பரிமா ணத்தில் வரையப்பட்டு இயங்க வைக்கப்பட்டிருக்கிற ஒரு ஓவியம்.. கிட்டத்தட்ட ஒரு கொம்பியூட்டர் கேமை எழுதி இயங்க வைப்பதுபோல, நாங்கள் இந்த உலகத்தை வரைந்து இயங்க வைத்துக்கொண்டிருக்கிறோம்."
"கொஞ்சமும் நம்புறமாதிரி இல்லையே..."
" உங்களுக்கு வேறு தர்க்க நியாயம் இல்லாதவரை நான் சொல்லுவதை நம்பத்தான் வேண்டும்.."
"அப்ப, வேற ஒரு உலகம் தான் உண்மையானது, அங்க வாழுற நீங்கதான் ஒரிஜினல்.. உங்கட வடிவமைப்பு தான் நாங்க. அப்பிடித்தானே?" தேனீயின் முகம் பிரகாசமானது.
"பார்த்தியாடா..
நான் சொல்லல? கடவுள் இருக்கிறார் டா..எங்களை எல்லாம் படைச்ச என்ர சிவபெருமானே..." வானம் பார்த்து கை கூப்பினான்.
"எங்கள் உலகத்தில் மொத்தம் நான்கு பரிமாணங்கள் உண்டு. அதன் நிழலின் மாதிரியாக உங்களை மூன்று பரிமாணத்தில் வரைந்து இருக்கிறோம். நீங்கள் எங்கள் பிரபஞ்சத்தின் மாதிரி. மொடல். எங்கள் பிரபஞ்சத்தின் முப்பரிமாண எறியம். முப்பரிமாண கட்டடத்துக்கு இரு பரிமாண வரைபடம் இருக்கும் இல்லையா? அதுபோல. ஒரு புரோக்கிராமில் உங்கள் முப்பரிமாண எறியத்தை இயக்குகிறோம். இந்த புரோக்கிராம் கூட உண்மையில் சிக்கலான விஷயம்.. புரிவதற்காக சுருக்கமாக கொம்பியூட்டர் புரோக்கிராம் என்றேன்"
"சரி, அப்படியே பார்த்தாலும் இந்த பிரபஞ்சம் கோடிக்கணக்கான ஆண்டுகளாக இருக்கிறதே... நீங்கள் எத்தனை வருடங்களாக புரோகிராம் எழுதுகிறீர்கள்?"
"கட்டட வரைபடத்தை எப்படி வரைவீர்கள்? பத்தடி அறையை பத்தடிப் பேப்பரிலா? அளவுக்கேற்றபடி சுருக்குவதில்லையா? அதுபோல நாங்கள் நேரத்தை சுருக்கி உங்களை இயங்கவைக்கிறோம். உங்களது பல வருடங்கள் எங்களது சில செக்கன்கள் .... எங்களது சில நாள்கள் என்றால், உங்களுக்கு சில யுகங்கள்..."
"சரி, இதெல்லாம் எதற்காக செய்கிறீர்கள்?"
நீங்கள் எங்களின் மொடல். எங்கள் உலகத்தில் ஒரு மாற்றத்தை செய்ய முதல், அதை உங்களுக்கு பரிசோதித்துப் பார்ப்போம்.உங்கள் உலகத்தில் வரும் விளைவுகளை வைத்துத்தான் எங்கள் உலகத்தில் அந்த மாற்றத்தை செய்வதா வேண்டாமா என்று பார்ப்பது."
"பரிசோதனை எலி?" - தேனீ.
"அதேதான்."
"புரியவில்லையே..." - நான்.
"உதாரணமாக ஒரு நாட்டின்மீது போர்தொடுக்க முன்னர், அதன் விளைவுகளைப் பார்க்க, இங்கே போரை பரிசோதிப்போம். வியாதிகளின் விளைவுகள், மத,அரசியல் கொள்கைகள்... எல்லாவற்றையும் சோதிக்கும் ஒரு பரிசோதனைக் கூடம்தான் நீங்கள்.. இப்படி ஏராளமான பூமிகளைப் அங்கே பலர் வைத்துள்ளார்கள்.
எங்களது மொடல் நீங்கள். கொஞ்சமாக பிரச்சி

(22ஆம் பக்கம் பார்க்க)




## பிளாஸ்ரிக் பாவனையை குறைப்போம்

நவீன உலகில் பல்வேறு துறைகள் வளர்ச்சியடைந்து கொண்டு செல்கின்றன. அதனோடு கூடவே பிளாஸ்ரிக் பாவனையும் அதிகரித்துக் கொண்டு இருக்கிறது. பிளாஸ்ரிக் என்பது பெற்றோலியத்திலிருந்து உருவாக்கப்படும் ஒரு பொருளாகும். இன்று பிளாஸ்ரிக் பல்வேறு தேவைகளுக்காகப் பயன்படுத்தப்படுகின்றது. பொருள்களைக் கொண்டு செல்லல், வீட்டுத் தேவைகள், பல்வேறு நிறுவன தேவைகள் எனப் பலவற்றுக்கு பிளாஸ்ரிக் பயன்படுத்தப்படுகின்றது. பிளாஸ்ரிக் உக்கலடையாத ஒரு பொருள். உக்கலடையாமை என்ற ஓர் அச்சமே பிளாஸ்ரிக்தீமைகளை ஏற்படுத்தக்காரணமாகின்றது. இது மண்ணுடன் சேரும்போது உக்கலடையாது மண்வளத்தைக் குன்றச் செய்யும். நீர்நிலைகளில் சேர்ந்து நீர் மாசடைதலை உண்டாக்கும், கடல்வாழ் உயிரினங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும். எரிக்கப்படுகின்ற பிளாஸ்ரிக்கிலிருந்து வெளியேறும் நச்சுப் பதார்த்தங்கள் வளியுடன் கலந்து வளியும் சுற்றுச்சூழலும் மாசடையும். இவ்வாறு நிலம், நீர், வளி என்பவை மாசடைவதால் மனிதன், விலங்குகள், தாவரங்கள் அனைத்துக்கும் பாதிப்புக்களை ஏற்படுத்தும்.



பிளாஸ்ரிக்கால் ஏற்படும் பாதிப்புகளை குறைக்க 3R (Reuse, Reduce, Recyle) எண்ணக்கருவைப் பின்பற்ற வேண்டும். பயன்படுத்திய பிளாஸ்ரிக் பொருள்களை வேறு தேவைகளுக்கு மீளப் பயன்படுத்துதல். பயன்படுத்தும் பிளாஸ்ரிக் அளவைக் குறைத்தல். பயன்படுத்தி கழித்தொதுக்கப்பட்ட பிளாஸ்ரிக்கை மீள் சுழற்சி செய்தல். இவற்றுக்கு மேலதிகமாக பிளாஸ்ரிக்குக்கு பதில் வேறு பொருள்களைப் பயன்படுத்தலாம். எனவே நாம் பிளாஸ்ரிக் பாவனையைக் குறைத்து அவற்றால் ஏற்படும் பாதக விளைவுகளைத் தடுப்போம். "பிளாஸ்ரிக் இல்லாத பூமியை உருவாக்குவோம்".

**லி.லக்ஷிகன்,** தரம் 9,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, அங்கத்துவ இல.12

## கர்ணனைப்போல் ஒரு காகம்



அணில் ஒன்று மாமரமொன்றை தனது நிரந்தர வாழ்விடமாக்கி வாழ்ந்து வந்தது. அந்த மாமரத்தில் கூடு கட்டுவதற்காக வந்த காகம் ஒன்று அணிலுடன் நெருக்கமாகப் பழகி நண்பரானது . காகமும் அணிலும் அடம்பன் கொடிகள் திரண்டாற்போல உற்ற நண்பர்களாக வாழ்ந்தன . இருவரும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து பழகியதுடன், பசிபோக்குவதற்காக அருகில் இருக்கும் மரங்களில் அணிலார் பழங்களை உண்டு புசித்தால் காகத்துக்கும் கொண்டு சென்றும் அதேபோல் காகமும் அணிலாருக்கு மிகுதிப் பழங்களை பறித்து சென்று பகிர்ந்து உண்ணும் பாசக்காரர்களாகவும் இருந்தனர் .


இவ்வாறாக அணிலுக்கும் காகத்துக்குமான நட்பு இணைபிரியாமல் தொடர்ந்தது . ஒருநாள் மாமரம் ஒன்றில் மிக உயரமான கொப்பில் காணப்பட்ட மாம்பழம் ஒன்றை, பழத்தின் மீது ஏறிய அணிலார் தலைகீழாக நின்று சாப்பிட்டுக் கொண்டிருந்தார் . மாம்பழத்தை உண்டு முடிக்கும் தறுவாயில் மாம்பழத்தின் நெட்டி முறிந்து கீழே விழுந்து கொண்டிருந்தது . இச்சந்தர்ப்பத்தில் தனது உணவுத் தேவைக்காக வேறு மரம் ஒன்றில் இருந்த காகம் திடீரென அவ்விடத்துக்கு பறந்து வந்து அணிலை நிலத்தில் விழுந்து அடிபடுவதற்கு முன்னதாக தன்னுடைய இறக்கைபின் மீது ஏந்தி , எந்தவிதமான பாதிப்புமில்லாமல் காப்பாற்றியது .

கர்ணனைப் போன்ற உள்ளம் கொண்ட காகத்துடன் ஏற்பட்ட நட்பு இன்று அணிலின் உயிரைக் காப்பாற்றியுள்ளது. காகத்தைப் போல் நட்பைத் தேடு நீ விழுகின்ற நிலை வரினும் உனைத் தாங்குவான் .

**ந.அபர்னன் ,**
தரம் 6 ,
யா / சாவகச்சேரி இந்துக் கல்லூரி. ( அ.இ .119 )



## வழிகாட்டுவோம்



வெட்டிக்கிடக்கும் பகுதியில் எந்த துண்டு வரும்?



## பிஞ்சு தூரிகைகள்




**கு.அபிகாந்த்,**
தரம் -11
யா/ மகாஜனக் கல்லூரி.





**த.துளசிகா,**
தரம் -09
யா/ இந்து மகளிர் கல்லூரி.
அ.இல.92







**பையூஸ் அகமட்,**
தரம் -08,
பொத்துவில்
மத்திய கல்லூரி.

# குற்றங்களுக்கு என்னாசல்...!

○ உளவாளி

உதயன் – சஞ்சீவியில் வாசகர்களின் அமோக வரவேற்பைப் பெற்ற, 'தடயத்தை தேடி' பகுதியில், இதுவரை வெளிவந்த குற்றங்கள் அல்லது துயர் நிகழ்வுகளின் தற்போதைய நிலை என்ன என்று அறிய ஒரு உந்தல் இருக்கும். அதனால் அவை பற்றிய ஒரு மீள்புலனாய்வை மேற்கொண்டு, அவற்றினை சுருக்கமாக வாசகர்களுக்கு தருகின்றோம்.

25 .01. 2020




### முன்கதை

பேருவளைச் சொந்த இடமாகக் கொண்டவள் காஞ்சனா ரொஷானி. யாழ்.மருத்துவ பீட மாணவி. அவளுக்கு, சிப்பாயான உதித் குமாரவுக்கும் காதல். 2017 இல் இருவரும் பதிவுத்திருமணமும் செய்தனர். மருத்துவ பீடத்துக்கு காஞ்சனா வந்ததில் இருந்து காதலில் விரிசல். 22.01.2020 அன்று யாழ்ப்பாணம் பண்ணைக் கடற்கரையில் ரொஷானியும், உதித் குமாரவும் உரையாடிக் கொண்டிருந்தனர். திடீரென தான் கொண்டு வந்திருந்த கத்தியால் அங்கேயே ரொஷானியைக் கண்டதுண்டமாக வெட்டி விட்டு தப்பி முனைந்த உதித்குமார, படைப்புலனாய்வாளர்களால் கைது செய்யப்பட்டார். கொலைக்கான காரணம், பின்னணி, சந்தேகங்கள் என்பன இதன்போது விரிவாகப் பதிவு செய்யப்பட்டன.

### இப்போது...!

இந்தக் கொலை வழக்கு விசாரணைகள் யாழ் மேல் நீதிமன்றத்தில் இடம்பெற்று வருகின்றன. கொலையை தானே செய்தேன் என ஒத்துக்கொண்டுள்ள, சந்தேகநபரான லான்ஸ் கோப்ரல் உதித் குமார பிணைக்கு விண்ணப்பித்துள்ளார். ஆனாலும் இதுவரை அவருக்கு பிணை மறுக்கப்பட்டு வருகின்றது. தற்போது யாழ். சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்.



# இரட்டை பலியெடுத்த ஒற்றை முடிவு

01 .02. 2020

### முன்கதை

பெண் தலைமைத்துவக் குடும்பத்தை சேர்ந்த கஜனி காதல் விவகாரத்தால் தூக்கிட்டு உயிரை மாய்க்க, மகளின் பிரிவுத்துயரைத் தாளாமல் தாயாரும் தனக்குத்தானே மண் எண்ணெய் ஊற்றி எரிந்து உயிரிழந்தார்.

### இப்போது...!

தாயும், சகோதரியும் அடுத்தடுத்து உயிரிழக்க, அந்தக் குடும்பத்தில் 1 வயதுச் சிறுவன் மட்டுமே. அவன் இப்போது அம்மம்மாவுடனும் சித்தியாருடனும் வசித்து வருகிறான். அம்மம்மாவுக்கு கிடைக்கும் முதியோருக்கான கொடுப்பனவான 1900 ரூபா மற்றும் யுத்தத்தில் கால் ஒன்றை இழந்த சித்தியின் இழப்பீட்டு பணம் 5000 ரூபா மட்டுமே மாதாந்த வருமானம். மொத்தமாக 6900 ரூபா பணத்தில் இவர்கள் மூவருடைய ஒவ்வொரு மாதவாழ்வும் நகர்கின்றது. ஆடு கோழி வளர்ப்பதில் சித்திக்கு ஆர்வம். ஆனாலும் பொருளாதார நிலை பெருந்தடையாக உள்ளது. சமூக ஆர்வலர்கள் அல்லது தன்னார்வ அமைப்புகள் சுயதொழில் வாய்ப்புக்கான உதவிகளை வழங்கினால், அந்தக் குடும்பம் கொஞ்சமேனும் வாழ்க்கையை கொண்டு நடத்தமுடியும்.

# கொலையாளிகளே! நாய் பிடிக்கும் கவனம்!

08.02.2020



### முன்கதை

மிருசுவில், படித்த மகளிர் திட்டம் பகுதியில் இரத்தினம் குபேந்திரன் என்ற என்பவரின் சடலம் வீதியோரமாக மீட்கப்பட்டது. பொலிஸார் மோப்பநாய்கள் மூலம் நடத்திய விசாரணையில் கொலை செய்தார் என்ற சந்தேகத்தில் அதேபகுதியை சேர்ந்த பெண் ஒருவரும் கிளாலியைச் சேர்ந்த இளைஞன் ஒருவரும் கைதுசெய்யப்பட்டிருந்தனர். "என் மீது தவறாக நடக்க முற்பட்டதாலேயே, அவரை கம்பியால் தாக்கி, கத்தியால் குத்தி கொலை செய்துவிட்டு, சடலத்தை வீதியோரமாக கொண்டு சென்று போட்டேன்" என அந்தப் பெண் ஒத்துக் கொண்டிருந்தார்.



### இப்போது...!

"அந்தப் பெண் தனியே கொலை செய்யவில்லை. நானும் சேர்ந்தே கொலையைச் செய்தேன்" என விசாரணைகளின் போது கைதான இளைஞர் ஒத்துக் கொண்டிருந்தார். தற்போது பெண்ணும், இளைஞரும் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். வழக்கு விசாரணைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன. அரசியல் கட்சி ஒன்றின் அனுசரணையிலேயே அந்தப் பெண் இப்போதும் வாழ்ந்து வருகின்றார் என ஊரவர்கள் சொல்கின்றனர்.




15.02.2020


### முன்கதை

வடமராட்சியில் அழகுசாதனப் பொருட்கள் விற்பனையகம் ஒன்றை நடத்தி வந்த ஒருவர், தொழில்ரீதியாக ஏற்பட்ட பகை உச்சம்பெற்றதால், பக்கத்தில் இருந்த கடை ஒன்றைத் தீக்கிரையாக்கினார் எனினும் பின்னர் சி.சி.ரி.வி கமெராக் காட்சிகள் மூலம் அவரே குற்றவாளி என பொலிஸ் கண்டுபிடித்தது.எனினும் அவர் தலைமறைவாகி விட்டார். பின்னர் கொடிகாமம் பகுதியில், ரயிலில் மோதுண்டு உயிரை மாய்த்தார்.

### இப்போது...!

இறந்தவரால் எரிக்கப்பட்ட கடையை பருத்தித்துறை நகர சபை சீரமைத்துக் கொடுத்துவிட்டது. ஆனாலும் எரிந்து நாசமான பொருள்களுக்கு காப்புறுதி செய்யாததால், அதற்குரிய இழப்பீடு கிடைக்க வில்லை. இறந்தவரது குடும்பத்தினர், குடும்பத்தலைவனை இழந்த துயரில் இருந்து இன்னும் மீளவில்லை.





# சிறை இருத்தல் சிறகு விரித்தல்

○ தருமராசா அஜந்தகுமார்

உலகத்தை ஒரு சிறையாகக் கற்பனை செய்பவர்களும் இருக்கிறார்கள். சிறைக்குள் இருந்தாலும் உலக வாழ்க்கையை சிறகாகக் கொண்டு சுதந்திரக்கனவுடன் பயணிப்பவர்களும் இருக்கிறார்கள். 'சிறையாரும் மடக்கிளியே' என்ற சம்பந்தர் தேவாரத்தில் சிறை என்பது சிறகு என்ற அர்த்தத்திலேயே வருகின்றது.

சிலருக்கு வாழ்க்கையே சிறையாக இருக்கிறது. பெரும்பாலும் திருமணத்தை சிறையுடன் ஒப்பிடுகின்றார்கள். சிலரது வாழ்க்கை உண்மையான சிறையிலேயே கழிந்து ஒழிந்துவிடுகின்றது. ஆனால் சிறை வாழ்வில் இருப்பவர்களின் சிந்தனைகளை யாராலும் அடைத்துவிடமுடியாது. அங்கு அவர்களின் சிந்தனை, சிறகுள்ள பறவையாக அலைந்தபடியே , பறந்தபடியே இருக்கின்றது. சிறை அனுபவங்களைத் தமிழ் இலக்கியத்திலும் உலக இலக்கியங்களிலும் பலரும் பகிர்ந்துள்ளார்கள்.

திருநாவுக்கரசரை சுண்ணாம்பு அறையில் அடைத்த போது சிவனின் சிந்தனையில் தன் மனதைப் பறிகொடுத்த அவருக்கு,

'மாசில் வீணையும் மாலை மதியமும் வீசு தென்றலும் வீங்கிள வேனிலும் மூசு வண்டறை பொய்கையும் போன்றதே' என்று குளிர்ச்சியாக இருந்ததாம் அந்தக்கொடிய அறை. இது போலவே பவுல் என்ற, கிறிஸ்தவத்தை எதிர்த்து பிறகு கிறிஸ்தவத்துக்கு மாறியவரை சிறை வைத்தபோது அவர் அங்கிருந்து கொண்டு எழுதிய கடிதங்கள் பைபிளின் புதிய ஏற்பாட்டில் இடம்பெறும் அளவுக்கு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவையாக அமைந்தன. 27 ஆண்டுகள் சிறையில் வாடிய நெல்சன் மண்டேலா புத்தகம் வாசிக்கும் சுதந்திரத்தை மட்டும் அனுமதிக்கக் கோரினார் என்று படித்திருக்கின்றோம். ஏனெனில் சிந்தனையைச் சிறை வைப்பதை அவரால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. சிறையில் இருந்து கொண்டுதான் சுதந்திரத்துக்கான நீண்ட நடைப்பயணம் (The long walk to freedom 1995) என்ற தன் சுயசரிதையின் பெரும்பாகத்தை எழுதினார் நெல்சன் மண்டேலா. 1990 ஆம் ஆண்டு அவர் சிறையில் இருந்து வந்த போது எம் ஈழத்துக் கவிஞர் சோ.ப,

**"ஐயா நீ**
**வெஞ்சிறையில் நெடுநாள் வீழ்ந்தும்**
**ஒன்றாலும் குறையாத நெஞ்சுறுதி**
**யோடு நின்றிவ் வுலக மெல்லாம்**
**கொண்டாடு மனிதனாக நிமிர்ந்தாய்"**

(வடக்கிருத்தல், 147)

- என்று எழுதினார்.

'சிறைகாக்கும் காப்பு என் செய்யும் 'என்ற குறளடியை பெண்களுடன் மட்டும் குறுக்கிவிட முடியாது என்று தோன்றுகின்றது. ஈழத்திலே ஒல்லாந்தர்காலப் புலவர்களில் ஒருவராக விளங்கிய இணுவில் சின்னத்தம்பிப் புலவர் ஒல்லாந்தர்களால் சிறையில் அடைக்கப்பட்டார். இணுவில் சிவகாமியம்மையை அவர் பாடிச் சிறை மீண்டார் என்பது கதை. இதனை அவர் 'சிறை நீக்கிய பதிகம்' என்று பாடியுள்ளார். சிறையில் பட்ட துன்பங்களையும் அம்மை சிறை மீட்ட தன்மையையும் அப்பதிகத்தில் பாடியுள்ளார்.

**"சீலைப்பேன் நுளம்பெறும்பு**
**தெள்நுள்ளான் மூட்டைகடி**
**சாலப்பார் சேயனவன் மனமிரங்கான்**
**சற்றுமினி**
**மாலைப்பான் மேவமுன்னம் வந்துசிறை**
**நீக்கியருள்**
**சேலொப்பாம் உண்கண்ணெம்**
**சிவகாமசுந்தரியே"**

இவ்வனுபவத்தை புலவர் பாடியதன் முக்கியத்துவத்தைப் பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளை, "புலவரைச் சிறை வைப்பதும் சிறையில் இருந்து தெய்வத்தைப் பாடிப் புலவர் விடுதலை பெறுவதும் தமிழ்ப் புலவர் பலர் வாழ்க்கையிலே நடந்ததாகக் கூறப்படுவதுண்டு. ஆனால் அவர்களுள் ஒருவரும் மறியற் கொச்சகம் என்று வெளிப்படையாக தம்முடைய நிலையை விளக்கிப் பாடியிருப்பதாகத் தெரியவரவில்லை" என்று கூறியுள்ளார்.

சங்ககாலத்திலே சேரன் செங்கணான் என்ற மன்னன் கணைக்கால் இரும்பொறை என்ற மன்னனைச் சிறை வைத்தபோது, நீர்த்தாகத்தால் வருந்திய அவன் நீர் கேட்டும் சிறைக்காவலர்கள் தாமதித்து வழங்கியதால் அம்மானக்கேட்டின் பொருட்டு உயிர்துறந்தான் என்று அறிந்திருக்கின்றோம். இதனைப் புறநானூற்றின் 74 ஆம் பாடலில் காணலாம்.

**குழவி இறப்பினும், ஊன்தடி பிறப்பினும்,**
**ஆள் அன்று என்று வாளின் தப்பார்**
**தொடர்ப் படு ஞமலியின் இடர்ப்படுத்து இரீஇய**
**கேள் அல் கேளிர் வேளாண் சிறு பதம்,**
**மதுகை இன்றி, வயிற்றுத் தீத் தணிய,**
**தாம் இரந்து உண்ணும் அளவை**
**ஈன்மரோ, இவ் உலகத்தானே?**

ஜவகர்லால் நேரு சிறைவைக்கப்பட்டிருந்த போது (1942 - 1946) Discovery of India என்ற பிரபலமான நூலை எழுதினார். ஜோன் பனியன் (Jonu bauyna) என்பவர் மோட்சப்பிரயாணம் என்ற நூலைச் சிறையில் இருந்தே எழுதினார். அவரின் 60 நூல்களில் தலையாய நூலாகவும் 1300 பதிப்புகள் கடந்ததாகவும் அந்த நூலே விளங்குகின்றது. இந்த நூலைத் தழுவியே எச்.ஏ.கிருஷ்ணபிள்ளையால் இரட்சணிய யாத்திரிகம் எழுதப்பட்டது. சிந்தனைகளைச் சிறை வைப்பது என்பது இயலாதது என்பதையே இவையெல்லாம் எமக்கு உணர்த்துகின்றன.

அண்மையில் வாசகப் பரப்பில் அண்மைக்காலத்தில் பேசப்படும் நூல்களில் ஒன்றாக அஜித் போயகொட எழுதிய 'நீண்ட காத்திருப்பு' (தமிழில் : தேவா, வடலி, 2020) விளங்குகின்றது. 19.09.1994 இல் மன்னார்கடற்பரப்பில் விடுதலைப் புலிகளின் தாக்குதலில் மூழ்கடிக்கப்பட்ட சாகரவர்த்தனா என்ற கப்பலில் வந்த கடற்படை அதிகாரியான இவர் புலிகளால் கைதுசெய்யப்பட்டு 2002 இல் விடுதலையானார்.



அவர் விடுதலையான பிறகு தனது அனுபவங்களை விரித்துப் பேசியிருக்கும் நூலே இதுவாகும். இந்நூல் புரிந்துணர்வையும் இனநல்லிணக்கத்தையும் மன்றுமுகமாக வலியுறுத்துகின்றது.

"சிறையில் இருப்பது எவ்வளவு கடினமானதென நீங்கள் கேட்பீர்களேயாயின், அதில் பெரும்பங்கு உண்மையில் கடினமானதுதான். முழு அனுபவமுமே ஒரு சோதனைதான். பாடுகள் இருந்தும் கூட அந்தக் காலங்களை நினைக்கும்போது நான் இப்போது கவலையாக உணர்வதில்லை. வெளியார் பலருக்குக் கிடைத்திராத உள்ளார்ந்த இரகசியங்களைப் பார்க்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்திருக்கின்றது என்ற ஓர் உணர்வும் உண்டு. வேறு யாரும் இதனை அனுபவிப்பார்களா என்பதற்கான சாத்தியக்கூறும் இல்லை. யாருக்கும் இப்படி நடக்காது என்பதும் எனது நம்பிக்கை. எது எப்படியாயினும் வெளியார் எவருக்கும் கிடைக்காத ஒரு விசேட அனுபவம் அது. அதையிட்டு நான் சந்தோசம்கூடப் படலாம். என்னிடமிருந்த சிலவற்றை எடுத்துக்கொண்டாலும் இந்த அனுபவம் என் வாழ்க்கையில் எதையோ தந்திருக்கின்றது. இப்படி நான் பார்க்காவிடில், எப்படி இந்த அனுபவத்துடன் நான் வாழமுடியும்?"என்கிறார் அவர். (பக்கம் 203)

## பழைய கண்ணாடியில் புதிய 5 விம்பங்கள்

இன்றும் சிறையில் இருந்து சிவ.ஆரூரன் என்ற இளைஞன் தமிழிலும் ஆங்கிலத்திலும் புனைவிலக்கியங்களைப் படைத்துக்கொண்டிருக்கிறான். அதேபோல விவேகானந்தனூர் சதீஸ் என்பவரும் எழுதிக்கொண்டிருக்கிறார். அவரின் கவிதைத் தொகுதி ஒன்றின் தலைப்பு, 'சிறையில் இருந்து சிங்களச் சகோதரனுக்கு'. சிறைக்குள் ஒருவனின் உடலை அடைக்கலாம். ஆனால் எண்ணங்களை அடக்கிவிட முடியாது. அவன் எழுத்தாளனாக இருந்தால் இன்னும் சிறகு விரித்துக்கொண்டே இருப்பதைக் காணலாம். புறநானூற்றின் 228 ஆம் பாடலில் கிள்ளிவளவன் இறந்த செய்தியை அறிந்த ஐயுர் முடவனார் என்ற புலவன் ஈமத்தாழியைச் செய்பவனைப் பார்த்துப் பாடுகின்றான், "அவனின் உடலை அடக்கம் செய்யத் தாழி வனைவதில் விருப்பம் கொண்டுள்ளாய், ஆனால் அது ஒரு போதும் உன்னால் முடியாது. நிலவட்டமே சக்கரமாகவும் மேருமலையே மண்ணாகவும் கொண்டு வனைந்தாலன்றி அப்பெருந்தகையாளனை அடக்கும் தாழியை நின்னால் வனைதல் முடியவே முடியாது" என்கின்றான்.

**அன்னோற் கவிக்கும் கண்ணகன் தாழி**
**வனைதல் வேட்டனையாயின் எனையதூஉம்**
**இருநிலம் திகிரியாப், பெருமலை**
**மண்ணா, வனைதல் ஒல்லுமோ நினக்கே**

( புறநானூறு 228)

இது சிறையிலே இருந்த, இருக்கும் சிந்தனைமிகுந்த புலமையாளர்களுக்கும் பொருந்தும்.
சிறை இருத்தல் அவர்கட்குச் சிறகுவிரித்தல்.




# யாழ்ப்பாணப் பதிப்புத்துறை 1990 - 1995

O தில்லைநாதன் கோபிநாத்

17



தி. ச. வரதசாசன்

1990களில் புலிகளின் கட்டுப்பாட்டில் யாழ்ப்பாணக் குடாநாடு இருந்தபோது அரசாங்கத்தால் விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடைகளால் கொழும்பு, தமிழகப் பத்திரிகைகள், சஞ்சிகைகள், திரைப்படங்கள் போன்றவையும், மின்சாரம் இன்மையால் தொலைக்காட்சியும் பெரும்பாலானோருக்குக் கிடைக்காத நிலை ஏற்பட்டது. அவ்வகையில் வாசிப்பு, அறிவுத் தேடல், பொழுதுபோக்குக்கும் உள்ளூர் உற்பத்திகளையே நாட வேண்டிய நிலைமை உருவானது. அக்காலத்தில் புலிகளின் தமிழீழக் கட்டமைப்புப் பணிகளூடாக வெளிவரத் தொடங்கிய சஞ்சிகைகளில் ஒன்றான சாளரம் பாடசாலை மாணவரிடையே பெருமளவில் விநியோகிக்கப்பட்டு வெற்றி கண்டது. அதனைத் தொடர்ந்து பொதுமக்களாலும் பல இதழ்கள் தொடங்கப்பட்டன. அவ்வகையில் 1992இல் அறிவுக்களஞ்சியம் வெளிவரத் தொடங்கியது.

அறிவுக்களஞ்சியத்தை ஆசிரியராக இருந்து வெளியிட்டவர் வரதர் என்ற பெயரில் நன்கறியப்பட்ட மூத்த எழுத்தாளரும் சஞ்சிகையாளருமான தி. ச. வரதசாசன் ஆவார். வரதர் 1946 இல் வெளியான ஈழத்தின் முன்னோடி இலக்கிய இதழ்களில் ஒன்றான மறுமலர்ச்சியின் ஆசிரியர் குழுவில் இருந்தவர். பின்னர் அச்சக உரிமையாளராகி ஆனந்தன், தேன்மொழி, புதினம், வெள்ளி என பல்வேறு சஞ்சிகைகளை ஆசிரியராக இருந்து வெளியிட்டவர். இவற்றில் தேன்மொழி ஈழத்தின் முதலாவது கவிதைகளுக்கான சஞ்சிகை என்பது குறிப்பிடத்தக்கது.

அறிவுக்களஞ்சியத்தின் முதலாவது இதழ் 1992 ஜூலை மாதம் வெளியானது. முதல் இதழின் ஆசிரியராக வரதரும் இணையாசிரியராக செங்கை ஆழியானும், துணை ஆசிரியராகக் கல்வயல் வே. குமாரசாமியும் பொறுப்பேற்றிருந்தனர். பல்வேறு பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்களும் கல்வித் திணைக்களம், பல்கலைக்கழகம் போன்ற நிறுவனங்கள் சார்ந்த கல்வியியலாளர்களும் சமூகப் பெரியார்களும் அறிவுக்களஞ்சியத்தின் காப்பாளர்களாக இருந்தனர்.

"வாசகர்களின், முக்கியமாக இளைஞர்களின் பொது அறிவை வளர்ப்பதே நோக்கமாய், பற்பல துறைகளிலும் தகுதி வாய்ந்த சிறந்த அறிஞர்கள் சிறு சிறு கட்டுரைகளை இவ் வெளியீட்டில் எழுதியிருக்கிறார்கள்" என்ற முதலிதழின் முன்னட்டைக் குறிப்பு அறிவுக்களஞ்சியத்தின் நோக்கத்தையும் உள்ளடகத்தையும் விளக்குவதாக அமைந்திருந்தது. ஏ5 அளவில் 40 பக்கங்களுடன் வெளியான அறிவுக்களஞ்சியம் கதை, கவிதை, கட்டுரை, நுண்ணறிவுப் போட்டிகளையும் கொண்டிருந்தது.

அறிவுக்களஞ்சியம் நேரடியாகப் பாடசாலைகளில் விநியோகிக்கப்பட்டது. பாடசாலைகளின் சாரணர் இயக்கம், இன்ரறக்ற் கழகம் போன்ற மாணவர் கழகங்கள் அறிவுக்களஞ்சியத்தை மொத்தமாக வாங்கி வகுப்பு வகுப்பாக விற்பனை செய்தனர்.

விற்பனையில் கிடைக்கும் கழிவுத் தொகை குறித்த கழகங்களின் சமூகச் செயற்பாடுகளுக்கான மேலதிக நிதியாக இருந்தமையால் குறித்த கழகங்கள் மிகுந்த ஆர்வத்துடன் விநியோகத்தை முன்னெடுத்தன. அறிவுக்களஞ்சியத்தின் ஆசிரியரான வரதர் ஆனந்தா அச்சகத்தின் உரிமையாளராகவும் இருந்தமையால் அச்சடிப்பதில் அதிக இலாபமீட்டாமல் குறைந்த விலையையே (பத்து ரூபா) நிர்ணயித்திருந்தார். இதனால் மாணவர்களால் இலகுவாக வாங்கக்கூடிய இதழாக அறிவுக்களஞ்சியம் அமைந்தது.

அறிவுக்களஞ்சியத்தின் முதலாவது இதழ் சில நாள்களில் விற்பனையாகி முடிந்தது. அடுத்தடுத்த இதழ்களில் அதிக எண்ணிக்கையில் அச்சடிக்கப்பட்டன. கடைகளுக்கு விநியோக்கப்பட முன்னரேயே பாடசாலைகளில் இதழைப் பெறக் கூடியதாக இருந்தது.


ஒரு கட்டத்தில் மூவாயிரத்துக்கும் அதிகமான இதழ்கள் விநியோகிக்கப்பட்டன எனக் கூறப்படுகி றது. அறிவுக்களஞ்சியத்தின் போட்டிகளில் பெருமளவு மாணவர்கள் பங்கெடுத்துப் பரிசுகளைப் பெற்றனர்.

அறிவுக்களஞ்சியத்தின் ஐந்தாவது இதழில் நீங்களும் எழுதலாம் என்ற அறிவிப்பு வெளியானது. அதன்படி வாசகர்கள் சிறு குறிப்புக்கள் அல்லது அரைப்பக்க அளவான சிறு கட்டுரைகளை எழுத வாய்ப்பு வழங்கப்பட்டனர். பாடசாலை மாணவர்கள் தமது பாடசாலை அதிபர் அல்லது ஆசிரியரிடம் குறித்த ஆக்கம் மாணவரது சொந்த ஆக்கம் என்பதனை உறுதிப்படுத்தி அனுப்பினால் பொருத்தமான ஆக்கங்கள் அறிவுக்களஞ்சியத்தில் இடம்பெற்றன.

அவ்வாறு பிரசுரமான ஆக்கங்களுக்கு பத்து ரூபா சன்மானம் காசோலையாக அனுப்பி வைக்கப்பட்டது. பிற்காலத்தில் சஞ்சிகை ஆசிரியர்களாக, எழுத்தாளர்களாக, நாவலாசிரியர்களாக, ஆய்வாளர்களாக உருவான பலர் பாடசாலைக் காலத்தில் அறிவுக்களஞ்சியத்தில் எழுதத் தொடங்கியவர்கள் என்பது முக்கியமானது. நான் ஆண்டு ஆறில் கல்வி கற்றுக் கொண்டிருந்தபோது, அதாவது எனது பதினொராவது வயதில் அறிவுக்களஞ்சியத்தில் எனது முதலாவது ஆக்கம் பிரசுரமானதையும் நன்றியுடன் இங்கு பதிவுசெய்கிறேன்.

# ஒரு புதிய யாப்பும்....

(02 ஆம் பக்கத் தொடர்ச்சி)



அவ்வாறு ஒரு முன்மொழிவை உருவாக்கும்பொழுது அதில் நிபுணத்துவ ஆலோசனை அவசியம். இதற்காக தமிழ்த் தரப்பு யாப்புருவாக்கத்திற்கான நிபுணர் குழுவை உருவாக்க வேண்டும். அதற்காக தாயகத்திலும், புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியிலும் தமிழகத்திலும் இருக்கக்கூடிய துறைசார் நிபுணர்களை ஒருங்கிணைத்து ஒரு நிபுணர்குழுவை உருவாக்க வேண்டும். அந்த நிபுணர் குழு உலகளாவிய அனுபவங்களின் அடிப்படையில் முன்யோசனையை தயாரிக்கவேண்டும். அரசியல்வாதியாக இருப்பதனால் ஒருவர் நிபுணர் ஆகிவிட முடியாது .மக்களால் தெரிவு செய்யப்பட்டதால் ஒருவர் யாப்பியல் நிபுணர் ஆகிவிட முடியாது. சட்ட விற்பனர்கள் எல்லாருமே யாப்பியல் நிபுணர்கள் என்றில்லை. எனவே இது விடயத்தில் பல்துறை ஒழுக்கத்தைக் கொண்ட ஒரு நிபுணர் குழுவை உருவாக்கி யாப்பு முன்மொழிவைத் தயாரிக்க வேண்டும்.

மேற்கண்ட நான்கு அடிப்படைகளில் ஒரு யாப்பை உருவாக்குமிடத்து அது உலகசமூகத்துக்குமிகத் தெளிவான ஒரு செய்தியைக் கொடுக்கும். இலங்கை அரசாங்கம் ஏற்கவில்லை என்பதற்காக தமிழ் மக்கள் ஒரு தேசம் இல்லை என்று ஆகிவிடாது என்பதைத் தமிழ் மக்கள் நிரூபிக்கவேண்டும். அரசாங்கம் யாப்புருவாக்கத்தை விசுவாசமாக முன்னெடுக்கவில்லை என்பதனை உலக சமூகத்துக்கு நிரூபிக்க வேண்டும். ஒரு புதிய யாப்பு எனப்படுவது பல்லினத்தன்மைமிக்க, பல்சமய இரு மொழித்தன்மைமிக்க ஒரு புதிய தேசத்தை கட்டியெழுப்பும் நோக்கிலானதாக இருக்க வேண்டும். ஆனால் அப்படிப்பட்ட உன்னதமான இலட்சியங்கள் அரசாங்கத்திடம் இல்லை என்பதனைத் தோலுரித்துக் காட்டும் விதத்தில் யாப்பு முன்மொழிவைத் தயாரிக்க வேண்டும். ஆனால் நடப்பு நிலவரம் அவ்வாறில்லை. ஒவ்வொரு கட்சியும் தன்பாட்டில் குழுக்களை உருவாக்கி வைத்திருக்கிறது.கட்சிகள் அல்லாதவர்களும் அப்படித்தான்.யாப்பியல் நிபுணர்களும் உட்பட பல்துறை ஒழுக்கங்களைக் கொண்ட அறிஞர்களை ஒன்று திரட்டி உருவாக்கப்பட்ட ஒரு கூட்டு அறிவியல் ஒழுக்கத்துக்குரிய நிபுணர் குழு யாரிடம் உண்டு?

ஏற்கனவே தமிழ் மக்கள் மத்தியில் கடந்த இரு தசாப்த காலத்தில் உருவாக்கப்பட்ட குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய நான்கு முன்மொழிவுகள் உண்டு.ஒன்று நோர்வேயின் சமாதான அனுசரணைக் காலத்தில் உருவாக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்குரிய முன்மொழிவு. இரண்டாவது தமிழ் மக்கள் பேரவை மூன்று கட்சிகளின் பங்களிப்போடு உருவாக்கிய ஒரு முன்மொழிவு. மூன்றாவது வடமாகாணசபை தயாரித்த ஒரு முன்மொழிவு.நான்காவது சம்பந்தரும் ரணிலும் சேர்த்து உருவாக்கிய அதிகம் சர்ச்சைகளுக்கு உள்ளாகிய ஒரு இடைக்கால வரைபு.

இந்த நான்கு ஆவணங்களும் இருக்கத்தக்கதாக இப்பொழுது மறுபடியும் புதிய புதிய முன்மொழிவுகள் உருவாக்கப்படுகின்றன. சில முன்மொழிவுகள் ஏற்கனவே இருந்த முன்மொழிவுகளைப் பின்பற்றி அல்லது அவற்றில் உள்ள செழிப்பான அம்சங்களை உள்வாங்கி உருவாக்கப்படுவதாகத் தெரிகிறது. எனினும் கடந்த சில தசாப்தகால அனுபவங்களைத் தொகுத்துப் பார்க்கும் பொழுது தமிழ் மக்கள் திரும்பத் திரும்ப சக்கரத்தை கண்டுபிடிப்பதாகத் தோன்றவில்லையா?

தமிழ் மக்கள் ஒரு மிகச்சிறிய இனம். இனப்படுகொலையினாலும் புலப்பெயர்ச்சியாலும் நீர்த்துப்போன, சிதறடிக்கப்பட்ட ஒரு மக்கள் கூட்டம். இச்சிறிய மக்கள் கூட்டத்தின் மத்தியிலிருந்து தொகையாக நிபுணர்களை கண்டுபிடிக்க முடியாது. இருக்கின்ற அற்ப சொற்ப நிபுணர்களையும் கட்சிகளும் ,கட்சிகள் அல்லாத அமைப்புகளும் பங்கிட்டால் என்ன நடக்கும் ? திரும்பத் திரும்ப சக்கரத்தைக் கண்டுபிடித்து சக்தியை விரயமாக்கும் நிலையிலா தமிழர்கள் இருக்கிறார்கள்? தனிச் சிங்கள வாக்குகளால் அசுர பலத்தோடு வெற்றி பெற்றிருக்கும் அரசாங்கம், ஒரு பொறியாக அல்லது தந்திரமாக முன்வைக்கும் யாப்புருவாக்க முயற்சியை அரசாங்கத்துக்கே ஒரு பொறியாக மாற்ற சிதறிக் கிடக்கும் தமிழ்த்தரப்புக்கள் ஒன்றுபட்டு முயற்சிக்குமா?

சஞ்சீவி
27 டிசெம்பர் 2020

# நலம் அறிய...

**மருத்துவர் ப்ரியா கமலசிங்கம்**
(யாழ்.போதனா மருத்துவமனை,
– சிலாபம் மாவட்டப்
பொது மருத்துவமனை)




**Intussusception - என்னும் குடல் ஏற்றம்- இந்நோயின் ஆபத்து குழந்தையின் எந்த வயது வரை இருக்கும்? இந்த நோய் ஏற்பட காரணம் என்ன? இந்த நோயின் அறிகுறிகளில் கட்டாயமாக வாந்திபேதி இருக்குமா?**

**சி.தமயந்தி, யாழ்ப்பாணம்.**


இது சிலவேளைகளில் உயிராபத்தில் முடியும் நோயாகும். (தகுந்த கவனமின்றி அலட்சியமாக இருக்கும் பட்சத்தில்) **Intussusception** என்னும் குடல் ஏற்றம்: குடலின் ஒரு பகுதி மடிந்து **telescope** ( படத்திலுள்ளது போல) போல மறுபகுதியினுள் உட்செல்வதாகும். இதனால் சமிபாடடைந்த உணவு கீழே செல்ல இயலாமல் தேங்கிவிடுகிறது.
பெரும்பாலும் 3 மாதத்திலிருந்து 6 வயதுவரை உள்ள சிறார்களே அதிகம் பாதிக்கப்படுகின்றனர். இதில் 60 வீதமானோர் 3 மாதத்திலிருந்து ஒரு வயது வரையானோர். பெண்பிள்ளைகளுடன் ஒப்பிடுகையில் ஆண் பிள்ளைகள் நான்கு மடங்கு பேர் (x4 தடவை) அதிகம் பாதிக்கப்படுகின்றனர்.
சரியான சிகிச்சை அளிக்கப்படாமலும் தகுந்த வேளையில் இனம்காணப்படாவிடினும் இந்நோய் பாரதூரமான விளைவுகளுக்கு இட்டும் செல்லக் கூடியதொன்றாகும். சாதாரணமாக வயிற்றுப் பகுதித் தொற்றிலிருந்து (**abdominal infection**) தொடங்கி குடல் தொற்று (intestinal infection) அடிவயிற்றுக் குடல் வெளிப்புற சவ்வு அழற்சி (**Peritonitis**) வரை சென்று இறுதியில் மரணம் வரை செல்லக்கூடிய அச்சுறுத்தல் ஏற்படுகிறது. இந்நோய் ஏற்படுவதன் காரணம் இன்றுவரை சரியாக வரையறுக்கப்படவில்லை. (**cause : unknown**) சில வேளைகளில் குடலின் அமைப்பில் ஏற்படும் சவ்வு வளருதல் போன்ற அசாதாரண நிலைமைகள் காரணமாக அமையலாம்.


### குடல் ஏற்றத்துக்கான அறிகுறிகள்

1. ஒரு சாதாரண ஆரோக்கியமான உடல்நிலையில் பிள்ளை ஒருவருக்கு திடீரென, (**sudden onset**) விட்டு விட்டு தொடரும் (**Intermittent**) வயிற்றுவலி.
2. விட்டு விட்டு ஏற்படும் இவ்வலியின் இடைவேளையில் குழந்தை இயல்பு நிலையில் இருப்பது சாத்தியமென்பது இங்கு குறிப்பிடத்தக்கது.
3. பச்சிளம் குழந்தையாயின் (**infants**) கைகள், கால்களை வலிந்து உள்ளிழுத்து வீறிட்டு அழுவது.
4. வாந்தியெடுத்தல்
5. சிவப்பு ஜெலி போன்று மலம் கழித்தல். இவற்றில் ஏதாவது ஒரு அறிகுறி தென்படினும் உங்கள் குழந்தையை உடனடியாக, தாமதிக்காமல் வைத்தியசாலைக்கு கொண்டு வரவேண்டும்.





**சரியான சிகிச்சை அளிக்கப்படா விடினும்/ தகுந்த வேளையில் இனம் காணப்படாவிடினும் இந்நோய் பார தூரமான விளைவுகளுக்கு இட்டும் செல்லக் கூடியதொன்றாகும்.**

வைத்தியர்கள் X-ray கதிர் மற்றும் ஸ்கான் போன்ற சோதனைகளை உடனடியாக மேற்கொண்டு குடல் ஏற்றம் ஏற்பட்டிருக்கும் பகுதியை இனம்காண்பர். பின்னர் **Saline reduction hydrostatic reduction** - அதாவது மலவாசலினூடு 2 வகையான எனிமா மூலம் குடல் ஏற்றத்தினை சரிசெய்ய முயல்வர். 10-15 வீதமான குழந்தைகளுக்கு இது பலனளிக்காமல் சத்திர சிகிச்சை செய்ய வேண்டிய நிலைமையும் ஏற்படுகின்றது.
குடல் ஏற்றம் ஏற்பட்டு, மேற்கூறியவாறு சீர்திருத்தப்பட்ட, ஒரு குழந்தைக்கு 24 மணித்தியாலயங்களுக்குள் மீண்டும் குடல் ஏற்றம் ஏற்பட வாய்ப்பிருப்பதனால், மருத்துவ அவதானிப்பில் ஒருநாள் வைத்தியசாலையிலிருந்து மருத்துவரால் உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே வீடு செல்ல அனுமதிக்கப்படுவர்.

### ஒருமுறை குடல் ஏற்றம் ஏற்பட்ட பிள்ளை ஒருவருக்கு

1. 101°f க்கு மேற்பட்ட காய்ச்சல்
2. வாந்தி
3. வயிற்றோட்டம்
4. ஜெலித்தன்மையான மலம் கழிப்பு
5. வயிற்றுவலி

ஏற்படின் உடனடியாக வைத்தியசாலையை அணுக வேண்டும்.
குடல் ஏற்றத்தினால் சம்பவிக்கும் சிறுவர்களின் மரணம் 100 சதவீதம் தடுக்கப்படக்கூடியது.

---

# வித்துவான் பதில்கள்!



டியர் வித்தூஸ்... 'கொரோனா எல்லாம் எனக்கு கோன் ஐஸ் மாதிரி' எனக் கூறிக் கொண்டு ஊர் சுற்றும் அஜாக்கிரதை ஆசாமிகள் பற்றி என்ன நினைக்கி றீர்கள் வித்தூ?

கனிஸ்டன், தாவடி

கோன் ஐஸ்ஸிற்குள் புழு இருந்து வயிற்றைக் கலக்கும் போது தான் தெரியும் அது நல்ல கிருமியா? கெட்ட கிருமியா? என்று.




**உங்கள் அலுவலக கலந்துரையாடலில் நடந்த குபீர் சம்பவமொன்றை சொல்லுங்களேன் வித்துவானே...**

சிந்துஜன், அளவெட்டி.

அண்மையில் புரேவிப் புயலின்போது எமது அலுவலகம் முழுவதும் ஒழுக்கு. வெள்ளம், கண்டிப்பான, கடும் கோபங் கொள்ளும் மிகப்பெரிய மேலதிகாரி அதைப் பார்வையிட வந்தார். என்னிடம் இந்த அலுவலகம் எப்போதும் ஒழுகுமா? என்று கேட்டார்.
நான் "மழை பெய்யும் போது மட்டும் தான் ஒழுகும் சேர்" என்று சொன்னேன். சரி உரிய நடவடிக்கை எடுக்கிறேன் என்று விட்டு அவர் போய்விட்டார். உரையாடலைக் கவனித்துக் கொண்டிருந்த நண்பர் சொன்னார்."உம்முடைய நக்கல் அவருக்கு விளங்கி இருந்தால் வேலையை விட்டே வீட்டுக்கு அனுப்பி இருப்பார்".

**வித்து ஐயா... தனி மனிதராக கொரோனாவிலிருந்து தப்பிக்க நீங்கள் எடுத்த நடவடிக்கைகள் என்னென்ன?**
**நி.தமிழினி, வல்வெட்டித்துறை.**

விலகி இருந்ததும் கிட்டப் போகும்போது பாதுகாப்புக் கவசங்கள் அணிந்ததும் தான். கைகளையும் கண்டபடி எதற்குள்ளும் வைக்காமற் கவனமாக வைத்தி ருந்தேன்.



**அண்ணே வித்து...**
**புயலுக்குப் பெயர் வைக்கும் வாய்ப்பு உங்களுக்குக் கிடைத்தால் என்ன பெயர் வைப்பீர்கள்?**

எஸ்.தாமோதம், கரவெட்டி.

பொண்டாட்டி

# மாணவர் கழகம்



163
**பெயர்:** பாலநாதன் விஷ்ணுகன்
**முகவரி:** வன்னியசிங்கம் வீதி, ஆவரங்கால் மேற்கு.
**பி. திகதி:** 29.10.2007
**பாடசாலை:** யா/ ஆவரங்கால் நடராஜ வித்தியாலயம்.



164
**பெயர்:** அ.மேரிசூன்
**முகவரி:** மெயின் வீதி, கீரிமன்னார்..
**பி. திகதி:** 04.03.2011
**பாடசாலை:** மன்/ புனித அன்னை திரேசா றோ.க.த. பாடசாலை.



165
**பெயர்:** ராஜவி பாஸ்கரலிங்கம்,
**முகவரி:** ஏழாலை கிழக்கு, ஏழாலை.
**பி. திகதி:** 07.05.2006
**பாடசாலை:** யா/ இந்து மகளிர் கல்லூரி.



166
**பெயர்:** கிருஷ்டிகா செந்துராஜ்,
**முகவரி:** செட்டித்தெரு, நல்லூர்.
**பி. திகதி:** 18.12.2012
**பாடசாலை:** யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்.



167
**பெயர்:** பானுகோபன் வைஸ்ணவி
**முகவரி:** 2ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு.
**பி. திகதி:** 22.08.2012
**பாடசாலை:** சிறி சுப்பிரமணிய வித்தியாலயம்.



168
**பெயர்:** ஜயந்தினி குணசிங்கம்
**முகவரி:** 18, முதலாம் ஒழுங்கை பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
**பி. திகதி:** 28.05.2005
**பாடசாலை:** யா/ இந்து மகளிர் கல்லூரி.



169
**பெயர்:** வி.விவாசகன்,
**முகவரி:** 62, சைவப் பாடசாலை ஒழுங்கை கோண்டாவில் மேற்கு.
**பி. திகதி:** 2008.08.21
**பாடசாலை:** யா/ இந்துக் கல்லூரி.



170
**பெயர்:** ஹ.நிலக்ஷன்சர்மா
**முகவரி:** 67, சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்.
**பி. திகதி:** 2007.10.14
**பாடசாலை:** யா/ மத்திய கல்லூரி.



171
**பெயர்:** பு.டனுஸ்காந்
**முகவரி:** உடையார்கட்டு வடக்கு உடையார்கட்டு.
**பி. திகதி:** 2003.07.03
**பாடசாலை:** மு/ உடையார்கட்டு மகா வித்தியாலயம்.



172
**பெயர்:** வி.தேனுஜன்,
**முகவரி:** நீராவிப்பிட்டி, முள்ளியவளை, முல்லைத்தீவு.
**பி. திகதி:** 17.09.2007
**பாடசாலை:** மு/வித்தியானந்தா கல்லூரி.

சஞ்சீவி

**மாணவர் கழகம்**


1. முழுப்பெயர்: ............................................
2. முகவரி: ............................................
............................................
3. பிறந்த திகதி: ............................................
4. கல்வி கற்கும் பாடசாலை: ............................................
5. கற்கும் தரம்: ............................................
6. தொலைபேசி இலக்கம்: ............................................

மாணவர் ஒப்பம் ............ பெற்றோர் ஒப்பம் ............

0773165555

அனுப்ப வேண்டிய முகவரி:
**உதயன் சஞ்சீவி**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
sanjeevi@uthayan.com

# சொற்சிலம்பம் போட்டி 27



**அனுப்புபவர் பெயர்:**............................................
**முழுமையான தபால் விலாசம்:** ............................................
............................................
**கையொப்பம்:**............................................

ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருகின்றமையால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

## இடமிருந்து வலம்

1. உடல் ஆரோக்கியம், 4.நிரந்தரமான வாழ்விடம், 6.அழிப்பு, 7.மரக்கறி வகைகளுள் ஒன்று, 8.சேற்று மண், 9.கிளிநொச்சி மாவட்டத்தில் உருவாக்கப்பட்ட இளைஞர் விவசாயத் திட்டம் இங்கு தான், 11.காணிக்குள் பிரவேசிக்க அமைக்கப்படுவது, 12.முல்லைக் கொடி படர தேர் ஈந்த மன்னன், 14.ஒரு உப உணவுப் பொருள், 15.வெளிநாட்டு ஆட்சியாளர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட உணவு வகை, 16.ஊர்வன இனம்; மனிதர்களால் உண்ணப்படுவதும் கூட, 17.நல்லூர் ஆலய சுற்றாடலில் சித்தர்கள் தங்கிய இடம், 18.உணவுக்காகப் பயன்படுத்தப்படும் ஒருவகை மா, 19. சொந்த இடத்தில் வாழ இயலாது இடம் பெயர்வாழ்வு

## மேலிருந்து கீழ்

1.கடவுளின் பிரதிநிதிகள், 2.காந்தியின் உடை வகை, 3.எம்முடைய என்பதற்கான சுட்டுச் சொல், 4.தீவிரமான, 5.பாக்கு நீரிணையில் இந்தியக் கடலோரம் காணப்படும் மணல் மேடுகள், 7.மனக் கஷ்டம், 9.தெளிவான எடுத்துரைப்பு, 10.துப்பாக்கியை இதற்கு மட்டுமே பயன்படுத்தலாம், 12.ஊரும் உலகமும் என்பதை ஊரும் இதுவும் எனவும் குறிப்பிடுவர். 13.மத்திய மலைநாட்டின் தலைநகரம், 14.மறைப்புக்காகப் பயன்படுத்தப்படும் தடிப்பான துணிவகை, 15.புகழ்பூத்த தமிழ்க் கவிஞர், 16.ஈசனின் இடப்பாகம் அமர்ந்தவள், 17.உடம்பு; கடைசி எழுத்தான "ம்" இழந்து நிற்கிறது

### சொற்சிலம்பம் போட்டி 25 க்கான விடைகள்

**இடமிருந்து வலம்**
1.அவமரியாதை, 7.கண்ணி, 8.சலங்கை, 9.வடு, 10.நுகம், 11.சகம், 12.கூன், 13.பாவலர், 15.ஆம், 16.குரோதம், 17.பதி, 19.சிக்கல், 20.ஏகம், 21.சுகம், 22.தழும்பு

**மேலிருந்து கீழ்**
1.அகவல் பா, 2.வண்டு, 3.மணி, 4.யாசகம், 5.தைலம், 6.பகைவன், 10.நுகர்தல், 11.சலரோகம், 12.கூம்பகம், 14.வகுக்க, 18.திம்பு, 19.சிசு, 20.ஏழு

**சொற்சிலம்பம் போட்டி இல.27**
பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்
**உதயன் சஞ்சீவி**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
என்னும் முகவரிக்கு
**02.01.2021** இற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

## போட்டி விதிகள்

- வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
- சஞ்சீவியில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
- போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
- வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே

ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/=

பரிசாக வழங்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

**போட்டி இலக்கம் 25இல் வெற்றி பெற்றோர் விபரம்**

**1 ஆம் பரிசு**
**ஜெ.லெவீந்**
இல: 7A, இராணி மில் வீதி, இறம்பைக்குளம், வவுனியா.


**2 ஆம் பரிசு**
**செல்லத்தம்பி உதயகுமார்**
சமூக சேவைத் திணைக்களம் முல்லைத்தீவு.

**3 ஆம் பரிசு**
**புவனேந்திரன் சஞ்ஜை**
1ஆம் வட்டாரம், நெடுந்தீவு மேற்கு, நெடுந்தீவு.

**4 ஆம் பரிசு**
**கு.குலமாலிகா**
வட்டு கிழக்கு, சித்தன்கேணி

**5 ஆம் பரிசு**
**அ.சத்தியரூபன்,**
'குறும்பன்', ஏழாலை மேற்கு, ஏழாலை

○ மயூ



**1992** ஆம் ஆண்டு மார்ச் மாதம் 27ஆம் திகதி அதிகாலை. கேரளா, கோட்டயத்தில் உள்ள பயஸ் டென்த் கன்னியாஸ்திரிகள் மடத்துக்குள் நுழைந்த அடக்கா ராஜு, மெல்ல மெல்ல மடத்தின் மாடிக்கு ஏறினான். அங்கு பொருத்தப்பட்டிருந்த இடிதாங்கியில் இருந்த அலுமினியக் கம்பிகளை கழற்ற ஆரம்பித்தான். அடக்கா ராஜுவின் தொழில் அலுமினியப் பொருள்களைத் திருடுவது. திருடிய அலுமினியப் பொருள்களை தனது நண்பனான சமீரிடம் விற்றுவிடுவான் அடக்கா. இவன் மீது கேரளாவில் 40 க்கு மேற்பட்ட சிறிய வழக்குகள் இருக்கின்றன. கொட்டப்பாக்கு என்பதற்கு அடக்கா என்பதுதான் மலை

முகத்தில் கீறல் காயங்களும் இருந்தன. தலையில் காணப்பட்ட காயமும், கீறல்களும் கிணற்றில் விழுந்ததால் ஏற்பட்டிருக்கலாம் என்று முடிவெடுத்தனர் உள்ளூர்ப் பொலிஸார். அபயாவின் மரணம் தற்கொலை என்று வழக்கை முடித்தனர். ஆனால் அபயாவின் குடும்பத்தினர் அதை ஏற்கவில்லை.

# அடக்கா ராஜுவால் அபயாவுக்கு நீதி!



அடக்கா ராஜு

## திருடன் ஹீரோ; வில்லன் பாதிரியார்

## 19 வயது அபயாவின் மரணத்தில் மர்மம்

## 28 வருடங்களுக்குப் பின் வென்ற உண்மை

யாளப் பெயர். தேங்காய், கொட்டப்பாக்கு என்பவற்றையும் ராஜு விட்டு வைப்பதில்லை என்பதால் அவனது பெயருக்கு முன்பாக அடக்கா ஒட்டிக் கொண்டுவிட்டது. இடிதாங்கியில் இருந்த அலுமினியக் கம்பிகளைக் கழற்றிக் கொண்டிருந்த அடக்கா கீழே இருவர் ரோர்ச் லைட்டுடன் நடந்து செல்வதைக் கண்டு இருட்டோடு இருட்டாக தன்னை மறைத்துக் கொண்டான். அவர்கள் வெளிச்சமுள்ள பகுதிக்கு வந்தபோது அடக்காவுக்கு அதிர்ச்சி.
ஏனெனில் அவர்கள் இருவரும் பாதிரியார்கள். தனியே பெண் கன்னியாஸ்திரிகள் தங்கியிருக்கும் மடத்தில் இந்த ஆண் பாதிரியார்கள் அகால வேளையில் ஏன் நடமாடுகின்றனர் என்ற சந்தேகம் எழுந்தபோதும், தப்பிக்கும் அவசரத்தில் அப்போதைக்கு அதனை அவன் பெரியதொரு விடயமாகக் கருதவில்லை. அவர்கள் அங்கிருந்து அகன்றதும் அலுமினியக் கம்பிகளோடு வெளியேறினான் அடக்கா.
காலையில் சமீரிடம் அலுமினிங்களை விற்றுக் காசாக்கிக் கொண்டிருந்தபோது, பயஸ் டென்த் கன்னியாஸ்திரிகள் மடம் பரபரப்பாகவும், பதற்றமாகவும் இருந்தது. அந்தக்கன்னியாஸ்திரிகள் மடத்தில் தங்கிருந்த 19 வயதுக் கன்னியாஸ்திரி ஒருவர் அங்கிருந்த கிணற்றில் உயிரற்றுக் கிடந்ததே அதற்குக் காரணம். கிணற்றில் சடலமாக கிடந்தவர் கோட்டயத்தைச் சேர்ந்த கன்னியாஸ்திரி அபயா. இவர் கன்னியாஸ்திரிகள் மடத்தில் தங்கியிருந்து 12 ஆம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்தவர்.
விடயம் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டு, சடலம் மீட்கப்பட்டு விசாரணைகள் ஆரம்பித்தன. அபயாவின் தலையில் காயம் ஒன்று இருந்தது.
முகத்தில் கீறல் காயங்களும் இருந்தன. தலையில் காணப்பட்ட காயமும், கீறல்களும் கிணற்றில் விழுந்ததால் ஏற்பட்டிருக்கலாம் என்று முடிவெடுத்தனர் உள்ளூர்ப் பொலிஸார். அபயாவின் மரணம் தற்கொலை என்று வழக்கை முடித்தனர். ஆனால் அபயாவின் குடும்பத்தினர் அதை ஏற்கவில்லை.

### மர்மம் இருக்கிறது

சமூக ஆர்வலரான ஜோமன் புதன்புரக்கல் என்பவர்தான் முதலில் அபயா மரணத்தில் மர்மம் இருக்கின்றது என்பதை வெளிக்கொண்டு வந்தவர். இவர் கேரள உயர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்து, இந்த மரணத்தில் மர்மம் இருக்கின்றது, வழக்கை சி.பி.ஐக்கு மாற்ற வேண்டும் என்று கோரினார். அதை ஏற்றுக் கொண்ட உயர்நீதிமன்றம், வழக்கை சி.பி.ஐ. க்கு மாற்றியது. சி.பி.ஐ. விசாரணைகள் ஆரம்பித்தன. கொன்வென்டில் அபயாவுடன் இருந்தவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணையில் அபயா மகிழ்ச்சியான ஒரு வாழ்வை வாழ்ந்து கொண்டிருந்தார் என்பது தெரிந்தது. அவர் நிச்சயமாக தற்கொலை செய்திருக்க மாட்டார் என்று நம்ப முடிந்தது.
அபயா தற்கொலை செய்யவில்லை என்பதைக் கண்டுபிடித்தாலும், விசாரணைகள் அதற்கு மேல் நகரவில்லை. அதன்பின்னர் இந்த வழக்கை விசாரணை செய்ய புதிதாக சி.பி.ஐ. குழு ஒன்று அமைக்கப்பட்டது.

### ஒன்று இங்கே, மற்றது அங்கே

அபயாவின் உடல் மீட்கப்பட்ட கிணறு கன்னியாஸ்திரிகள் மடத்தின் சமையலறைக்கு பக்கத்தில் இருக்கின்றது. சமையலறையின் 'பிரிட்ஜுக்கு' பக்கத்தில் அபயாவின் செருப்பு ஒன்று இருந்தது. மற்றைய செருப்பு கிணற்றுக்கு அருகில் இருந்தது. பிரிட்ஜில் இருந்த தண்ணீர் போத்தல் கீழே கிடந்தது. பிரிட்ஜ் பாதி திறந்த நிலையிலும், பாத்திரங்கள் அங்காங்கே சிதறியும் இருந்தன. அவரின் தலையில் இருந்த காயமும், முகத்தில் இருந்த கீறல்களும் அந்த இடத்தில் ஏதோ ஒரு சம்பவம் நடந்திருப்பதைப் புலப்படுத்தின. சி.பி.ஐ தீவிர விசாரணையில் இறங்கியபோது, பாதிரியார் தோமஸ் கூட்டூர், கன்னியாஸ்திரி செபி, மற்றொரு பாதிரியார் ஜோஸ் பூத்ரிக்காயில் ஆகியோர் விசாரணை வளையத்துக்குள் வந்தனர். பெண்கள் மட்டும் தங்கியிருக்கும் கன்னியாஸ்திரிகள் மடத்துக்கு இந்த இரு பாதிரியார்களும் அடிக்கடி வந்து சென்றிருக்கின்றார்கள் என்பதை மோப்பம் பிடித்தது சி.பி.ஐ.

### குரைக்காத நாய்கள்

பெண்கள் மட்டும் தங்கியிருக்கும் அந்த கன்னியாஸ்திரிகள் மடத்தின் பாதுகாப்புக்காக நாய்கள் இருந்தன. கொலை நடந்த அன்று நாய்கள் குரைக்கவில்லை என்று சமையல் வேலை செய்யும் பெண் தனது வாக்குமூலத்தில் கூறியிருந்தார். அதனால் அந்த இடத்துக்கு நன்கு பரிச்சயமானவர்களே அந்தக் கொலையில் சம்பந்தப்பட்டிருக்கின்றனர் என்று சி.பி.ஐ. சந்தேகப்பட்டது. பாதிரியார்கள் மீதும், கன்னியாஸ்திரி மீதும் சந்தேகம் இருந்தபோதும், ஆதாரங்கள் எவையும் சி.பி.ஐ. கைகளில் சிக்கவில்லை. அதனால் வழக்கு விசாரணைகள் முட்டுச்சந்தில் நின்ற போதுதான், அடக்கா ராஜு இந்த வழக்கில் பெரும் திருப்பத்தை ஏற்படுத்தினான்.

### வந்தான் ராஜு

கொலை நடந்த அன்று, அந்த இடத்துக்குத் தான் திருடச் சென்றதாகவும், அப்போது இரு பாதிரியார்கள் அங்கே நடமாடியதைத் தான் கண்டதாகவும் அடக்கா ராஜு சாட்சியமளித்தான். அந்த இருவரில் ஒருவர் தோமஸ் கூட்டூர் என்றும் அடக்கா உறுதியாக சி.பி.ஐயினரிடம் வாக்குமூலமளித்தான். ராஜுவின் சாட்சியத்தின் அடிப்படையில், சமீரின் கடை யில் பொலிஸார் தேடுதல் மேற்கொண்டனர்.

ராஜூ கன்னியாஸ்திரிகள் மடத்தில் திருடிய அலுமினியம் அங்கு கண்டுபிடிக்கப்பட்டது. அதனால் ராஜூவின் சாட்சியம் உண்மை எனத் தெரியவந்தது.

அதன்பின்னரும் விசாரணைகள் தொடர்ந்தன. , இந்தக் கொலையில் தொடர்புபட்டுள்ளமை உறுதியானதை அடுத்து பாதிரியார் தோமஸ் கூட்டூர், கன்னியாஸ்திரி செபி, மற்றொரு பாதிரியார் ஜோஸ் பூத்ரிக்காயில் ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

பாதிரியார் தோமஸ் கூட்டூர்



கன்னியாஸ்திரி செபி



## குற்றுயிரோடு கிணற்றுக்குள் வீசப்பட்ட அபயா

மூவரையும் கைது செய்த சி.பி.ஐ. தீவிர விசாரணைகளை மேற்கொண்டது. விசாரணையில் பல அதிர வைக்கும் விடங்கள் வெளியாகின. தோமஸ் கூட்டூரும், செபியும் உண்மைகளைக் கக்கத் தொடங்கினர். கன்னியாஸ்திரிகள் மடத்துக்குள் பாதிரியார் தோமஸ் கூட்டூர் அடிக்கடி சென்று வந்திருக்கின்றார். அங்குள்ள கன்னியாஸ்திரி செபியுடன் முறையற்ற தொடர்பில் இருந்திருக்கின்றார். இந்தத் தொடர்பு நீண்ட காலமாகத் தொடர்ந்திருக்கின்றது.

சம்பவ தினத்தன்று, படிப்பதற்காக அதிகாலை எழுந்த அபயா தண்ணீர் குடிக்க சமையல் அறைக்குச் சென்றிருக்கின்றார். அப்போது பாதிரியாரும், கன்னியாஸ்திரியும் ஒன்றாக இருப்பதை அவர் கண்டிருக்கின்றார். அபயா தங்களைக் கண்டதை தேமஸூம், செபியும் கண்டுவிட்டனர்.

இந்த விடயம் வெளியே தெரியக் கூடாது என்பதற்காக இருவரும் சேர்ந்து அபயாவின் தலையில் கோடரிக் கைபிடியால் தாக்கியுள்ளனர். அபயா குற்றுயிராக இருக்கும்போதே அவரைக் கிணற்றில் தள்ளியுள்ளனர். அது ஒரு தற்கொலை என்று நம்ப வைக்க அவர்கள் முயன்றனர்.

ஜோஸ் பூத்ரிக்காயில் இந்த வழக்கில் கைது செய்யப்பட்டிருந்தாலும், அவருக்கு எதிராகப் போதுமான சாட்சியங்கள் கிடைக்கவில்லை. அடக்காவாலும் ஜோஸ் பூத்ரிக்காயிலை சரியாக அடையாளம் காட்ட முடியவில்லை. இந்த வழங்கில் இருந்து தன்னை விடுவிக்குமாறு ஜோஸ் பூத்ரிக்காயில் உயர்நீதிமன்றத்தை அணுகியதை அடுத்து,அவரை விடுவித்தது உயர்நீதிமன்றம்.

### கன்னித்தன்மைக்கு அறுவை சிகிச்சை

இந்த வழக்கில் 177 சாட்சியங்கள் விசாரிக்கப்பட்டன. இந்த வழக்கில் ஆலப்புழா அரசு மருத்துவமனையின் மகப்பேறு பிரிவு தலைவர் லலிதாம்பா அளித்த சாட்சியும் முக்கியமானதாக அமைந்தது.

நீதிமன்றத்தில் லலிதாம்பா அளித்த சாட்சியத்தில், "செபியை கைது செய்த பொலிஸார் 2008 ஆம் ஆண்டு நவம்பர் 19 ஆம் திகதி கன்னித்தன்மை பரிசோதனைக்காக என்னிடத்தில் அழைத்து வந்தனர். அப்போது, கன்னித்தன்மையுடன் இருப்பது போல காட்டிக் கொள்வதற்காக செபி அறுவை சிகிக்சை செய்திருந்தார் என்பதைக் கண்டுபிடித்தேன்" என்று கூறினார்.

இப்படி பல்வேறு திருப்பங்களுடன் நடைபெற்ற இந்த வழக்கில் பல சாட்சியங்கள் பிறழ் சாட்சியங்களாக மாறினர். சிலர் தங்கள் சாட்சியத்தில் உறுதியாக நின்றனர். 28 ஆண்டுகளாக நடைபெற்று வந்த இந்த வழக்கு கடந்தவாரமே முடிவுக்கு வந்துள்ளது. அபயா கொலை வழக்கில் குற்றவாளி களான பாதிரியார் தோமஸ் கூட்டூர், கன்னியாஸ்திரி செபி ஆகியோருக்கு வாழ்நாள் சிறையும், ஆதாரங்களை அழித்த குற்றத்துக்கு இருவருக்கும் ஆயுள் சிறையும் என இரட்டை ஆயுள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. இந்த இரு ஆயுள் சிறைத் தண்டனையையும் ஏககாலத்தில் இருவரும் அனுபவிக்க வேண்டும். இருவருக்கும் தலா 5 லட்சம் இந்திய ரூபா அபராதமும் விதித்து தீர்ப்பளித்தது சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றம்.

### ஹீரோவான அடக்கா

28 ஆண்டுகளாக நடைபெற்ற இந்த வழக்கில் நீதி கிடைக்க அடக்கா ராஜூவின் சாட்சியே முக்கிய காரணம். இந்த வழக்கில் சி.பி.ஐ. விசாரணை ஆரம்பித்ததும், தானாக முன்வந்து சாட்சியளித்திருந்தான் அடக்கா ராஜூ.


இந்த வழக்கில் அரசியல் செல்வாக்கு, பண பலம் மேலோங்கியிருந்த நிலையில் சி.பி.ஐ. அதிகாரிகளே திணறியிருந்தனர். விசாரணை சி.பி.ஐக்கு கை மாறியபோதே, அபயாவின் அங்கி மற்றும் டைரி போன்ற முக்கிய ஆதாரங்களை மாநிலப் பொலிஸார் வேண்டுமென்றே அழித்திருந்தனர். இதிலிருந்து எத்தனை பலம் மிக்கவர்கள் இந்த வழக்கில் அழுத்தங்களைக் கொடுத்துள்ளனர் என்பதை உணர முடியும். இத்தனை அழுத்தங்கள் கொண்ட வழக்கில் அடக்கா எதற்கும் விலை போகாது இறுதிவரை உறுதியாக நின்றமை அனைவரையும் கவர்ந்திருக்கின்றது.58 நாள்கள் சிறையில் அடைக்கப்பட்டும், பணம் பொருள் பதவி ஆசை காட்டப்பட்டும் அசையாது நின்ற அடக்கா நீதிமன்றக் கூண்டில் ஏறி பாதிரியார் தோமஸை அடையாளம் காட்டினான். அதுவே இந்த வழக்கு முடிவுக்கு வரக் காரணமானது. இந்த வழக்கை விசாரணை செய்த சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்ற நீதிபதி சனில்குமார் தனது தீர்ப்பில் அடக்கா ராஜூவையும் தொட்டுக் காட்டியிருக்கின்றார். "ராஜூ திருடுபவராக இருந்தாலும் நேர்மையான மனிதர். சூழல் காரணமாக திருட்டில் ஈடுபட்டாலும் உண்மையைத் தவிர வேறு எதையும் அவர் பேசுவதில்லை. எத்தனையோ சலுகைகள் தருவதாக வற்புறுத்தியும் தன் வாக்குமூலத்தில் உறுதியாக நின்ற மனிதர்" என்று பாராட்டியிருக்கின்றார்.

ராஜூ இப்போது திருடுவதில்லை. தீர்ப்பு வெளியானதும் மகிழ்ச்சியை வெளிப்படுத்திய ராஜூ "எனக்கும் ஒரு மகள் இருக்கின்றாள் இப்போதும் குடிசையில்தான் வசிக்கின்றேன். அந்த இளம் பெண்ணின் இறப்புக்குக் காரணமானவர்களுக்குத் தண்டனை வாங்கிக் கொடுக்க வேண்டும் என்பதில் நான் தீர்க்கமாக நின்றேன்" என்று கூறினார்.

### தளராத சமூக ஆர்வலர்

அபயா இறப்புக்கு நீதி வேண்டும் என்பதில் உறுதியாக நின்ற மற்றொருவர் சமூக ஆர்வலரான ஜோமன் புதன்புரக்கல். இவரால்தான் இந்த வழக்கு மீண்டும் தூசி தட்டப்பட்டது. ஒருவேளை அபயா தற்கொலை வழக்கை சி.பி.ஐ விசாரிக்கக் கோரி இவர் அணுகாமல் இருந்திருந்தால், இது வெறும் தற்கொலை வழக்காகவே கடந்திருக்கும்.

இந்த வழக்கு விசாரணைகளுக்காகத் தனது சொத்துக்களை விற்கும் நிலைமைக்குத் தள்ளப்பட்டார் ஜோமன். ஆனால் அதைப் பற்றிக் கவலைப்படாது கடந்த 28 ஆண்டுகளாக இந்த வழக்கை நடத்தி அபயாவுக்கு நீதி பெற்றுக் கொடுத்திருக்கின்றார் ஜோமன். "அபயாவின் மரணத்துக்கு நீதி கிடைக்கும் என்று அவரது குடும்பத்தினரே நம்பவில்லை. எத்தனை தடைகள் வந்தாலும், எனது முயற்சியைக் கைவிடுவதில்லை என்று எண்ணினேன். எனது 28 ஆண்டுகால உழைப்பு பலனளித்தது," என்று இப்போது நெகிழ்கிறார். ■





அபயா

○ மின்னல்

திரடி அரங்கு

## தெறித்தோடும் அலுவலர்கள்

முந்தின காலத்தில யாழ்ப்பாணத்தில் பணியாற்ற அடிபட்டு அலுவலர்கள் வருவார்கள். ஆனா இப்போ தெறித்தோடுகின்றார்கள். அவ்வளவு திறமான நிர்வாகம் கச்சேரியில் நடக்கிறதாம்.

வருடாந்த இடமாற்றத்துக்கு யாழ்ப்பாணத்தில் உள்ள இலங்கை நிர்வாக சேவை, கணக்காளர் சேவை மற்றும் திட்டமிடல் சேவையில் உள்ளவர்களில் குறிப்பிட்ட சிலர் கட்டாயப்படுத்தி விண்ணப்பிக்க வைக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு செய்வதற்கு யாழ்ப்பாணத்தின் இப்போதைய ஒரு அரசியல்வாதி குடும்பமே பின்னணியாம்.


சரி, அப்படி விண்ணப்பித்தாலும் யாழ்ப்பாணத்துக்கு யாரும் வராமையால் இங்கிருந்து விண்ணப்பித்தவர்களின் இடமாற்றம் கைவிடப்பட்டுள்ளது.

எப்படியிருந்த யாழ்ப்பாணம் இப்படியாகிவிட்டது?

## இதுவல்லவோ நட்பு

எப்போதும் சீரியஸான விடயங்கள் பேசி அலுத்துப் போச்சு. இந்தமுறை ஒரு சுவாரசியமான தகவல். மருதானர்மடம் கொத்தணியோடு தொடர்புடைய ஒருவர் தனிமைப்படுத்தலிவ் இருந்தார். பி.சி.ஆர் சோதனை எடுக்கப்பட்டது. என்ன மாதிரி ரிசல்ட் வரப்போகின்றதோ? என்ற பயத்தில் இருந்தவருக்கு விழுந்தது பேரிடி. பி.சி.ஆர் முடிவுகள் அவருக்கு கொரோனா தொற்றிவிட்டதை உறுதி செய்தன. அவ்வளவுதான். அவர் நண்பர்களுக்கெல்லாம் போன் பண்ணி , அழாக்குறையாக தனக்கு கொரோனா தொற்றிய விடயத்தைச் சொல்லிவிட்டார். அவரின் நண்பர்களில் ஒருவருக்கு இந்தச் செய்தியைக் கேட்டதும் கையும் ஓடவில்லை, காலும் ஓடவில்லை.

உயிர் நண்பனுக்கு இப்படி ஒரு நோய் வந்ததைக் கேட்டுவிட்டு வாளாவிருக்க முடியுமா? அந்த நண்பர் சில நொடிகளிலேயே ஹோர்லிக்ஸ் போத்தலோடு கொரோனா வந்தவரின் வீட்டுக்கு ஆஜராகிவிட்டார். பிறகென்ன? சுகம் விசாரிக்கப் போனவர் இப்போது தனிமைப்படுத்தலிலாம்.



## யார் கட்டளை?

கண்ணிருந்தும் குருடனாக
காதிருந்தும் செவிடனாக
வாயிருந்தும் யான் மௌனித்தேன்!
கொரோனா எனும் கொடியவனால்
குற்றுயிராகி கதறுகிறேன்!
தேடிய சொத்திருந்தும்
தேவையான உணவிருந்தும்
நாடியே விருந்துண்ணாமல்
நலமிழந்து தவிக்கின்றேன்
பாரிய கொடுமையப்பா
பாரெல்லாம் பரவுது
கண்ணுக்கு தெரியாமல்
கழுத்தறுக்கும் செயலப்பா


இது ஆண்டவன் கட்டளையா? இல்லை
ஆள்பவன் கட்டளையா?

**சிவரூபன் சர்வேஸ்வரி**
**குரும்பசிட்டி**

## மட்பாண்டக் கூசா

ஓ! மொழி பேசாக் கூசாவே!
பாதாதிகேசம் வரை பழுத்த
செம்மேனியனே!
வியனுலகுக்கு இவ்வுருப்பெற்று வருவதன் முன்னே
குயவனார் சில்லில் சிக்கிய நீ என்னதான் உணர்ந்தாய் ?

களிமண் நிலையிலே குயவனார் கொதி கையிலே
வெளியெகிறி வரத் துடித்திருந்தேன்
இந்த உருவம் எனக்கொரு திணிப்பு !
அந்தமிலா துயர்தரு அனுபவக் கசப்பு!



அந்த வனைஞன் சில்லில் அந்தோ கைதியாகி
செந்தழல் நிறத்து கூசாவாகி விட முன்னர்
எந்தன் மார்பினில் ஆழப்புதைந்து வேர்விட்டிருந்த
பந்தப் பூங்கன்றின் பரிமளமலர் நட்பை நினைத்தேன்

குயவனார் என் உயிர் மூச்சை கொறித்து விட்டார்

நிஜமற்ற வடிவம் பெற்று பிணமாகிப் போனேன் நான்!
பணிந்த என் மார்பினில் ஒரு மலராயினும் பூத்தெழுமாயின்
இனிதே எனக்கு அந்த நிஜ வாழ்வு! எதற்கு இந்த உருவப் பகட்டு ?

**சி. கனகசிங்கம்**
**சட்டத்தரணி**
**தொல்புரம்**

*(ஹரீந்திரநாத் சட்டோபாத்தியாயவின் THE EARTHERN GOBLET என்ற தலைப்பிலான கவிதையின் மொழிபெயர்ப்பு அல்லது தழுவல் )*

## காலம்

தூங்கப் போகிறோம்
நீண்ட காலம்!

எழுந்து வா
தூக்கம் துற
துக்கம் மற

பரிகாசம் போதும்
அவகாசம் அதிகம்
இல்லை
இதிகாசம் இயற்று!

காலமாவதற்கு முன்பு
காலம் போவதை
கவனி!

ஆத்ம சாந்திக்கு
விதை போடு
பாதச் சுவடுகளை
சிற்பங்கள் ஆக்கு!

வெறும் மூச்சு விட்ட
குற்றம் செய்யாமல்
வாழ்ந்து விட்டு போ!

மறுமை உன்னை
பெருமைப் படுத்த
விட்டுக் கொடு!

பிரதிபலன் எதிர்பாரா
பிரதி எடு
மறதி பழகு!

குறையோடு பேசியது
போதும்
இறையோடு பேசு!

தூங்கப் போகிறோம்
நீண்ட காலம்!
எழுந்து வா இப்போது!

**மு. அ. காதர்**
**சிங்கப்பூர்**



## தனிமை....

**தனிமை**
**அழகான**
**அர்த்தமுள்ள ஓவியம்**
**வரைவதற்கு கலைஞன்**
**தேவையில்லை.**

**வாழ்க்கைப் புத்தகத்தில்**
**அர்த்தமுள்ள அத்தியாயம்.**
**தேற்றம் போல்**
**இதை புரிந்தவனும் உண்டு**
**புரியாதவனும் உண்டே!**

**வாழ்க்கைப் பாடத்தை கற்றுத்தரும்**
**அருமையான வகுப்பறை**

**நம் நினைவுகள்......**
**நம் கனவுகள்.....**
**கடந்துவந்த உணர்வுகள்.......**
**எல்லாமே நிரம்பும் தனிமையில்!**

**இங்கே காவலுக்கும்**
**காயம் தரவும்**
**யாருமிருப்பதில்லை.**
**தனிமை**
**கசப்பும், இனிப்பும்**
**கலந்தே தரும்**
**காலம் முழுதும்!**

ஆர்.திவாகரன்
மூளாய்

## மழை

தணல் வீசும் சூரியன் நடுநடுங்கி
மேகப் போர்வைக்குள் ஒளிந்து விட
இடியும் மின்னலும்
விண்ணை அலங்கரிக்க
நீள் கதிர் விரைந்தோடி
மண்ணை முத்தமிடும்.

கருவான விதைகளெல்லாம்
கடகடவென வளர்ந்து நிற்க
மகிழ்வுற்று கதிரெல்லாம்
நெல்மணியாகி சிரிக்கிறதே
மெய் சிலிர்த்து பறவையெல்லாம்
தாவி ஆட்டம் போடுதே.

போதுமென்ற பின்னே
வாய்க்கால் மதகு
வழிகாட்டிடவே
ஏரிகள், குளங்கள், நதியினை அடையும்
செழிப்புற்ற ஊர்களெல்லாம்
நாகரிகப் பெயரில்
நகரமாகிட வெள்ளக் காடாகித்
தவிக்குது இப்போ....

தரம் கெட்ட மானிடம்
தழைத்திடும் உலகில்
நீரற்ற காலம் நிதர்சனமாக
புன்னகை உதிர்ந்து
சுற்றிய தடம் தெரியாமல்
அணுவாக உடைந்து
அழியும் பூமி.

**டயானிகா சிறீராமராவ்**
மட்டக்களப்பு தேசிய கல்விக் கல்லூரி.



## தொலைநுட்பத்தின் தொல்லைகள்

வானளாவிய தொலைநுட்பம் வாழ்வின்
வளர்ச்சிக்கு உதவுமென்று இருக்க
வந்ததென்னவோ தொல்லைகளே
தந்ததென்னவோ துயரங்களையே

கணினி என்றொரு கருவி வந்தது
கணக்காளர்கள் வாழ்விழந்து போயினர்
கணித மரபு கைநழுவிப் போயிற்று
காகிதமும் கடிதமும் இல்லாமல் ஆனது

காலச்சக்கர சுழற்சி இருந்தும்
கடிகாரங்கள் காணாமல் போயின
நாள்காட்டிகள் மறைந்து போவதற்கு
நாள்களை எண்ணிக் கொண்டிருக்கின்றன

கைப்பேசி பின்னர் வந்தது - மனிதரை
கையாலாகாதவராக மாற்றி விட்டது
கலாசார சீர்கேட்டின் காட்சிப்பொருளாகி
கால்போன போக்கில் மனிதர் இப்போ!

உறவுகள் வீடுதேடி வந்த போதும்
உரையாடல்கள் இல்லாமல் போனது
உலகமே எம்கைக்குள் என்றனர்
உணர்வுகள் அற்று வாழ்கின்றனர்

மனதார பேசி மகிழ்ந்த நிலைமை மாறி
மௌனமாய் குறும் செய்திகள் வந்தன
மூளை முற்றிலுமாய் மழுங்கிப் போனது
முழுவேக உழைப்பும் சுணங்கிப் போனது

**கவின்முகில் மு .முகமது யூசுப்**





# அறிந்தும் அறியாமலும்

○ சுழியன்

## விடைபெறும் 'குள்ளநரி'



இலங்கை அரசியல் வரலாற்றில் தொடர்ச்சியாக 42 ஆண்டுகள் நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவி வகித்து சாதனை படைத்த ரணில் விக்கிரமசிங்க, கொழும்பு மாவட்டத்தில் 5 பொதுத்தேர்தல்களில் அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்றும் சாதனை புரிந்துள்ளார். அரசியலில் தந்திரம், மந்திரம், நெளிவு, சுழிவு, சூழ்ச்சி, சதி என அத்தனை அம்சங்களையும் கரைத்து குடித்துள்ள அவர், கால்நூற்றாண்டுக்கு மேலாக ஐக்கிய தேசியக்கட்சியின் தலைமைப்பதவியையும் தக்கவைத்துக்கொண்டவர். இதுவும்கூட ஒருவகையான சாதனையாகவே பார்க்கப்படுகின்றது. ஏனெனில் இதற்கு முன்னர் ஐ.தே.கவுக்கு தலைமை தாங்கியவர்கள் எவரும் இத்தனை ஆண்டுகள் பதவியில் நீடிக்கவில்லை.

1947 முதல் 2015 வரை நடைபெற்றுள்ள 15 பொதுத்தேர்தல்களிலும் ஐக்கிய தேசியக்கட்சி யானைச் சின்னத்திலேயே போட்டியிட்டது. இதில் 5 தேர்தல்களுக்கு ரணில் விக்கிரமசிங்க தலைமை வழங்கியுள்ளார். இரண்டு தேர்தல்களில் மட்டுமே ஐ.தே.கவால் வெற்றிநடைபோடமுடிந்தது. (2001,2015). இதற்கு முன்னரும் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் பிளவுகள் ஏற்பட்டிருந்தன. முக்கிய உறுப்பினர்கள் வெளியேறியிருந்தனர். ஆனால், சஜித் தலைமையிலான அணியின் வெளியேற்றமே பெரும் தாக்கமாக அமைந்தது. குறிப்பாக ஐக்கிய தேசியக்கட்சியால் பிரதான எதிர்க்கட்சி என்ற பதவியைக்கூட தக்கவைத்துக்கொள்ளமுடியாத நிலை ஏற்பட்டது. அதுமட்டுமல்ல மக்கள் வாக்குகள்மூலம் ஒரு நாடாளுமன்ற உறுப்பினரையாவது வென்றெடுக்கமுடியாத நிலை ஏற்பட்டது. அரசியலில் குள்ளநரி என விளிக்கப்படுகின்ற ரணிலுக்கு இது பெரும் அவமானத்தை ஏற்படுத்தியது. துல்லியமாக முடிவுகளை எடுத்து அரசியலில் காய்நகர்த்தக்கூடிய அவர், பொதுத்தேர்தலின்போது ஏன் இறுக்கமான நடைமுறைகளைப்பின்பற்றி, சஜித் அணியை வெளியேற்றும் விதத்தில் செயற்பட்டார் என்ற வினாவுக்கு, விமர்சனத்துக்கு இன்னும் உரிய பதில் இல்லை.

பொதுத்தேர்தலின் பின்னரும் கட்சி மறுசீரமைப்பு என்ற போர்வையில் தலைமைப்பதவியை தக்கவைத்துக்கொண்டுள்ள ரணில் விக்கிரமசிங்க, 2021 ஆம் ஆண்டில் தலைமைப்பதவியை தனது உறவினரான ருவான் விஜேவர்தனவுக்கு விட்டுக்கொடுப்பார் என நம்பப்படுகின்றது. இதற்காகவே ருவானை அவர் பிரதித் தலைவராக்கினார். ஆக 2021 இல் ஐக்கிய தேசியக் கட்சி தலைமைப்பதவியில் இருந்து ரணில் விக்கிரமசிங்க விடைபெறுவது உறுதியாகியுள்ளது.

## சூழ்ச்சிக்கு துணை கொரோனா!

நுவரெலியா மாவட்டத்திலுள்ள அக்கரபத்தனை பிரதேச சபையின் தவிசாளர் கதிர் செல்வனிடமிருந்து அப்பதவியை பறிக்கவேண்டும் என்பதே இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உயர்மட்ட உறுப்பினர்கள் சிலரின் ஏகோபித்த எதிர்பார்ப்பாக இருந்தது.

ஆறுமுகன் தொண்டமான் உயிருடன் இருக்கும் காலப்பகுதியில்கூட இதற்கான திட்டம் முன்னெடுக்கப்பட்டது. எனினும், அந்தத்திட்டம் நிறைவேறுவதற்கு ஆறுமுகன் இடமளிக்கவில்லை.பதவி பறிபோகின்றது என்ற செய்தி ஊடகங்களில் வெளியானது, "தலைவரையும், கட்சியையும்விட்டு நான் எங்கும் செல்லமாட்டேன்" என அக்கரபத்தனை பிரதேச சபையின் தவிசாளர் சத்தியம் செய்தார்.

ஆறுமுகன் தொண்டமானின் மறைவால் கதிர்ச்செல்வன் விவகாரமும் அப்படியே மறைந்தது. இதனால் நிம்மதியாக பெருமூச்சு விட்ட அவர், தவிசாளர் பதவியையும் தக்கவைத்துக்கொண்டார்.

இவ்வாறானதொரு பின்புலத்தில் தனிமைப்படுத்தல் சட்டத்தைமீறி அரசியல் கூட்டங்களில் பங்கேற்றுள்ள்தால் அவரின் பதவி பறிபோகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்த நிலையில் தன்னை தனிமைப்படுத்திக் கொள்ளாமல் அரசியல் நிகழ்வுகளில் அவர் பங்கேற்றுள்ளார். எனினும் அவருக்கு வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் முக்கிய அரசியல் பிரமுகர்களும் தற்போது தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

தவறான முன்னுதாரணத்தை வழங்கும் வகையிலும், தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறினார் என்பதற்காகவும் கதிர்ச்செல்வனை கட்சியிலிருந்து காங்கிரஸ் இடைநிறுத்தியுள்ளது. அவர் குணமடைந்து வந்த பின்னர், விளக்கம் கோரப்படும். அதன்பின்னர் ஒழுக்காற்று நடவடிக்கை என்ற போர்வையில் தவிசாளர் பதவி அவரிடமிருந்து பறிக்கப்படக்கூடிய சாத்தியக்கூறுகள் பிரகாசமாகவே தென்படுகின்றன. இதனால் நெடுநாள் அரசியல் சூழ்ச்சித் திட்டமும் நிறைவேறவுள்ளது.




## மாத்திப்போட்ட '2020'

கொரோனா பாதிப்புக்கு மத்தியிலும் இலங்கையில் இவ்வாண்டு பரபரப்புக்கும், விறுவிறுப்புக்கும் பஞ்சமில்லாத வகையில் அரசியல் சம்பவங்களும் அரங்கேறின. அதேபோல் 2020 ஆண்டில் இலங்கை அரசியல் வரலாற்றில் பல மாற்றங்களும் ஏற்பட்டன.

குறிப்பாக 1951 ஆம் ஆண்டு உதயமான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, அதன்பின்னர் நடைபெற்ற தேர்தல்களில் தனித்தும், கூட்டணியாகவும் போட்டியிட்டது. கூட்டணி அமையும் பட்சத்தில் அதற்கு சுதந்திரக்கட்சியே தலைமை வகித்தது. ஆனால் 6 தசாப்தங்களுக்கு பின்னர் மற்றுமொரு கட்சியுடன் இணைந்து போட்டியிடவேண்டிய நிலைமை அந்தக்கட்சிக்கு ஏற்பட்டது. கூட்டணி என்ற போர்வையில் சுதந்திரக்கட்சி இன்று சரணாகதி அரசியலை நடத்திவருகின்றது.

இலங்கையில் மற்றுமொரு பழமையான கட்சியான ஐக்கிய தேசியக்கட்சிக்கும் 2020 அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தது . 73 ஆண்டுகளுக்கு பிறகு ஐக்கிய தேசியக் கட்சி இல்லாமல் நாடாளுமன்றம் கூடிய சம்பவமும் பதிவானது. தேசியப்பட்டியல் ஊடாக கிடைக்கப்பெற்ற ஓர் ஆசனத்துக்குகூட உறுப்பினர் ஒருவரை இன்னமும் நியமித்துக்கொள்ள முடியாமல் அந்தக்கட்சி திண்டாடிக் கொண்டிருக்கின்றது.

புதிதாக உருவான இரு கட்சிகளில் ஒன்று ஆளுங்கட்சியாகவும், மற்றுமொரு கட்சி பிரதான எதிர்க்கட்சியாகவும் வளர்ச்சி பெற்றுள்ளன.

இலங்கையில் பொதுத்தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர், கொரானா வைரஸ் தாக்கத்தால் தேர்தல் மூன்று தடவைகள் ஒத்திவைக்கப்பட்ட சம்பவமும் இவ்வாண்டு பதிவானது. வாக்களிப்பு நேரமும் அதிகரிக்கப்பட்டிருந்தது. வழமையாக தேர்தல் தினத்தன்று நள்ளிரவில் வாக்கெண்ணும் பணி ஆரம்பமாகும். ஆனால் இம்முறை வாக்களிப்பு தினத்துக்கு அடுத்த நாள் காலையில் இருந்துதான், வாக்கெண்ணும் பணியும் ஆரம்பமானது.

வழமையாக மே தினம் மற்றும் கட்சி மாநாடுகளின்போது ஆளணி பலத்தை காட்டுவதற்காக அரசியல் கட்சிகள் பெருமளவில் ஆதரவாளர்களை திரட்டிவந்து கூட்டங்களையும், பேரணிகளையும் நடத்துவது அரசியல் கலாசாரமாக பின்பற்றப்பட்டுவந்த நிலையில், இம்முறை மே தினக் கூட்டங்கள், பேரணிகளுக்கு தடைவிதிக்கப்பட்டிருந்தன.கட்சி மாநாடுகள்கூட கடும் கட்டுப்பாடுகளுக்கு மத்தியிலேயே நடத்தப்பட்டன. இப்படி பல மாற்றங்களை இலங்கை அரசியலில் 2020 ஏற்படுத்தியுள்ளது.

## தனிவழி?


ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் செயற்பாடுகளால் கடும் அதிருப்தியில் இருக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, மொட்டு அணியினரின் செயற்பாடுகளை வெளிப்படையாகவே விமர்சித்து வருகின்றது.

தமது கட்சி உறுப்பினர்களுக்கு உரிய கவனிப்பு இல்லை எனவும், தேர்தலுக்காக மட்டுமே தமது கட்சி பயன்படுத்தப்படுகின்றது எனவும் சுதந்திரக்கட்சிக்காரர்கள் ஊடகங்களிடம் தமது உள்ளக்குமுறல்களை வெளிப்படுத்தி வருகின்றனர்.

இந்நிலையில் மாகாணசபைத் தேர்தலின் போது சுதந்திரக் கட்சி சஜித் அணியுடன் இணைந்து போட்டியிடவேண்டும், தற்போது ரணில் தரப்பு அவர்களுடன் இல்லை என்பதால் கூட்டணி சாத்தியமாகும் என கட்சி உறுப்பினர்கள் சிலர், சு.கவின் மத்திய குழுவிடம் யோசனை முன்வைத்துள்ளனர்.

மொட்டுக் கட்சியுடன் பேச்சு நடத்தி பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளவேண்டும் எனமேலும்சிலர்கோரிக்கைவிடுத்துள்ளனர். இதனால் சு.கவுக்குள்ளும் கருத்து மோதல் வலுத்துள்ளது.

இவ்விவகாரம் தொடர்பில் புதுவருட ஆரம்பத்தில் நடைபெறும் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டு முடிவொன்று எடுக்கப்படுமென உள்வீட்டுத் தகவல்கள் சொல்கின்றன.



# எரியம்...

(தொடர்ச்சி)

னையை தொடக்கி விட்டால், மீதி தானாகவே நடந்து எங்களுக்கு முடிவு தெரியும். அதைப்பொறுத்து நமது உலகத்தில் ஒன்றை தொடங்குவோம், அல்லது நிறுத்துவோம். டிரம்ப்பா ஹிலாரியா என்று குழப்பம்.. உங்களுக்கு ஒரு ட்ரம்பை சோதித்துப் பார்த்தோம். உங்கள் முடிவு சொதப்பியதால் எங்கள் உலகத்தில் ஹிலாரியைத் தெரிவு செய்தோம்.. அது மாதிரி."

"அப்போ நாங்க கண்ட கேட்ட தொட்ட எல்லாமே உண்மை இல்லையா? எல்லாமே பொய்யா? அட சவத்த...!" தேனீ. "நம் பிரச்சினைக்கு வருவோம்...எங்களுக்கு என்ன முடிவு?" எனக்கு எந்த உலகம் என்றாலும் இந்தப்பயணத்துக்கு முடிவு கிடைத்தால் சரி. கேட்டேன் "ஏன் நாங்கள் இப்படி மாட்டுப்பட்டிருக்கிறோம்?"

"லூப் தெரியுமா?

"தேனீ ஐந்தாம் வகுப்பு பாஸ்... நான் ஏழாம் வகுப்பு பெயில்.."

"ஒரு புரோக்கிராம் தயாரிக்கும் போது, சில விஷயங்களை லூப்பில் எழுதுவோம். மறுபடி மறுபடி தொடர்ச்சியாக நடக்கும் விஷயங்களை. குறித்த அந்த விஷயம் நிறுத்தப் பட வேண்டும் என்ற நிலை வரும்போது தானாகவே லூப் நின்றுவிடும்."

"தேனீ ஐந்து, நான் ஏழு.."

"சங்கக்கடையில் ஒரு கிலோ சீனி கேட்டால் கடைக்காரன் கைக் கணக்குக்கு அள்ளி பையில் போட்டுத் தராசில் வைப்பான். பிறகு கொஞ்சம் கொஞ்சமாக கையால் அள்ளி அள்ளிப் போடுவான் இல்லையா... அதுதான் லூப். திருப்பி திருப்பி செய்யும் வேலை. சரியாக ஒரு கிலோ தராசில் காட்டும் போது கையால் அள்ளிப் போடுவதை நிறுத்துவான். அதுதான் லூப் நிறுத்தும் இடம்."

"விளங்குது. வழி கேட்டா வகுப்பு எடுத்துட்டு இருக்கிறீங்கள்..."

"இப்போ, அந்த தராசில் ஒரு கிலோ என்றதை எப்போதுமே காட்டாமல் விட்டால் என்ன ஆகும்? அவர் தொடர்ந்து சீனியை அள்ளி அள்ளிப் போட்டுக் கொண்டிருக்க வேண்டும் அல்லவா?

அதுதான் இங்கேயும் நடந்தது. ஏதோ பிரச்சினையால் நீங்கள் பயணிக்கிற புரோகிராம் கோடிங்கின் லூப் மூடப்படாமல் தொடர்ந்து நீங்கள் பயணித்துக்கொண்டே இருக்கிறீர்கள்.

நீங்கள் கண்டியில் போய் இறங்கினால் என்ன நடக்கும் என்பதை எங்கள் புரோகிராம் சிமுலேட் பண்ணாமல் இந்த இடத்திலேயே இறுகி விட்டது. இது கொஞ்சம் சிக்கலானது. வழக்கமாக வராத பிரச்சனை. எப்படித் தீர்ப்பது என்று தெரியவில்லை. முயற்சி நடந்து கொண்டிருக்கிறது."

"சரி.. இப்ப எங்களை என்ன செய்வதாகத் திட்டம்?"

"உங்களை அழிப்பதுதான் திட்டமாக இருந்தது. ஆனால் ஓடிக் கொண்டிருக்கும் லூப்பை அழிப்பது கடினம். அப்படியே அழிக்கிற வேளையில் லூப் சடுதியாக நிறுத்தப்பட்டு மறுபடி

நீங்கள் உலகத்துக்குள் பிரவேசித்துவிட்டால் கஷ்டம். பாதி ஆளாக, வெறும் தலை மட்டும் போய்விடக் கூடும். அதுதான் புதிய முயற்சியாக நாங்களே நேரடியாக புரோக்கிராமுக்குள் இறங்கி சொல்லி விளங்கப்படுத்தலாம் என்று புகுந்து வந்துவிட்டேன். நீங்கள் எந்த நேரமும் பிழையிலிருந்து விடுபட்டு உலகத்தில் நுழையலாம். அதுவரை பதற்றம் இல்லாமல் காத்திருங்கள்"

"அதுதான் எப்ப?" "யாருக்குத் தெரியும்? உடனே சரியாகலாம், சில மணித்தியாலங்கள் ஆகலாம்... எப்படியும் உத்தரவாதமாக சில நாள்களுக்குள் சரிபண்ணி விடலாம். அதிக பட்சம் ஒரு வாரம். சரியானதும் உங்கள் பயணம் விட்ட இடத்திலிருந்து, விட்ட நேரத்திலிருந்து தொடரும். லூப்பில் சிக்குப்பட்ட நேரம் உங்களுக்கு மட்டும்தான் தெரியும். வெளியேறியதும் வழக்கமான உங்கள் உலகத்தின் நேரக் கணக்கில் நீங்களும் சேர்ந்துவிடுவீர்கள். ஆனால் இங்கே நடந்தது எதையுமே நீங்கள் உலகத்துக்குச் சொல்லக்கூடாது. சொன்னாலும் யாரும் நம்ப மாட்டார்கள்.

"அம்மாடி.. உண்மையோ பொய்யோ, என் உலகத்துக்கு போனாப் போதும். " தேனீயின் ஆறுதல்.

"சரி, அது வரைக்கும் நாங்கள் ஓடிக்கொண்டே இருக்க வேண்டியதுதானா? வேறு வழியே இல்லையா?"

"இல்லை.நான் கூட இங்கே சிமுலேஷனாகத் தான் வந்திருக்கிறேன். நீண்ட நேரம் நான் இங்கே இருக்கமுடியாது.லூப் நின்றுவிட்டால் நானும் உங்கள் உலகத்தில் சிக்கிவிடுவேன். நான் புறப்படுகிறேன். சீக்கிரம் வீடு போக வாழ்த்துக்கள். ஆனால் கவலைப் படாதீர்கள். பசி, வியாதி, எதுவுமே வராது இந்த இடைக்காலத்தில்.. உங்களுக்கும் சரி, வாகனத்துக்கும் சரி. சாவுகூட. அட இவ்வளவு ஏன், நீங்கள் தற்கொலை செய்ய நினைத்தால் கூட செய்ய முடியாது." திரும்பிப் புறப்பட்டார்.

"சும்மா இரடா, சில நாள்கள் இப்பிடியே இருக்க வேணுமாம்.. அதுவும் உன்னோட" அலுத்துக்கொண்டேன்.

"பார்த்தாயா? கடவுள் இல்லை என்றாயே.. உந்தாள்தான் கடவுள்.. அவங்கட உலகம்தான் தேவலோகம். அவங்களால தான் இந்த அண்ட சராசரங்களும் இயக்கப் படுகுது, கொஞ்சம் எங்களுக்கு விளங்குற துக்காக சிம்பிளா சொல்லி இருக்கிறார்."

தலையிலடித்துக்கொண்டு உட்கார்ந்தேன். "அடேய்,-அவங்கள் இந்தப் பிரச்சினைய திருத்தும்வரைக்கும் இப்பிடி லூசுகள் மாதிரி நாங்கள் இந்த ரோட்டுல ஓடிக்கொண்டிருக்க வேணுமடா.. எத்தினை மணித்தியாலம் ஆகுமோ தெரியாது...சில நாளும் ஆகலாம் எண்டு மனுஷன் சொல்லி இருக்கு, ஒரு வாரம் கூட..." என்று சொல்லிக்கொண்டிருக்கும்போதே ஒன்று உறைத்தது..

"ஐயா?" கத்தினேன்.

"சில நாள் என்றது, என்ன கணக்கு, உங்கள் உலகக் கணக்கா, எங்கள் உலகக் கணக்கா?"

நடந்து போய்க் கொண்டிருந்த கிழவர் அமைதியாகத் திரும்பினார்.

"ஆம் தம்பி.. சில நாள் என்பது எங்களது உலகக் கணக்கு"



# புதிர்மனை மர்மங்கள்

○ மாயன்

புதிர் 24

அதுவரை கீழே பாம்பு போன்று நீண்டு கொண்டிருந்த பெருங்கடல் காணாமல் போய், பெரு நெருப்பு பற்றியெரிந்துகொண்டிருந்தது. அதுவும் வானை நோக்கி சுவாலைகளுடன். ஒரு பொறிபட்டுவிட்டாலே போதும். அடுத்த நொடியே புஷ்பகவிமானம் தீயில் கருகிவிடும். ஆனால் அந்த வெம்மையையும் தாங்கிக் கொண்டு, நான்கு அன்னப்பட்சிகளும் பறந்து கொண்டிருப்பது தீபவர்மனுக்கு இன்னும் ஆச்சரியமாக இருந்தது.

"பவளராணி, அற்புதத்தீவுக்குச் செல்லும் பாதை சரிதானே? " என்று கொஞ்சம் சந்தேகமாகவே கேட்டான்.

" நாங்கள் தவறாகச் சென்றாலும் கூட இந்த அன்னப்பட்சிகள் ஒரு அட்சரம் கூடப் பிசகாமல் செல்லக்கூடியவை. எனவே சந்தேகம் வேண்டாம்"

அவள் குரலில் உறுதி தெரிந்தது.

" ஆனால் கீழே நெருப்பல்லவா இருக்கிறது. ஆனால் தீவு என்றால் அது கடல் நடுவே அல்லவா இருக்க வேண்டும்" என தன் சந்தேகத்துக்கான காரணத்தையும் அவன் வெளிப்படுத்தினான்.

அதைக் கேட்டதும் கலகலவெனச் சிரித்த பவளராணி, தீபவர்மனின் கண்களைக் கூர்ந்து பார்த்தபடி இப்படிக் கேட்டாள்,

"கடல் என்றால் அது நீர் நிறைந்ததாகத் தான் இருக்க வேண்டுமா தீபவர்மரே?"

தீபவர்மனுக்கு அவளின் கேள்வியின் அர்த்தம் புரியவில்லை.

" அப்படியானால்....?" என இழுத்தான்.

"அற்புதத்தீவு இருப்பது, நெருப்புக்கடலின் நடுவே. இந்தப் பெருந்தீக்கடலைத் தாண்டித்தான் அதனை அடையமுடியும். அதனால் தான் எம்மிடமுள்ள மாயக்கப்பலில் வராமல் புஷ்பக விமானத்தில் பயணிக்கிறோம்" என்று விபரித்தாள் பவளராணி.

" தீக்கடலா? அப்படியானால் அதைக் கடக்கும் போதோ, தீவில் தரையிறங்கும் போதோ எப்படியோ நெருப்பு நம்மைத் தீண்டத்தானே போகின்றது. அப்படி நடந்தால் அடுத்த கணமே பொசுங்கி விடுவோமே"

"ஆம். பொசுங்கித்தான் போவோம். ஆனால் அதற்கும் ஒரு திட்டம் இருக்கின்றது"

என்ற பவளராணி தன் திட்டத்தை விபரித்தாள்.

கேட்பதற்கு அந்தத் திட்டம் நன்றாக இருந்தாலும், கரணம் தப்பினால் மரணம் என்ற ஆபத்தும்,அந்தத் திட்டத்தில் இருப்பதை தீபவர்மன் உணரத் தவறவில்லை.

( புதிர்கள் தொடரும்)

# ரன் பேபி ரன்

அரசியலும் ஊடகமும் , ஊடகமும் ஊடகமும் மோதிக் கொள்வதொன்றும் புதிதல்ல. ஒன்று அதிகாரத்துக்கும் அதற்கு எதிரான வெளிப்பாட்டுக்குமான போராட்டம். மற்றது வெளிப்பாட்டு முதன்மைக்கான போட்டி. ஏறக்குறைய எட்டு ஆண்டுகளுக்கு முன்பு இவற்றை மையப்படுத்தி ஒரு படம் வந்திருந்தது பலருக்கும் நினைவிலிருக்கலாம். அதிலும் ஊடகத்துறை சார்ந்தோர் இந்தப் படத்தை மறந்திருக்கவே முடியாது. மோகன்லான், மதுபால், பிஜு மேனன் நடித்திருந்த ரன் பேபி ரன் ( Run Baby Run) தான் அது.

இரண்டு ஊடகங்களுக்கிடையிலான போட்டி. இந்தப் போட்டியில் எப்படி மிக நெருங்கிய சகாக்களான ஊடகவியலாளர்களே பிரித்தாளப்படுகிறார்கள். இப்படிப் பிரித்தாளப்படும்போது நடக்கின்ற மோதல்கள். ஆனாலும் ஆளை ஆள் விட்டுக் கொடுக்கவும், விட்டுக் கொள்ளவும் முடியாத நட்பும் காதலும் நிரம்பிய உறவு. இதற்குள் புகுந்து புயலாக அடிக்கும் அரசியல் அதிகாரம். அந்த அரசியல் அதிகாரத்தை தோற்கடிக்க முயற்சிக்கும் ஊடகவியலளார்கள். அவர்கள் பயன்படுத்தும் உத்திகள். இந்த உத்திகளுக்குத் துணை செய்யும் நவீன தொழில் நுட்பச் சாதனங்கள். குறிப்பாக புதிய வகை வீடியோக் கமெராக்கள். இப்படியே ஒரு புது மைப்பாட்டுடன் ரன் பேபி ரன் (Run Baby Run ) வந்திருந்தது. மோகன்லாலும் மதுபாலும் பிஜு மேனனும் மிகச் சிறப்பாக இந்தப்படத்தில் பங்களித்திருந்தனர். முக்கியமாக ஊடகத்துறையினர் எதிர்கொள்கின்ற நெருக்கடிகளை இந்தப்படத்தில் பார்க்கலாம். ஊடகத்துறையினருக்கு இருக்க வேண்டிய பொறுப்பு, உறுதிப்பாடு அல்லது தைரியம் அல்லது மனோவலிமை, சாதுரியம், துணிச்சல், எதற்கும் விலைபோகாத மக்கள் நேயம் என்பவற்றை இதில் காணமுடியும். சில படங்களுக்கு காலமே இல்லை. அவை எப்பொழுதும் பார்க்கக் கூடியதாகவும் இருக்கும். அவற்றைப் பற்றிப் பேசக் கூடியதாகவும் இருக்கும். நல்ல பொருள்களின் விலை மதிப்பு ஒரு போதுமே குறைவதில்லை. தங்கமும் வைரமும் அப்படித்தான். அப்படியானவையே அமர காவியங்கள்.



(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போய் விடயத்தைச் சொன்னார்கள். அங்கிருந்த நீச்சல் தெரிந்த இளைஞர்கள் ஓடி வந்து, குளத்துக்குள் பாய்ந்து தேடத் தொடங்கினார்கள். எவ்வளவு தேடிய போதும், எவரும் அகப்படவில்லை. நீரோட்டம் வேறு அதிவேகமாக இருந்தது. இருட்டவும் தொடங்கிவிட்டது. செய்தியறிந்து குளக்கட்டில் சனங்கள் கூடி விட்டார்கள். மல்லாவிப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டு, அவர்களும் இராணுவத்தினரை உதவிக்கு அழைத்துக் கொண்டு வந்தார்கள். குளத்துக்குள் நீந்தித் தேடிக் கொண்டிருந்த இளைஞர்கள் சிறிது நேரத்தின் பின்னர் நீருக்குள் மூழ்கியிருந்த வாகனத்தைக் கண்டுபிடித்தனர். அதனை மீட்பதற்கான முயற்சிகள் தொடங்கின.

குளத்தின் அருகே ஒரு சிவன் கோயிலுண்டு. அங்குள்ள தேர் வடத்தைக் கொண்டுவந்து, வாகனத்தில் கட்டி, இழுக்கத் தொடங்கினர். சில நிமிடப் போராட்டத்தின் பின்னர் வாகனம் நீருக்கு மேல் வந்தது.அப்படியே கரைக்கு கொண்டு வரப்பட்ட அந்த வாகனத்தினுள் எவரும் இருக்கவில்லை. முன் பக்கக் கண்ணாடி உடைந்திருந்தது.

மீண்டும் நீருக்குள் இளைஞர்கள் தேடத் தொடங்கினர். அப்போது சஞ்சீவன் அவர்கள் கைகளில் கிடைத்தான். பேச்சு மூச்சில்லை. அவன் மீட்கப்பட்டதுமே , தயாராக நின்ற அம்புலன்ஸில் ஏற்றப்பட்டு, மாங்குளம் மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டான். ஆனால் நீருக்குள் மூழ்கிய சஞ்சீவன் உயிரிழந்து சில மணித்தியாலங்கள் ஆகிவிட்டன என்பதை மருத்துவர்கள் உறுதி செய்தார்கள்.

மறுபுறம், குளத்தில் மாலை 4.45 மணியளவில் தொடங்கிய தேடல், இரவு 10 மணியாகியும் இன்னும் முற்றுப்பெறவில்லை. எஞ்சிய இருவரின் கதியும் தெரியவில்லை. இதனால் கடற்படையின் விசேட சுழியோடும் அணியினர் அங்கு வந்திறங்கினர். குளத்தில் இறங்கிய கடற்படைச் சுழியோடிகள், அதிகாலை 1 மணியளவில் முதலில் சானுஜாவின் உடலையும், பின்னர் ரசீந்தீரனின் உடலையும் மீட்டனர். சடலங்கள் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்கு கொண்டுசெல்லப்பட்டு உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.







**எல்லாளன் கட்டிய குளம்**

முல்லைத்தீவு மாவட்டத்தின் மிகப்பெரிய குளங்களில் வவுனிக்குளமும் ஒன்று.அனுராதபுரத்தை இராசதானியாகக் கொண்டு ஆட்சி செய்த எல்லாள மன்னனால் இது கட்டமைக்கப்பட்டதாக வரலாற்று குறிப்புக்கள் உள்ளன.பிந்தியகாலப்பகுதியில் பல்வேறுதிட்டங்களின் மூலம் அது திருத்தியமைக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டு வந்தது. முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தைகிழக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வவுனிக்குளத்தின்தற்போதைய நீர்தேங்கும் உயரம் 26 அடி. இதன் கீழ் அமையப்பெற்ற 15 க்கும் மேற்பட்ட விவசாயக் கிராமங்க ளுக்கு நீர் ஆதாரமாக இருக்கின்றது . பலநூறு ஏக்கரில் பரந்து விரிந்திருக்கும் இந்தக்குளம் நூற்றுக்கணக்கான குடும்பங்களின் பசி போக்கும் அமுதசுரபி. அப்படி வாழ்வளிக்கும் இந்தக் குளம் தான் இப்போது ஒரேசமயத்தில் மூன்று உயிர்களைப் பலியெடுத்திருக்கிறது.

**விதியின் சதி**

“என்ர அவர் ( ரசீந்திரன்) நல்லா நீந்துவார். வாகனம் ஓடுறதிலும் நல்ல அனுபவம் இருக்கு. அதோட வவுனிக்குளக்கட்டில் போறது அவருக்கு இது புதிசில்லை. ஆனால் ஏன் இப்பிடி நடந்ததெண்டு எங்களுக்கு தெரியாமல் இருக்கு. பிரவீன் வாய்க்கால்ல நீந்திப் பழகினபடியால் பிள்ளை தப்பிட்டான்.

வாகனக் கண்ணாடி உடைஞ்சு கிடந்தது, இவருக்கும்( ரசீந்திரனுக்கும்) முகத்திலையும், காலிலையும் காயம். இவர் வாகனக் கண்ணாடியை உடைச்சுக் கொண்டு , பிள்ளையையும் தூக்கிக் கொண்டு வெளியில் வந்திருக்க வேணும். அதுக்கு பிறகு ஏன் அவர் கரைக்கு வர ஏலாமப் போச்செண்டு தெரியேலை. எல்லாம் எங்கட விதி”

என்று கணவரையும், மகளையும் பறிகொடுத்த பெருந்துயரை வார்த்தைகள் வழியே அழுகையோடு கொட்டித் தீர்க்கிறார் ரசீந்திரனின் மனைவி.

## அவன் போனது தெரியாது

“ எனக்கு 5 பிள்ளையள். என்ர அவர்( கணவர்)8 வருசத்துக்கு முந்தி பிரிஞ்சிச்சிட்டார். நான் தான் இவைக்கு எல்லாம். சஞ்சீவன் மூண்டாவது பிள்ளை. அவன் 13 வயசுப் பிள்ளை எண்டாலும் குடும்பக் கஷ்டம் அறிஞ்சவன். வளர்ந்து வந்து எங்கட குடும்பத்தை நல்ல நிலைக்கு கொண்டுவருவான் எண்டு நம்பியிருந்தன். அண்டைக்கு ‘மாமாவோட குளத்துக்கு போகட்டோ?’ எண்டு வந்து கேட்டான். நான் அப்பதான் மல்லாவிக்கு போக வெளிக்கிட்டுக் கொண்டிருந்தன். அதாலை ‘நான் மல்லாவிக்கு போகேக்க உன்னையும் கூட்டிக் கொண்டு போறன்’ எண்டன். அதோட அந்தக் கதையை விட்டிட்டன். அவன் நான் வெளிக்கிட்டுக் கொண்டிருக்க, அவையோட வாகனத்தில ஏறிப்போட்டான். எனக்கு அவன் போனது தெரியாது.

கொஞ்சத்தில ஒராள் வந்து, ‘குளத்தடியில ஏதோ வாகனம் பழுதாம் ‘எண்டு சொன்னார். ‘அதுக்கு நாங்கள் தள்ளி ஸ்ராட் பண்ணி விடவேணுமோ?’ எண்டு நக்கலாக் கேட்டுக்கொண்டு, வாகனத்தைப் பாக்க மற்றவையோட சேர்ந்து நானும் போனன். அங்க போன பிறகுதான் என்ர பிள்ளை போன வாகனம் தான் குளத்துக்க தாண்டிட்டுது எண்டு தெரிஞ்சுது. என்ர பிள்ளையைக் கண்டுபிடிச்சவுடன் அவன்ர உடம்பில அசைவு இருக்கெண்டு ஆக்கள் சொல்லிச்சினம். உடனே மாங்குளம் கொஸ்பிட்டலுக்கு ஓடினன். அங்க...என்ர பிள்ளை செத்திட்டான் எண்டு சொல்லி, உடம்பை மூடி வைச்சிருந்தினம்.எனக்கு உலகமே இடிஞ்ச மாதிரி போட்டுது”

இது சஞ்சீவினின் தாயின் குமுறல்.

## எப்படி நிகழ்ந்தது ?

வீதியில் சிறிய குழி இருந்ததாகவும் அதற்குள் வாகனத்தை இறக்காமல் திரும்பமுற்பட்டபோதே விபத்து இடம்பெற்றதாகவும் கரைசேர்ந்த அவரது மகன் பிரவீன் சாட்சியமளித்திருந்தான். விபத்து இடம்பெற்ற பகுதியில் பெரிய அளவிலான குழிகளோ, பள்ளங்களோ இருக்கவில்லை.எனினும் அந்த நேரம் மழைபெய்துகொண்டிருந்தமையால் மழைநீர் அணைக்கட்டின் ஒருபகுதியில் தேங்கியிருந்திருக்கலாம் அதனை குழி என்று ரசீந்திரன் நினைத்து வாகனத்தை திருப்பமுற்பட்டபோது விபத்து இடம்பெற்றிருக்கலாம் என நம்பப்படுகின்றது.



இதேவேளை மூன்று வயதான மகள் சானுஜா மடியில் அமர்ந்திருந்தமையால் வாகனத்தைச் செலுத்தும் போது அவரால் அதனை கட்டுப்படுத்தமுடியாமல் போயிருக்கலாம்,அல்லது கிராமவாசிகள் தெரிவிப்பது போல வாகனத்தின் முன்பக்கச் சக்கரத்தின் காற்று குறைந்திருந்தமையால் கட்டுப்பாட்டை இழந்து நீருக்குள் மூழ்கியிருக்கலாம். இதேவேளை வாகனம் வேகமாக சென்றமையாலேயே குளத்தில் மூழ்கியதாக பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்திருந்தார்.

ஆனால் எதையும் உறுதி செய்ய முடியவில்லை. சிலவேளை இந்த நான்கு காரணிகளும் ஒன்று சேர்ந்தும் அந்த விபத்தை உண்டாக்கியிருக்கலாம்.

**வாடிக்கையான பலி எடுப்பு**

வவுனிக்குளத்தில் சிலவருடங்களுக்கொருமுறை இப்படியான பலியெடுப்புச் சம்பவங்கள் இடம்பெற்றிருப்பதாக கிராமமக்கள் தெரிவிக்கின்றனர். அநேகமாக குளம் தனது முழுகொள்ளளவை எட்டியிருக்கும்போது ஏதாவது ஒரு துர்ச்சம்பவம் தொடர்ந்து இடம்பெற்றுவந்துள்ளது. சில வருடங்களுக்கு முன்னரும் கூட ஆலயத்திருவிழாவுக்காக வருகை தந்த ஒரேகுடும்பத்தை சேர்ந்தஇருவர் உட்பட மூன்று பேர் கலிங்குப் பகுதியில் இழுத்துச்செல்லப்பட்டு சாவடைந்திருந்தனர். அந்தச் சம்பவம் இடம்பெற்று பல வருடங்களின் பின்னர் மீண்டும் மூன்று உயிர்களை வவுனிக்குளம் காவு வாங்கியிருக்கிறது.

**அலட்சியமும் அவசரமும்**

வவுனிக்குளம் நீர்ப் பாசனப்பொறியியலாளர் பிரிவினால் பராமரிக்கபட்டுவருகின்றது.பொதுவாக குளங்களின் அணைக்கட்டு வழியாக எந்தவிதமான வாகனங்களும் பயணிப்பதற்கு அனுமதி வழங்கப்படுவதில்லை. எனினும் வன்னிப் பகுதியைப் பொறுத்தவரை, அநேமான குளங்களின் அணைக்கட்டுவழியாகவே பொதுமக்கள் வாகனங்களில் பயணித்துவருகின்றனர்.

“கிராமங்களுக்கு செல்வதற்கான மாற்றுப்பாதைகள் முற்றாக இல்லாவிடில் அணைக்கட்டின் தன்மைக்கேற்ப வாகனப்போக்குவரத்துக்கு அனுமதி வழங்கப்பட்டுவருகின்றது” என வடக்கு மாகாண நீர்பாசனத் திணைக்களத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவிக்கின்றார். வவுனிக்குளத்தின் அணைக்கட்டுவழியாக கனரக வாகனங்களான டிப்பர், பேருந்துகள் கூட பயணம்செய்து வந்துள்ளன.அந்த குளத்தின் அணைக்கட்டு நில மட்டத்தில் இருந்து 36 அடி உயரத்தில் செங்குத்தாக இருக்கின்றது. குறித்த அணைக்கட்டு வழியாகவே செல்வபுரம், நட்டாங்கண்டல், பாண்டியன்குளம், கரும்புள்ளியான் உள்ளிட்ட பல்வேறு கிராமங்களை சேர்ந்த பொதுமக்கள் பயணித்து வருகின்றனர்.ஆனால் இந்தக் கிராமங்களுக்கு செல்வதற்கு வேறு மாற்றுபாதைகள் இருக்கின்றன. எனினும் அணைக்கட்டின் ஊடாகச் செல்வது அவர்களின் தூரத்தையும், நேரத்தையும் குறைப்ப தால்,இதனையே பிரதான பாதையாக மாற்றிவிட்டனர்.


இந்த விபத்துக்கு பின்னர் நீர்ப்பாசன திணைக்க ளத்தால் அணைக்கட்டுக்குள் பிரவேசிக்கும் அனைத்துப் பாதைகளுக்கும் தடை ஏற்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் அனுமதியின்றிச்செல்லவேண்டாம் என்று அறிவுறுத்தல் பதாகைகளும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இருசக்கரவாகனங்கள் மட்டுமே அனுமதிக்கப்படுகின்றன.இந்த முன் எச்சரிக்கை நடவடிக்கையை முன்னரே எடுத்திருக்க வேண்டும். அல்லது அணைக்கட்டில் உரியபாதுகாப்பு ஏற்பாடுகளை செய்துவிட்டு போக்குவரத்துக்கு அனுமதி வழங்கியிருக்கலாம்.

மூவரின் இறப்புக்குப் பின்னர்தான்அந்த வீதியை தடைசெய்யமுடியுமானால் அதனை முன்னரே செய்திருக்கலாமே. தற்போது கொண்டுவரப்பட்டுள்ள நடைமுறையும் எத்தனை நாளைக்கு கடைப்பிடிக்கப்படும் என்பதும் கேள்விக்குறியே.திணைக்க ளத்தின் அசண்டையீனமும் இந்த விபத்துக்கு ஒரு காரணமே.

மறுபுறம் பொதுமக்களும் சிலவிடயங்களில் கவனத்துடனும் எச்சரிக்கையுடனும் நடந்துகொள்ளவேண்டிய தேவை இருக்கின்றது. அதன்மூலமே இவ்வாறான அவலங்களைத் தவிர்க்கமுடியும்.

## விளையாட்டு

ஆர்.லயனல்



# விதிகளில் விதிமுரண் எதற்காக?

ஆஸ்திரேலியாவில் முகாமிட்டுள்ள இந்திய அணியில் இருந்து கோலி விலகி நாடு திரும்பியுள்ளார். இது இந்தியக் கிரிக்கெட்டில் பெரும் பூதாகார நிலையைத் தோற்றுவித்துள்ளது. ஆரம்பத்தில் இருந்தே சிறு அளவில் காட்டப்பட்ட இந்த எதிர்ப்புக் குரல்கள் தற்போது மேலும் வலுப்பெற்றுள்ளன.

கடந்த சில வருடங்களுக்கு முன்னர் ஆஸ்திரேலியாவில் இந்தியா சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்தபோதுதான் இந்திய அணியின் அப்போதைய தலைவரான டோனிக்கு குழந்தை பிறந்தது. ஆனால் அவர் இந்தியா திரும்பவில்லை. அணியுடன்தான் தொடர்ந்தும் இருந்தார். சுற்றுப் பயணம் முடிந்த பின்னர்தான் தன் குழந்தையைப் பார்க்கச் சென்றார். அதற்கு முன்னர் கபில்தேவும் இவ்வாறே நடந்துகொண்டார்.

இவ்வளவு ஏன், தற்போது மிகச் சிறப்பாக விளையாடிவரும் தமிழக வீரர் நடராஜன் ஐ.பி.எல் தொடரில் பங்கெடுத்த காலப்பகுதியில்தான் அவரது மனைவிக்குக் குழந்தை பிறந்தது. தொடர் ஐக்கிய அமீரகத்தில் நடைபெற்றது. எனினும் நடராஜன் இந்தியா திரும்பவில்லை. ஹைதராபாத் அணிக்காக சிறப்பாக விளையாடினார்.

அதன் பின்னர் அங்கிருந்து இந்திய அணியுடன் ஆஸ்திரேலியா சென்றார். வலைப்பயிற்சிப் பந்துவீச்சாளராகச் சென்ற அவர் அங்கு மிகச் சிறப்பாக விளையாடியமை அனைவரும் அறிந்ததே. எனினும், தற்போதுவரை அவர் தன் குழந்தையைப் பார்க்கவில்லை.

தொடர்ந்தும் அணியுடன்தான் தங்கியுள்ளார். இவ்வாறிருக்கையில் கோலிக்கு மட்டும் ஏன் இந்த விதிவிலக்கு. ஒரே அணியில் சமகாலத்தில் இருக்கும் இரு வீரர்களுக்கு இரு வேறு நடைமுறை எதற்கு?

**'கோலி என்றால் கொம்பா?'**

IPL

# வீங்கும் ஐ.பி.எல்!

2022ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஐ.பி.எல் தொடர் 10 அணிகளுடன் நடைபெறும் என்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் ஆண்டுப் பொதுக் கூட்டம் கடந்த வியாழனன்று இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் இந்தியத் தெரிவுக்குழு, அடுத்த வருட ஐ.பி.எல் அணிகள், இந்திய தெரிவுக்குழு மாற்றம் என்பவை தொடர்பில் பேசப்படலாம் என்று கருதப்பட்ட நிலையில் 2022ஆம் ஆண்டு ஐ.பி.எல் 10 அணிகளுடன் நடைபெறும் என்றும் மெகா ஏலத்தின் அடிப்படையில் இந்த அணிகள் தெரிவுசெய்யப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**" அளவுக்கு மிஞ்சினால் ஐ.பி.எல்லும் கசக்கும்"**

# பீலேயா? மெஸ்ஸியா?

கால்பந்தாட்ட உலகின் கடவுள் என்று வர்ணிக்கப்படும் பீலேயின் சாதனையொன்றைத் தகர்த்துள்ளார் மெஸ்ஸி. ஒரு கழகத்துக்காக அதிக கோல்களைப் பதிவுசெய்தவர் என்ற சாதனையையே பீலேயிடம் இருந்து பறித்தெடுத்துள்ளார் மெஸ்ஸி.

பீலே பிரேசிலின் சான்டோஸ் கழகத்துக்காக 643 கோல்களைப் பதிவு செய்திருந்தார்.

மெஸ்ஸி ஸ்பெய்னின் பார்சிலோனா கழகத்துக்காக 644 கோல்களைப் பதிவுசெய்துள்ளார். ஆனால் பீலே 656 ஆட்டங்களில் செய்த சாதனையை மெஸ்ஸி 749 ஆட்டங்களில்தான் செய்துள்ளார். எனினும் ஒப்பீடுகளுக்கு அப்பால் இதுவொரு மகத்தான அடைவுதான்.

**'கடவுளை வென்ற கடவுள்?'**





## அவசரமா ஒரு கடுதாசி



### முன்னாள் முதலமைச்சர் விக்கினேஸ்வரன் ஐயாவுக்கு......

சுகம் எப்பிடி எண்டு விசாரிக்கேலாத இக்கட்டான நிலைமைக்குக் கொரோனா கொண்டு வந்திட்டுது. இப்ப ஆளை ஆள் பாத்துக் கவனமா இருங்கோ எண்டு மட்டும்தான் சொல்லலாம். ஆனபடியாலை கவனமா இருங்கோ. வீசேடமா அரசியல் கொரோனா விட்டை அதி கூடிய கவனமா இருக்க வேணும். முன்னம் தமிழ் தேசியக் கூட்டமைப்புத் தங்கடை அரசியல் தேவைக்காக உங்களைத் தென்னிலங்கையிலை இருந்து இறக்குமதி செய்தவை எண்டதை ஒருக்காலும் மறக்கப்பிடாது. அதாலை நீங்கள் முதலமைச்சரா இருந்த காலப்பகுதி முழுவதும் எடுப்பார் கை பாவைப்பிள்ளையாத்தான் இருந்தனீங்கள். முதல் பாதி தமிழ் தேசியக் கூட்டமைப்பின்ரை தாளத்துக்குக் கூத்துப் போட்டனீங்கள். பிற்பாதியிலை உங்களைச் சுத்தி இருந்த வடமாகாண சபை தமிழ் அதிகாரியள் உங்களைக் கூத்துப்போட வைச்சவை. உங்கடை வடமாகாண நல்லாட்சியை ஞாபகப்படுத்த இரண்டு சின்னங்கள் இன்னும் இருக்கு. ஒண்டு எங்கை பாத்தாலும் பாதினியம் பத்தையாக் கிடக்கு. அடுத்தது இன்னும் ஓயாத அலையா அடிச்சுக் கொண்டு இருக்கிற சுன்னாக ஒயில்-கலந்த தண்ணிக் கிணறுகள். இவை மட்டுமில்லை, இன்னும் பல குளறுபடியள் கனக்கக் கிடக்கு. இருந்தும் அதை எல்லாம் சகிச்சுக்கொண்டுதான், தமிழ்ச் சனம் உங்களுக்கு வாக்குப் போட்டவை எண்டதை மறக்க வேண்டாம். உங்கடை பொட்டும் பிறையும்தான் சனத்தை மயக்கினது எண்டு ஆக்கள் கதைக்கிறவை. ஆனால் நான் அதை நம்பமாட்டன். அதை விடுங்கோ.

இப்ப இரண்டு மூண்டு நாளுக்குள்ளை பேப்பரிலை பாத்தனான். எங்களுக்காக நீங்கள் கதைக்கிறது ரியல் அட்மிரல் சரத் வீரசேகரவுக்குக் கத்திறமாதிரிக் கேக்குதாம். இதைத்தான் கலிகாலம் எண்டு சொல்லுறது. கலிகாலத்திலை தான் ஒராள் கதைக்கிறது மற்ற ஆளுக்குக் கத்திறமாதிரிக் கேக்குமாம். மஹிந்த ஜனாதிபதியா இருக்கேக்கை அரசவைக் கோமாளியா மேர்வின் சில்வாவை வைச்சிருந்தவர். இப்ப கோத்தா இவரை வைச்சிருக்கிறார் போல.

போன கிழமை சுமந்திரன் ஜெனீவாவுக்குக் கொண்டு போறதுக்கெண்டு ஒரு வரைபை உண்டாக்கினவர். அது பேப்பரிலை வந்ததுதான் தாமதம், அவரைச் சனம் திண்டு தீர்த்துப் போட்டுது. அதிலையும் ஒரு முக்கியமான விசயத்தை நீங்கள் செய்து போட்டியள். காலத்தின்ரை தேவையை அறிஞ்சு நீங்கள் செய்த எதிர்வினையைப் பற்றித்தான் ஆக்கள் கதைக்கினம். உங்கடை அந்த அறிக்கை பலரைக் கண் திறக்கப் பண்ணிப் போட்டுதாம்.. காலம் அறிஞ்சு பேசி இருக்கிறியள்.

அரசாங்கத்துக்குக் கால அவகாசம் இப்ப எத்தினை வருசம் குடுத்தாச்சு? நடந்தது இனப்படுகொலைதான் எண்டு முன்னாள் அமெரிக்கா ஜனாதிபதி ஒபாமாவரை எழுதித் தள்ளிப் போட்டினம். அதுக்குப் பிறகு பதினொரு வருஷம் தேவையோ இவை போர்க்குற்றவாளியள் எண்டு முடிவெடுக்க?

சில நேரம் உங்களை நினைக்க எனக்கு நெஞ்சிடிக்கிறது. ஏனெண்டால் சமயம் பாராமல் குழந்தைத்தனமாவும் கதைச்சுப் போடுவியள். கிளிநொச்சிச் சந்தை எரிஞ்ச அண்டு அங்கை வந்து நிண்டு கொண்டு தீயணைக்கிற கருவி எண்டு சொல்லத்தெரியாமல் “இஞ்சை அந்த ஷ...ஷ..இல்லையோ?” எண்டு கேட்டனியள்.

பொதுவா நீங்கள் தமிழ் மக்கள் சார்பிலைதான் கதைக்கிறதாகவும், பிற கட்சியளையும் அனுசரிச்சுக் கொண்ட போறதாயும் தெரியிது. அதாலை நீங்கள் அறிக்கையை எழுத முன்னம் மற்றவையளின்ரை கருத்தையும் கேட்டுக் கலந்து ஆலோசிச்சுச் செய்தால் கூட்டும் இன்னும் பலமாகுமெல்லோ. ..? அவைக்கு நம்பிக்கையும் வரும். தயக்கத்தை விட்டிட்டு மாவை, கஜேந்திரகுமாரோடையும் கதையுங்கோ. எல்லாம் தமிழரின்ர நன்மைக்காக எண்டதை மறக்க வேண்டாம்.

நன்றி

தங்கள் மேல் அதிபட்சமுள்ள

**அப்பாவி அன்னமுத்து.**